பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
பருவ வெளியீட்டுப்பகுதி
பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

264

ஆவணி
01.08.2025

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

பேராசிரியர் கு.சின்னப்பன்
பேராசிரியர் சபா.ஜெயராசா
ந.இரவீந்திரன்
கோகிலா மகேந்திரன்
ஷெல்லிதாசன்
மேரா
அ.பௌநந்தி
செய்னுலாப்தீன் நஸீரா
இதயராசன்
கந்தையா பத்மானந்தன்
கந்தையா கணேசமூர்த்தி
யுகசேனன்
கௌசி
வனிதா சேனாதிராசா
அல்.அஸூமத்
இ.சு.முரளிதரன்
சந்திரவதான செல்வக்குமார்
மொழிவரதன்
தமிழ்க்கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2025 - ஆவணி(01.08.2025)

# பொருளடக்கம்

சிறுகதைகள்
கௌசி - 08
வனிதா சேனாதிராசா - 16
அல் அஸூமத் -24

கவிதைகள்
ஷெல்லிதாசன் - 15
காரைக்கவி கந்தையாபத்மானந்தன் - 15
இதயராசன் - 15
செய்னுலாப்தீன் நஸீரா - 32
மேரா - 33
யுகசேனன் - 33
அ.பௌநந்தி - 34
கந்தையா கணேசஷமூர்த்தி - 40

கொமிக்ஸ் தொடர்
இ.சு.முரளிதரன் - 20



நூல் விமர்சனம்
சந்திரவதனா செல்வகுமாரன் - 28



தொடர் நாவல்
தமிழ்க்கவி - 37

உள் ஓவியங்கள்
கனிவுமதி

கட்டுரைகள்

தமிழ் நாடகம் மற்றும் திரைப்படங்களில் ஆண் - பெண் வேடமேற்றல், பெண் - ஆண் வேடமேற்றல், திருநங்கையர் வேடமேற்றல் ஒரு விமர்சனப் பார்வை
பேராசிரியர் கு.சின்னப்பன் - 03



சமகாலச் சிற்பக்கலை - இத்துறையில் திறனாய்வு தமிழ்ச் சூழலிற் பெருமளவு மேற்கொள்ளப்படவில்லை
பேராசிரியர் சபா.ஜெயராசா - 11



நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து - 07
ந.இரவீந்திரன் - 13

ஜீவா ஜீவரத்தினத்தின் வாழும் கவிதை - சில குறிப்புகள்
மொழிவரதன் - 19

ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும் - 03
கோகிலா மகேந்திரன் - 34

PL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

2025 ஆவணி இதழ் – 264

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**ஆசிர்வதிப்பவர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா
தில்லைநாதன் கோபிநாத்

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி – 100/= ஆண்டுச்சந்தா – 3000/=
வெளிநாடு – $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


**ஜீவநதி**
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
– பாரதிதாசன்–

# தொடரும் அவலம்

அண்மைக்காலமாக செம்மணிப்புதைகுழிகளை தோண்டும் செயற்பாடு தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. தோண்டத் தோண்ட எலும்புக்கூடுகள் வெளிப்பட்ட வண்ணம் உள்ளன. கொஞ்சம்கூட கற்பனை செய்ய முடியாதவாறு இவ்வளவு கொடூரமாக எமது இனம் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருக்கிறது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்றாவது ஒருநாள் திரும்பி வருவார்கள் என்று இப்போதும் போராட்டம் செய்து வருகின்றோம். ஆனால் செம்மணிப் புதைகுழிகளை வைத்து நோக்கும் போது இன்னும் எத்தனை எத்தனையோ இடங்களில் எம்மினம் புதைக்கப்பட்டிருக்குமோ என்ற ஏக்கத்தை அனுபவிக்கின்றோம்.

பால்மனம் மாறாத பச்சைக் குழந்தைகளைக் கூட கொன்று புதைத்த மிருகங்கள் இந்த நாட்டில் தான் வாழ்ந்திருக்கின்றன; இந்த மிருகங்கள் இப்போதும் வாழ்கின்றன. போர்க்குற்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு மனித வடிவில் உலாவும் அரக்கர்கள் தண்டிக்கப்பட வேண்டும். தமிழர்களுக்காக அரசியல் பேசும் அரசியல்வாதிகள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள் என விளங்கவில்லை. இவ்வளவு எலும்புக்கூடுகளைக் கண்ட பின்னரும் சர்வதேச நாடுகள் ஏன் இந்தப் பிரச்சினைகளில் தலையிடவில்லை. பச்சைக்குழந்தை என்ன அடிப்படையில் கொலை செய்யப்பட்டது.

எத்தனையோ போரியல் வரலாறுகளைப் பற்றி படித்து இருக்கின்றோம் ஆனால் இவ்வாறான கொடூரக் கொலைகளை நாம் இதுவரை கண்டதில்லை. எங்கடை இனம், நியாயமான கேள்வி கேட்க ஆள் இல்லாத நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அரசியல் வியாபாரிகள் பலர் நீலிக்கண்ணீர் வடிப்பவர்களாகவும் தங்கள் பதவிகளை தக்க வைத்துக் கொள்வதற்காக அறிக்கை விடும் போலிகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த படுகொலைகளை செய்தவர்கள் நீதியின் முன் நிற்பாட்டப்பட்டு உயர்ந்த பட்ச தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். ஓர் இனத்தின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும். இவ்வளவு கொடூரங்களைக் கண்ட பின்னரும் சில முகப்புத்தக கோமாளிகளும், தென்னிலங்கை அரசியல்வாதிகளும், சில மதவாதிகளும் விடும் அறிக்கைகளும் உரையாடல்களும் எரிச்சலை உண்டு பண்ணுகின்றன. மனிதனை மனிதன் தின்னும் விலங்குகள் இனங்காணப்பட்டு அவை அழிக்கப்பட வேண்டும். எம் இனத்திற்கு நியாயம் கிடைக்க வேண்டும்.

– க.பரணீதரன்


ஜீவநதி கிடைக்கும் இடங்கள் / விற்பனையில்உதவும் நல்லுள்ளங்கள்
பரணீ புத்தகக்கூடம் - நெல்லியடி
புத்தகக் கூடம் - திருநெல்வேலி
பூபாலசிங்கம் - யாழ்ப்பாணம்
பூபாலசிங்கம் - செட்டித்தெரு, கொழும்பு
அ.யேசுராசா, நா.நவராஜ், சி.ரமேஷ், கந்தர்மடம் அ.அஜந்தன்,
புத்தகப்பண்பாட்டுப் பேரவை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராசிரியர் கு. சின்னப்பன்
கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

# தமிழ் நாடகம் மற்றும் திரைப்படங்களில் ஆண்–பெண் வேடமேற்றல், பெண் – ஆண் வேடமேற்றல், திருநங்கையர் வேடமேற்றல்

## ஒரு விமர்சனப் பார்வை

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்கள் மரபுக்கலை வடிவங்கள், நாடகங்கள் மூலம் கதைகளை நிகழ்த்திக் காட்டினர். இதில் கதைமாந்தர்கள் கதைக் காக, கதை நகர்த்தலுக்காக, கதை திருப்பத்திற்காக ஆண் பெண் வேடமேற்றும், பெண் ஆண் வேட மேற்றும் நடித்தனர். நூற்றாண்டு கண்ட தமிழ்ச் சினிமாவில் தொடக்கக் காலங்களில் இந்நிலை இருந்தது.

தமிழ்த் திரைப்படங்களில் எழுபதுகளில் திருநங்கையர் சித்திரிப்பு தொடங்குகிறது. இச்சித்திரிப்பு பெரும்பாலும் ஒரே வகையாகவும் (Stereo Type) எதிர் மறையாகவும் (Negative Portrayal) இருப்பதற்கான காரணத்தை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இத்தகையச் சித்திரிப்பின் மூலம் திரைப்பட இயக்குநர் பார்வையாளர்களுக்கு உணர்த்த விரும்பும் உட்கருத்து என்ன? என்னும் கருதுகோளைக் கொண்டிருக்கிறது. இக்கட்டுரை விவரிப்பு ஆய்வு முறைமையைப் பின்பற்றி ஊடக உள்ளடக்கப் பகுப்பாய்வு அணுகுமுறையில் அமைகிறது. 1973 முதல் 2019 வரை வெளிவந்த திரைப்படங்களில் இடம்பெற்றுள்ள திருநங்கைகள் தொடர்பான சித்திரிப்புகளை முதன்மை தரவுகளாகவும், மரபு ஊடகம் தொடங்கி, நவீன ஊடகம் வரை இடம் பெற்றுள்ள சித்திரிப்பு களில் ஆய்வாளரின் பார்வைக்கு கிடைக்கப்பெற்றவைகள் துணை மைத் தரவுகளாகவும் அமை கின்றன. திரைப்படம் வெறும் பொழுதுபோக்கு கலையம்சம்



மட்டும் அல்ல. மக்களிடம் இருந்த அறியாமை, மூடநம்பிக்கை, பிற்போக்குத்தனமான கருத்துகளைப் போக்கி இருக்கிறது.

எனவே, தமிழ்த் திரைப்படங்கள் திருநங்கையரை நேர்மறையாகக் காட்சிப்படுத்துவதற்கும், பார்ப்பதற்கும் கற்றுத்தர வேண்டும் என்பது இவ்வாய்வின் முடிவாக அமைகிறது.

திறவுச் சொற்கள்: ஸ்ரீபார்ட் (கதாநாயகி) பெண்வேடம், ராஜபார்ட் (கதாநாயகன்) ஆண்வேடம், மௌனப்படம், டாக்கி (Takie), காட்சிமொழி, திரைமொழிக் குறியீடு, பார்வையாளர் கோணம்.

**முன்னுரை**

ஆரம்பக் காலத்தில் வாய்மொழி வழியாகக் கதைசொல்லி வந்த மனிதன் பின்னர் பொம்மலாட்டம், தெருக்கூத்து, நாடகம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்த்துகலை வடிவங்களின் மூலம், கதைகளை நிகழ்த்திக் காட்டினான். கி.பி.19ஆம் நூற்றாண்டில் அச்சுவழியாகக் கதைகளை வெளியிட்டான். கி.பி.20ஆம் நூற்றாண்டில் திரைப்படம் என்னும் காட்சிமொழி வழியாகக் கதைகளை வெளிப் படுத்தினான். இவ்வாறு கலைவடிவங்கள் காலந் தோறும் பல்வேறு வகைகளில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. இதில் திரைப்படம் புதிய ஒரு வெகுசன பொழுதுபோக்குச் சாதனமாக மக்களிடையே நிலை பெற்றுள்ளது. அந்த வகையில் தமிழ்த் திரைப்படங் களில் கதாபாத்திரங்கள் வழி காட்சிப்படுத்தப்பட்ட திருநங்கையர் பாத்திரப் படைப்பின் பரிமாணங்களையும் அதில் உட்பொதிந்துள்ள கருத்துகளையும் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**நாடகம்: ஆண் பெண் வேடமேற்றல்**

20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாடகத் தில் நடிப்பதும் நாட்டியமாடுவதும் கேவலமானதாகக் கருதப்பட்ட காரணத்தினால் பெண்கள் நடிப்பதற்கு முன்வரவில்லை. இதனால் ஆண்களே பெண் வேடங் களிலும் நடித்துவந்தனர். ஸ்ரீபார்ட் (கதாநாயகி) நடிகர் களில் வைத்தியநாதய்யர் வள்ளியாகவும் பரமேஸ்வ ரய்யர் அல்லியாகவும் நடிப்பதில் புகழ்ப்பெற்று விளங்கினர். இக்கால கட்டத்தில் கே.எஸ். அனந்த ராமையரும் பெண் வேடத்தில் நடித்துவந்தார். டி.எஸ். கண்ணுபிள்ளை கண்ணகி, காளி, நல்லதங்காள் முதலிய கதாநாயகி வேடங்களில் சிறப்பாக நடித்தவர். பாவலரின் "கதரின் வெற்றி" நாடகத்தில் கதாநாயகி மரகதமாக கே. முத்துசுவாமி நடித்தார்.

அக்காலத்தில் சிறுவர்களே பெண் வேடத் திற்கு பொருத்தமானவர்களாகக் கருதப்பட்டு நடிக்க வைக்கப்பட்டனர். சிவாஜி கணேசனுக்கு சுமார் 9 வயது நடக்கும்போது "சங்கீத கோவலன்" நாடகத்தில் மாதவியாகவும் கண்ணகியாகவும் இரட்டை வேடத்தில் நடித்தார். "இழந்த காதல்" நாடகத்தில் வேணியாகவும் "பதிபக்தி" நாடகத்தில் சரஸ்வதியாகவும் நடித்தார். இவர் "கிருஷ்ண லீலை", "ரத்னாவளி" போன்ற நாடகங் களில் பெண் வேடங்களில் நடித்து வந்த அதே கால கட்டத்தில் ஏ.பி. நாகராஜனும் பெண் வேடத்தில் நடித்து வந்தார். இவ்வாறு நாடகங்களில் பெரும்பாலும் சிவாஜி கணேசனுக்கு பெண் வேடங்களே கிடைத்தன. "மனோகரா" நாடகம் நடத்தியபோது அதில் வசந்த சேனை, மனோகரா அவரது அம்மா பத்மாவதி என ஒரே நேரத்தில் பல வேடங்களில் தோன்றி விதவிதமான முக பாவனைகளை வெளிகாட்டியதால் ராஜபார்ட் (கதா நாயகன்) ஆக நடிப்பதற்கு இவருக்கு வாய்ப்பு கிடைத் தது. நாடகத்தில் ராஜபார்ட்டாக (கதாநாயகனாக) நடித்தபோது அவருக்கு கதாநாயகியாக எம்.ஜி.இராமச் சந்திரன் பெண் வேடத்தில் நடித்திருக்கிறார் என்கிறது தமிழ் சினிமா வரலாறு (2014).

**திரைப்படம்: ஆண் -பெண் வேடமேற்றல்**

மௌனப்படம் திரையிடும்போது திரை யரங்கில் நடனம் போன்ற சில இதர நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. இப்படி நடனமாடிய ரத்னாபாய் சகோதரிகள் சினிமாவுக்கு வந்தனர். ஆனாலும் தொடக்கக் காலத்தில் சினிமாவில் நடிக்க நடிகைகள் கிடைக்காமல் படத் தயாரிப்பாளர்கள் சிரமப்பட்டனர். நாடகக் கம்பெனிகளில் பல நடிகைகளிருந்தாலும் முழுக்க முழுக்கப் பெண்களே இருந்த கம்பெனிகளும் உண்டு. ஆனாலும் சினிமாவில் நுழைய அவர்களுக்குத் தயக்கம். இதற்கு காரணம் சினிமாவில் கேமராமுன் நின்றால் ஆயுள் குறைந்துவிடும், அழகு கெட்டுவிடும், சினிமாவில் நடிப்பது பாவச்செயல் என்ற பிரச்சாரத்திற்குப் பயந்து பெண்கள் யாரும் நடிக்க முன் வரவில்லை (பாலபாரதி, 2012) இதனால் தேவதாசிப் பெண்களும் ஆங்கில இந்தியப் பெண்களுமே இந்திய சினிமாக்களில் நடித்தனர் (சிவன், 2012).

இந்தியா பிலிம் கம்பெனியின் திரௌபதியாக ஒரு ஆங்கிலேயப் பெண்தான் நடித்தார். உள்ளூர்ப் பெண்கள் சினிமாவில் நடிக்க முன்வராதது முக்கிய காரணம் (தியோடர் பாஸ்கரன், 2004). ஆனால் இப்படி வந்தவர்களும் வெகுசிலரே. நடிகைகளுக்குப் பஞ்சம் தொடர்ந்து இருந்து வந்தது. இதைச் சமாளிக்க கதாநாயகியைத் தவிர மற்ற பெண் வேடங்களில் ஆண்களே நடித்தனர். இந்தப் பழக்கம் டாக்கி (Takie) யுகத்திலும் நீடித்தது.

இயக்குநர் தாதாசாகிப் பால்கே ஒரு நாள் சிற்றுண்டிச் சாலை ஒன்றில் ஒவலூன்கே என்ற இளைஞரைக் கண்டார். அவர் ஒரு சமையற் கலைஞர். அவரை "ராஜா அரிச்சந்திராவில்" (1913), கதாநாயகி யாக பெண் வேடத்தில் நடிக்க வைப்பதற்கு தயார்செய்து நடிக்க வைத்தார் (பசுமைக்குமார், 2008). தமிழில் முதல் மௌனப் படமான "கீசகவதம்"(1917) திரைப்படத்தில் கீசகனாக இராஜீ முதலியார் நடிக்க, சைந்திரியாக ஜீவரத்தனம் பெண் வேடத்தில் நடித்தார் (பசுமைக்குமார், 2008).1916-1934 வரை தென்னிந்தியா வில் சுமார் 124 மௌனப் படங்கள் எடுக்கப்பட்டன. பிரிட்டிஷ் அரசு காலத்தில் திரைப்படத் தணிக்கை 1918 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் சச்சரவிற்கு உள் ளாக முடியாத புராணக் கதைகளையும் மாயாஜாலக் கதைகளையுமே தயாரிப்பாளர்கள் தேர்ந்தெடுத்தனர். டி.கே.எஸ். சகோதரர்களில் ஒருவரான டி.கே.முத்துசாமி 1935 இல் வெளிவந்த "மேனகா" படத்தில் பெருந்தேவி என்ற பெண் வேடத்தில் பிராமண விதவைப் பெண்ணாக நடித்தார். வேலைக்காரனின் மனைவியும் மகளுமாக சுப்பையா, திவாகரன் நடித்தார்கள். சி.என்.அண்ணா துரையின் "வேலைக்காரியில்" (1949) ஹரிஹரதாசுக்கு ஒரு சிஷ்யன் சுந்தரகோஷ் பகலிலே ஆண், இரவிலே பெண் வேடமேற்றிருப்பதைக் காணலாம் (அறந்தை நாராயணன், 2008).

"கல்யாணராமன்" (1979) திரைப்பட கதைப்படி முதலில் கல்யாணம் பாத்திரத்தை இயக்குநர் பெண் தன்மையுள்ள ஆணாக அதாவது திருநங்கையாக உருவாக்கத் தீர்மானித்திருந்தார். அவள் வாசல் கூட்டிப் பெருக்கி கோலம் போடுவாள். பெண்களோடு சேர்ந்து பாண்டியாடுவாள். குழாயடிக்குப் போய் வாயாடுவாள் எனப் பெண்களுக்கே உரிய குணங்களுடன் உருவாக் கத்தான் திட்டம் இருந்தது (பாலபாரதி, 2012). பிறகு கமலஹாசன் தனக்கே உரிய பாணியில் அப் பாத்திரத்தை வேறுவிதமாக மாற்றி அமைத்துக் கொண்டார். "பில்லா" (1980) திரைப்படத்தில் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெறும் கழைக்கூத்தாடி கதாப்பாத்திரம் கிட்டதட்ட திருநங்கை மாதிரி வடிவமைக்கப் பட்டிருந்தது. நடை, உடை, பாவனைகளில் நடிகர் ரஜினிகாந்த் ஒரு திரு நங்கையாக அடையாளம் காட்டினார் (பாலபாரதி 2012).

**திரைப்படம்: பெண் - ஆண் வேடமேற்றல்**

தமிழ் சினிமாவில் ஆண்வேடத்தில் நடித்த முதல் பெண்மணி கே.பி.சுந்தரம்பாள். நந்தனார் திரைப் படத்தில் நந்தனாராக நடித்தார். ஸ்ரீபார்ட் (கதாநாயகி) வேடத்தில் மட்டுமில்லாமல் ராஜபார்ட் (கதாநாயகன்) வேடத்தில் முருகனாக, அர்ச்சுனனாக நடித்திருந்தார் (பாலபாரதி, 2012) டி.பி.ராஜலட்சுமி, எம்.எஸ்.சுப்பு லட்சுமி, எம்.ஆர். சந்தானலட்சுமி, எம்.எஸ்.விஜய பாஸ்கர் ஆகியோர் கிருஷ்ணராக, என்.சி.வசந்த கோகிலம், யு.ஆர்.ஜீவரத்தினம் போன்றோர் நாரதராக நடித்தனர். “வீரமணி” (1939) திரைப்படத்தில் மருதா சலம் என்பவரிடம் கடன்பட்டிருந்த சித்தப்பா தர்ம லிங்கம் தான்பட்ட கடனுக்காகக் கிழட்டு மருதாசலத்துக்குத் தன் அண்ணனின் மகள் சாந்தாவை கல்யாணம் செய்துகொடுக்கச் சம்மதித்து விடுகிறார். இந்தச் சூழ்நிலையில் சாந்தா புரட்சிகாரியாகிறாள். ஆணுடை தரிக்கிறாள் தன் பெயரை மாதவன் என்று மாற்றிக் கொள்கிறாள். (அறந்தை நாராயணன், 2007) பொன்முடி (1949) திரைப்படத்தில் காபாலிகர்களிடம் சிக்கிக்கொண்ட பொன்முடியை காதலி பூங்கோதை ஆணுடை அணிந்து வணிகர் கூட்டத்துடன் சென்று மீட்டு வருகிறார் (பாரதி, 2013)

“கன்னியின்” காதலி திரைப்படத்தில் ஆணுடையில் மாறுவேடமிட்டு வரும் இளம் பெண்ணை (மாதுரிதேவி) இன்னொரு இளம் பெண் (அஞ்சலிதேவி) ஆணாகக் கருதி காதலிக்கிறாள். “கலங்காதிரு மனமே” என்ற திரைப்படப்பாடலில் ஆண் வேடமிட்ட பெண்ணொருத்தி இன்னொரு பெண்ணுக்கு ஆறுதல் சொல்லும் காட்சி இடம் பெறுகிறது. வாழ்க்கை திரைப் படத்தில் வைஜெயந்திமாலா ஒரு காட்சியில் ஆண் வேடத்தில் வந்து டி.ஆர். ராமச்சந்திரனை ஏமாற்றுவார். பெண்கள் ஆண் வேடத்திலும் ஆண்கள் பெண் வேடத்திலும் நடிக்கிற கேளிக்கூத்துகள் நாடக மேடையோடு ஒழியட்டும் சினிமாவுக்கு வேண்டாம் என்று ந.ராமரத்தினம் தினமணியில் ஒரு கட்டுரை எழுதினார். (அறந்தை நாராயணன், 2008) இத்தகைய எதிர்ப்புச் சூழலின் காரணமாகத் தமிழ் சினிமாவில் இப்போக்கு மெல்லக் குறைய ஆரம்பித்தது.

**திருநங்கையர் சித்திரிப்பு**

மேடை நாடகத்தில் முக்கிய கதாபாத்திரங்கள் உடைமாற்ற வேண்டிய போதோ மேடையமைப்பு மாற்ற வேண்டிய போதோ, கோமாளி மேடையின் முன் பகுதிக்கு வந்து நகைச்சுவை செய்வார். இந்த நகைச் சுவைப் பகுதி கதையோடு ஒட்டியிருக்க வேண்டிய தில்லை. ஆனால் மக்கள் இதனை ஏற்றனர், ரசித்தனர். திரைப்படங்களில் இந்த அம்சம் கதையோடு எந்தவித பொருத்தமுமின்றி தனி நகைச்சுவைக் காட்சிகளாக இணைக்கப்படுகின்றன. தமிழ்த் திரைப்படங்களில் நகைச்சுவை என்பது அனேகமாக பெண்களை அவமதிப்பதாகவும் உடற்குறைபாடு உள்ளவர்களை கேலி செய்வதாகவும் ஊழியம் செய்பவர்களை அடி முட்டாளாகச் சித்திரித்து சிரிப்பு மூட்டுவதாகவும் இருந்துவருகிறது.

தொடக்ககால நாடகங்களிலும் திரைப்படங் களிலும் பெண்கள் நடிக்க முன்வராத காரணத்தினால் ஆண்கள் பெண் வேடங்களில் நடித்துள்ளனர். அவ்வாறே பெண்களும் கதைக்காக, கதை நகர் தலுக்கா, கதை திருப்பத்திற்காக, ஆண் வேடங்களில் நடித்திருக்கிறார்கள். “குடியிருந்த கோயில்” (1973) திரைப்படத்தில் நடிகர் நாகேஷ் கதை நகர்தலுக்காக சில காட்சிகளில் வயதான பெண் வேடத்தில் நடித்திருப்பார். “வீரபாண்டிய கட்டபொம்மன்” (1979) திரைப்படத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரன் சுந்தரலிங்கம் ஒரு சில காட்சிகளில் பெண் வேடத்தில் நடித்திருப்பார். மேலும் அந்தப்படத்தில் வெள்ளையம்மாளும் அவளது தோழியும் ஆண் வேடத்தில் நடித்திருக்கிறார்கள். இந்தப் போக்கானது மெல்லக் குறைந்து தமிழ்த்திரைப்படங்கள் திருநங்கை யரை எழுபதுகளில் சித்திரிக்க ஆரம்பித்தன. ஆனால் இஃது எதிர்மறையாகவே இருந்து வருகிறது. 1977 இல் வெளிவந்த "பாலாபிஷேகம்" திரைப்படத்தில் திரு நங்கைகள் குறித்த நகைப்புக்குரிய சொல்லாடலும் 1981 இல் வெளிவந்த "ஒருதலைராகம்" திரைப்படத்தில் நகைப்புக்குரிய பாடல் காட்சியும் இடம் பெற்றிருந்தது. இதன்பிறகு இதே பாணியிலேயே தமிழ்த் திரைப்படங் களில் திருநங்கையர் சித்திரிக்கப் படுகின்றனர்.

தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர்க்கு முதன்மைநிலை, இரண்டாம்நிலை மற்றும் துணை நிலைக் கதாப்பாத்திரங்கள் அளிக்கப்படவில்லை. சிலபொழுதே வந்து போகிற வலுவற்ற காட்சிகளில் கதைக்குப் பொருத்தமின்றி சித்திரித்து வந்தனர். முதன் முதலில் பொம்மலாட்டம் (2008) திரைப்படத்தில் இயக்குநர் பாரதிராஜா ஆந்திர மாநிலத்தின் தேவதாசி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஆணை தேர்ந்தெடுத்து கதாநாயகியாக நடிக்க வைத்திருக்கிறார். ஆனாலும்



இவர் படத்தின் இறுதியில் ஆணாக அறியப்படுவதாகக் கதை அமைந்திருக்கிறது. திருநங்கையரின் வாழ்வி யலை "பேசும் நர்த்தகி" (2011) திரைப்படத்தில் முதன் முதலில் திருநங்கை கல்கி முதன்மை பாத்திரத்தில் நடித்து படம் முழுவதும் இடம்பெறுகிறார்.

"பம்பாய்" (1955) திரைப்படத்தில் முதன் முதலில் குணச்சித்திர வேடத்தில் திருநங்கை நடித்திருக்கிறார். பிறகு திருநங்கையரின் நியாயத்தை அழுத்தமாகச் சொல்லிய "காஞ்சனா"(2011) திரைப் படத்திலும் "ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" (2013) திரைப் படத்திலும் திருநங்கையர் குணச்சித்திர வேடத்தில் நடித்திருக்கின்றனர். "விருதகிரி" (2010) திரைப்படத்தில் பாலினப் பெண்ணாக மாறிய திருநங்கையரை நடிக்க வைத்துள்ளனர். அவ்வாறே "எனக்குள் ஒருவன்" திரைப்படத்தில் ரகசியா, பிரியங்கா, வைஷ்ணவி ஆகிய திருநங்கையர் நடித்திருக்கின்றனர். தற்போது திரு நங்கையரை ஏதேனும் ஒரு காட்சியிலாவது காட்டிவிடும் போக்கு மெலெழுந்து வருகிறது. "அரவான்" (2012) "ஜோதா அக்பர்" (2008) ஆகிய படங்களில் அரண் மனைப் பணிப் பெண்ணாகவும் "கடவுள்" திரைப் படத்தில் பூஜாவைக் காப்பாற்ற அடிவாங்கும் தோழி யாகவும் திருநங்கையர் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

திருநங்கையர் பாத்திரத்தை வைத்து கேலி, கிண்டல், நையாண்டி, செய்வதால் பெரும்பாலும் ஆண்களையே நடிக்கப் பயன்படுத்தி வருகின்றனர். சில திரைப்படங்களில் முகமழித்து சேலை அணிந்த ஆண் களோடு நடிக்கவைப்பதும் நடனமாடவைப்பதும் நகைச் சுவைப்படுத்துவதும் தொடர்ந்து கொண்டுள்ளன. தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் சித்திரிப்பு இயல்பு தன்மையில் இல்லை. பெண்ணிய உடல்மொழி மற்றும் பண்புகளைக் கொண்டிருந்தாலும் பெண் ணுடை அணியாமல் ஆணுடையிலே இருப்பவர்கள் "கோத்திகள்" என்று அழைக்கப் படுகின்றனர். இவர்கள் பெரும்பாலும் வீட்டிலேயே தங்கி வாழ்பவர்களாக இருக் கின்றனர். இவர்களை சமூகவெளியில் மக்கள் இரண்டாங் கெட்டான், ஆண்மையற்றவர்கள், பொட்ட, ஓம்போது என்று அழைக்கின்றனர். திருநங்கையர் எல்லா நிலையிலும் முழுப் பெண்ணாக மாறிய போதிலும் கர்ப்பபையில்லாததால் இவர்களால் குழந்தைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. அதனாலேயே சமூகவெளியில் திருநங்கையரை ஆண்மையற்றவர்கள் என்று குறிப்பிடும்போக்கு உள்ளது.

பால்மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மாறிய பாலினப் பெண்ணாகியத் திருநங்கையர் யாரும் மீசை வைத்துக்கொள்வதில்லை. தம் உடல் முழுவது முள்ள முடியையும் நீக்கிவிடுகின்றனர். எல்லா நிலை களிலும் முழுப் பொண்ணாகவே மாறிவிடுகின்றனர். "பணக்காரன்" (1990) திரைப்படத்தில் மீசை வைத்த பெண் வேடத்தில் முதன்மைப் பாத்திரம் சில காட்சி களில் இடம்பெறும். "பிரியமானவளே" (2000) திரைப் படத்தில் மீசை வைத்த பெண்ணாகக் கனவில் தோன்றுவதும், "ஜெயம்" (2003) திரைப்படத்தில் நான் மீசை வைச்ச ரோசா என்ற பாடலும் இடம்பெறுகிறது. "நாட்டாமை" (1994) திரைப்படத்தில் மார்பு பகுதி, கைகளில் உள்ள அடர்த்தியான ரோமங்கள் நீக்கப் படாமலேயே பெண் வேடம் இடம்பெற்றுள்ளது.

திருநங்கையர் எப்போதும் பெண் உடைக்கு மிகுந்த மரியாதை அளிப்பவர்கள். அதனை ஒருபோதும் அலட்சியப்படுத்த மாட்டார்கள். "அவ்வை சண்முகி" (1996) திரைப்படத்தில் நடுத்தர வயதுப் பெண் பாத்திரம் ஏற்று நடிக்கும் நடிகர் கமலஹாசன் ஜாக்கெட் அணிந்திருப்பதும் ஆணுடையின் மேல் சேலை மட்டும் அணிவதும் "கில்லி" திரைப்படத்தில் பாவாடை மட்டும் அணிந்து கொள்வதும் நடனக் காட்சியில் சேலை அவிழ்த்துப் போடுவதும் நான் பெண் அல்ல ஆண் என்பதை பார்வையாளர்களுக்கு உணர்த்த முற்படு கின்றன.

"எங்க ஊரு காவல்காரன்" (1988) திரைப்படம் தொடங்கி "ஐ" (2015) திரைப்படத்தைக் கடந்து பார்த்தோமேயானால் மிகைப்படுத்தப்பட்ட உடல்மொழி, உடை, ஒப்பனை, அணிகலன்கள், கரகரப்பான ஆண் குரல், தனி வண்ணம், குறிப்பிட்ட காட்சி அமைப்பு, தனித்துப் பிரித்துக் காட்டும் பின்னணி இசை, இசைக் கருவிகள் பயன்பாடு, பாடல், சிறப்பு சப்தங்கள், அடை யாளங்கள், குறியீடுகள் ஆகியன திரைமொழிக் குறியீடு களாகத் தொடர்கின்றன.

சிறப்புக் கோணத்தில் கட்டமிட்டுக் காட்டப் படுவதைக் காட்டிலும் விகார தோற்றமுடையவராகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் திருநங்கையர் திரைப்படங்களில் காட்டப்படுகின்றனர். ஒரே விதமான காட்சி அமைப்போ அல்லது தூரக் காட்சியோ இடம் பெறுகிறது. திரைப்படங்களில் திருநங்கையர் கதைமாந்தர் கோணத்தில் சித்திரிக்காமல் பார்வையாளர் கோணத்திலே சித்திரிக்கப்படுகின்றனர். பாலியல் ரீதியாகச் சீண்டுதல், தொடுதல், கண்ணடித்துப் பாலியல் உறவுக்கு அழைத்தல், உதட்டைக் குவித்துப் பாலுணர்ச்சியை தூண்டுதல், மார்பு தூக்கலாக தெரிதல், ஆடையை அடிக்கடி சரி செய்தல், வசீகரமான தனி ஒலியெழுப்புதல், மாமா என்று ஆண்களை உறவுமுறை சொல்லி அழைத்தல் என சித்திரிப்புகள் இடம் பெறுவதால் பார்வையாளர்களும் திருநங்கையரை சமூகவெளியில் அதே கோணத்திலே பார்க்கின்றனர், கேலிசெய்கின்றனர்.

பெண்தன்மையுள்ள உடல்மொழியில் காணப்படும் முதன்மைப் பாத்திரப் படைப்பு "வரலாறு" (2008), "விஸ்வரூபம்" (2012) "ஆதிபகவன்" (2014) ஆகிய படங்களில் கதை திருப்பத்திற்காக ஆண்மையை நிரூபிப்பதைக் காணலாம். திருநங்கையர் என்றால் கடை கேட்பவர்கள், பிச்சையெடுப்பவர்கள், பாலியல் தொழில் செய்பவர்கள் என்கிற எண்ணமே சமூகவெளியில் இருக்கிறது. "நண்பேண்டா" (2014) திரைப்படம் இதனைச் சித்திரிக்கிறது. "வானம்" (2011) திரைப்படத்தில் சுயதொழில் செய்பவராகவும், "ஐ" (2016) திரைப்படத்தில் அழகுக் கலைஞராகவும் திருநங்கையர் சித்திரிக்கப்படுகின்றனர். "துள்ளாத மனமும் துள்ளும்" (1999), "ராவணன்" (2010) ஆகிய படங்களில் திருநங்கையர் வீட்டிலே தங்கி வாழ்பவர்களாக சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்த் திரைப்படங்களில் 85 விழுக்காடு திரைப்படங்கள் திருநங்கையரை சோம்பேறியாக, கடின மனம் படைத்தவராக, மற்றவர்களோடு சண்டை போடுபவராக, சமூக விரோதிகளாக, திருடுபவராக, குழந்தைகளைக் கடத்துபவராக எதிர்மறை ஆளுமைப் பண்புடையவராகவே சித்திரிக்கின்றன. நேர்மறை ஆளுமைப் பண்புகளான தன்னம்பிக்கை உடையவராக, கூட்டுறவு மனம் படைத்தவராக, சமூகப் பொறுப்புள்ளவராக, இரக்கப் பண்பு உடையவராக, தலைமைப் பண்பு உடையவராக, கடின உழைப்பாளியாக இருப்பதைத் தமிழ் திரைப்படங்கள் சித்திரிப்பது இல்லை. தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் தொடர்பான சித்திரிப்புகள் எழுபதுகளில் தொடங்கினாலும் 2001-2010 காலக்கட்டத்தில்தான் 30 க்கும் அதிகமான திரைப் படங்கள் வெளிவந்துள்ளன. இருப்பினும் பெண்ணாகப் பிறந்து மாறிய பாலின ஆணாக (Transgender men) மாறியவர்களைப் பற்றி எந்தப் படத்திலும் சித்திரிப்பு இடம்பெறவில்லை. திருநங்கையர் இடம்பெற்றுள்ள படங்களில் 80 விழுக்காடு திரைப்படங்களுக்கு "யு" சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திரைப்படங்களில் நல்லவனாக நடிப்பவன் நல்லவன் என்றும் கெட்டவனாக நடிப்பவன் கெட்டவன் என்றும் மக்கள் கருதுகின்றனர். இதற்கு முக்கியக் காரணம் திரைப்பட ரசனை மக்களிடையே வளராதது தான். சினிமா மக்களின் மனோபாவத்தையும், நடத்தையையும் நிர்ணயிப்பதில் பெரும் அங்கம் வகிக்கிறது. (மாரி மகேந்திரன், 2007).

1992 ஆம் ஆண்டு சிதம்பரம் காவல் நிலையத்தில் கைதியாக இருந்த தன் கணவரைச் சந்திக்கப் போன பத்மினி என்ற பெண் அங்கிருந்த காவலர்களால் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்பட்ட கொடூரமான தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டபோது, நான் எம்.ஜி.ஆரின் ரசிகை, நிறைய எம்.ஜி.ஆர் படத்தைப் பார்ப்பேன். சினிமாவுல பெண்களுக்குத் துன்பம் வரும் போது ஓடிவந்து அவர் காப்பாத்தின மாதிரி என்னையும் யாராவது வந்து காப்பாத்தமாட்டார்களான்னு கத்தினேன், கதறினேன் எவரும் காப்பாத்த வரவில்லை என்று வேதனையுடன் தெரிவிக்கிறார் (தீக்கதிர் நாளிதழ், 13.08.1994). இப்படி திரைமொழிக்கு அறிவைத் தாண்டி, உணர்வைத்தொடும் ஒரு தன்மை உண்டு என்பது தெரியவருகிறது.

**முடிவுரை**

திரைப்படம் வெறும் பொழுதுபோக்கு கலையம்சம் மட்டுமல்ல மக்களிடம் இருந்த அறியாமை, மூடநம்பிக்கை, பிற்போக்குத் தனமான கருத்துகளைப் போக்கி இருக்கிறது. ஆனால் இன்று பெருவாரியான படங்கள், துரத்தல், பாட்டு, குழு நடனம், வன்முறைக் காட்சிகள், பாலியல் கிளுகிளுப்பு என்ற பழைய பாதை



யிலே செல்கின்றன. பொழுது போக்கு கலையம்சங்களில் மக்கள் அதிகம் நேசிக்கும் கலை ஊடகமாகத் திரைப்படம் திகழ்கிறது. நம் அன்றாட வாழ்வின் எல்லாப் பரிமாணங்களையும் சினிமா ஆக்கிரமித்துள்ளது. எனவே, தமிழ்த் திரைப்படங்கள் திருநங்கையரை நேர்மறையாகக் காட்சிப்படுத்துவதற்கும் பார்ப்பதற்கும் கற்றுத்தர வேண்டும்.

**உசாத்துணை**


அறந்தை நாராயணன். (2007) சுதந்திரப் போராட்டத்தில் தமிழ் சினிமா. நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். சென்னை.

அறந்தை நாராயணன். (2008) தமிழ் சினிமாவின் கதை. நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட். சென்னை.

சிவன். (2012) நமது சினிமா. 1912-2012. கவிதா வெளியீடு. சென்னை.

தியோடர் பாஸ்கரன். சு.. (2004) எம் தமிழர் செய்தபடம். உயிர்மை பதிப்பகம். சென்னை.

பசுமைக்குமார். (2008) இந்தியத் திரைப்பட மேதைகள். சாருபிரபா பப்ளிகேஷன்ஸ். சென்னை.

பாலபாரதி. (2012) தமிழ் சினிமா (தொகுதிஐ.ஐஐ.ஐஐஐ) 1931-2011. நக்கீரன் பப்ளிகேஷன்ஸ். சென்னை.

பாரதி. கே.. (2013) தமிழ் சினிமாவில் பெண்கள். விகடன் பிரசுரம். சென்னை.

மாரி மகேந்திரன். (2009) நமக்கான சினிமா. விம்சிபுக்ஸ். சென்னை.

-------, (2014) தமிழ் சினிமா வரலாறு. தினத்தந்தி பதிப்பகம். சென்னை.

------, சிதம்பரம் பத்மினி பேட்டி. 13.08.1994. தீக்கதிர் நாளிதழ். சென்னைப் பதிப்பு. சென்னை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌசி

# முதுகுவலி



இது என்ன கலவரம் என்று அறியாது ராஜியினுடைய ஆசிரியை சித்ரா ஒருமுறை சமையலறையை நோட்டமிட்டாள். சமையலறையினுள் தரையில் போடப்பட்ட மரத்தாலான சிறிய வாங்கிலே அதாவது மட்டக்களப்புத் தமிழில் குத்தி என்பார்கள். குந்தி இருப்பதனால் குத்தி என்ற பெயர் மருவி வந்திருக்கலாம். அந்தக் குத்தியிலே அமர்ந்திருக்கும் பார்வதியை அணைத்தபடி ராஜி அழுது கொண்டிருக் கின்றாள். அவளுக்கு பார்வதி ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கின்றாள். வெளியிலே விஷயம் தெரியக் கூடாது என்பதில் பார்வதி கண்ணும் கருத்துமாக இருந்தாள்.

"என்ன இது ராஜி. எழுந்திரு. சும்மா கண்ணைக் கசக்கிக் கொண்டு. எதுவாக இருந்தாலும் போல்டாக சமாளிக்கக் கூடிய தைரியம் வேண்டும். சும்மா அழுது வடித்துக் கொண்டு..." சித்ரா ஆசிரியத் தொனியில் ராஜியினுடைய கோழைத்தனத்தைத் தடுக்க முயற்சித்தாள். பார்வதியும்

"அது வந்து மகள்." என்று எதையோ இரகசியமாகச் சொல்ல முயற்சித்தாள்.

"அம்மா விடுங்கள்" என்று சொல்லியபடி ராஜியை அழைத்துக் கொண்டு தன்னுடைய அறைக்குள் வந்தாள். இங்கு என்ன புதினம் நடக்கிறது என்று கண்களைச் சுருக்கியபடி சித்ராவினுடைய அண்ணன் சிவாவும் மனத்துக்குள் கேள்விக்குறியுடன் விலகிப் போனான். அறைக்குள் போடப்பட்ட மேசைக்கு அருகில் ராஜியை இருக்க வைத்த சித்ரா அவளுடைய இரண்டு கைகளையும் ஒரு நிமிடம் தன்னுடைய இரண்டு கைகளுக்குள்ளும் புதைத்தாள். இருவரும் அமைதியாக இருந்தார்கள்.

"இங்கே பார் ராஜி" என்று தன்னுடைய இரண்டு கைகளாலும் தன்னுடைய முகத்துக்கு நேரே ராஜியின் முகத்தை நிறுத்தி "என்ன நடந்தது என்று அழாமல் தைரியமாகச் சொல்லு. நான் உனக்கு இருக்கிறேன் என்பது உனக்குத் தெரியும். எதுவாக இருந்தாலும் மனத்தைத் தைரியப்படுத்திக் கொள்" என்றாள்.

"எல்லாம் என்னால்தான் ரீச்சர்.... என்று அழத் தொடங்கினாள். பாடசாலை வாழ்க்கையிலே சித்ராவுக்கு மாணவர்கள் என்றால் கொள்ளைப் பிரியம். வகுப்பு நேரத்தைத் தவிர நண்பியாகவே அவர்களுடன் பழகுவாள். எதுவாக இருந்தாலும் மாணவர்கள் அவளிடம் பகிர்ந்து கொள்வார்கள். பாடசாலை மூடிய வுடன் சித்ராவுடன் சேர்ந்து சித்ரா வீட்டிற்கு வந்து விடுவார்கள். சித்ராவினுடைய குடும்பத்தினருடன் உறவு முறை சொல்லிப் பழகுவார்கள். அதனாலேயே பாட சாலைக்கு வந்த ராஜி பாடசாலைக்குப் போகாமல் ஓடி வந்து பார்வதியைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதிருக்கின்றாள். ராஜி தன்னை சாகவசப்படுத்திக் கொண்டு, "ரீச்சர் நான் அந்தப் பாலத்தின் ஒரு பாதை இருக்கிறதல்லவா? அந்தப் பாதையால் ஸ்கூலுக்கு வருகின்ற போது ஒருவன் சைக்கிளில் வந்து எனக்கு முன்னே நின்றான். உடனே என்னைக் கட்டிப்பிடித்து என்னுடைய நெஞ்சை அமுத்திப் பிடித்தான் ரீச்சர். நான் சத்தம் போட்டுக் கத்தியவுடன் சைக்கிளில் ஏறி ஓடிப் போயிட்டான்" என்று மீண்டும் அழத் தொடங்கினாள்.

இயற்கை பெண்ணுக்கு மட்டும் அற்புதமான மார்பகம் என்னும் ஒரு கருவியை உடலுக்குள் புதைத் திருக்கின்றது. பிறக்கும் போதே பிள்ளைகள் தாய்ப்பால் என்னும் கட்டுச் சோற்றுடனேயே பிறக்கின்றார்கள். மார்பகத்திலே சுரக்கின்ற தாய்ப்பாலே குழந்தைக்குப் பூரண சத்துணவாக இருக்கின்றது. பால் சுரக்கும் தாய் தன்னுடைய மார்பகத்தின் மூலம் பசியால் துடிக்கும் மாற்றான் குழந்தைக்கும் பாலூட்டிப் பசியாற்றியிருக் கின்றாள். தான் வளர்க்கும் ஆட்டுக்குட்டி பசியால் தவித்தபோது தன் மார்பகத்திலிருந்து சுரக்கும் பாலைக் கறந்தெடுத்து அந்த ஆட்டுக்குட்டிக்கு ஊட்டியிருக் கின்றாள். ஊறிக் கொண்டிருக்கும் பாலைப் பிள்ளைக்குக் கொடுக்க முடியாது மார்பகத்தில் கட்டியாகிப் போகும் பாலை வெளியே எடுக்க முடியாது தாய் படும் வேதனையை அந்தப் பெண் மட்டுமே அறிவாள். கருப்பைக்கு நிகராகக் கண்ணியமாகப் பாதுகாக்க வேண்டிய பெண்ணுக்கே சொந்தமான உறுப்பு. அதைத் தூக்கிக் கட்டி மறைத்து வைத்துப் போற்றிப் பாதுகாக்கும் தெய்வீகத் தன்மை பொருந்திய மார்பகத்தை இவ்வாறான காம வெறி பிடித்த பொறுக்கிகளையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரப் பொருளாகக் காட்சிப்படுத்தும் வியாபாரி களையும், திரைப்படத் தயாரிப்பாளர்களையும் மனத்துக்குள் நொந்தபடி

"முதலில் அழுகையை நிறுத்து. அவன்தான் ஓடிப் போய்விட்டானே. அவனே ஒரு கோழை. இதை நினைத்து அழுகின்ற நீ அவனை விடக் கோழை. இது ஒரு பெரிய விடயம் இல்லையே. அவனில் குற்றம் சொல்ல முடியாது ராஜி. தாயின் முலையில் தாய்ப்பால் குடிக்க முடியாது போன பிள்ளைகளுக்கு இவ்வாறான உணர்வு ஏற்படுவது இயற்கை. சரியான வளர்ப்பிலே வளராத பிள்ளைகள் அதனைக் கட்டுப்படுத்த முடியாது இவ்வாறான தகாத காரியங்களைச் செய்கின்றார்கள். இனிமேல் அந்தப் பாதையால் வருவதைத் தவிர்த்துக் கொள். அப்படி அவசரமாக வரவேண்டும் என்றால், யாரையாவது துணைக்கு அழைத்துக் கொண்டு வா. இப்போது இளையவர்கள் முதியவர்கள் என்ற பேத மில்லாமல் பெண்களைக் கண்டால், ஏதோ வித்தியாச மான பிறவிகளைக் காண்பது போல அவர்களுடைய உறுப்புக்களை விநோதமாகப் பார்க்கின்ற காலமாக இருக்கின்றது. என்னிடம் சொல்லிவிட்டாய் அல்லவா. இதோடு மறந்துவிடு. உனக்கு ஒன்றுமே நடக்கவில்லை" என்று சொல்லி ராஜியின் கண்களில் இருந்து வடியும் கண்ணீரைத் துடைத்து விட்டாள்.

"இல்லை ரீச்சர். எனக்கு நெஞ்சு பெரிதாக இருப்பதனாலேயே இப்படி எல்லாம் நடக்கிறது. ஸ்கூலில் கூட என்னைக் கேலி பண்ணுகின்றார்கள். நான் மார்பகத்தை இறுக்கி பிரா போட்டு யூனிபோர்ம் போட்டாலும் அது வெளியே பெரிதாகவே தெரிகிறது. எனக்கு மூச்செடுப்பது கூடக் கஷ்டமாக இருக்கிறது. எனக்கு முதுகு வலி கூட இதனால் வருகின்றது. எனக்கு சரியான மனஅழுத்தமாக இருக்கிறது ரீச்சர்" என்று அழத் தொடங்கினாள்.

இலேசாகச் சிரித்தபடி "ராஜி. மார்பகங்கள் பெரிதாக வர வேண்டும் என்று போட்டொக்ஸ் அடிக் கிறார்கள். அவர்களிடம் இதைச் சொன்னால் சிரிப்பார் கள். உனக்கு இயற்கையாகவே பெரிதாக இருக்கின்றது. இதற்கு ஏன் இவ்வளவு மனக்கிலேசம். பெண்கள் புடவை அணியும் போது மார்பகம் பெரிதாக இருந்தால், எவ்வளவு அழகாக இருக்கும். அதை ஏன் பெரிதாகக் கணக்கெடுக்கிறாய்?

"இதைத்தான் அம்மாவும் சொல்வா. ஆனால், என்னுடைய கவலையை யாரும் புரிந்து கொள்ள மாட்டார்கள். ஒரு புறம் வலி. இன்னுமொரு புறம் எனக்கு அவமானம். போய்ஸ் மட்டுமல்ல ரீச்சர்! கேர்ள்ஸ் உம் என்னைக் கேலி செய்கின்றார்கள் வெளியில் சொல்ல முடியாது வீட்டுக்குப் போய் அழுது இருக்கின்றேன் இறந்து விடுவோமா என்று கூட நினைத்திருக்கிறேன்" என்றாள்.

"என்ன பைத்தியக்காரத்தனம். அதற்கும் இன்று நடந்ததற்கும் சம்பந்தம் இல்லை. நீ கைனகோ மாஸ்டியா கேள்விப்பட்டிருக்கிறாயா? அது ஆண் களுக்கு மார்பகம் பெரிதாக இருப்பது. இது அவர் களுக்கு எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார். இப்படி யான ஆண்கள் யாருடனும் ஒட்டிப் பழக மாட்டார்கள். வெட்கப்பட்டு தனித்தே இருப்பார்கள். தம்முடைய இயல்பான குணத்தைவிட மூர்க்கமாகச் சிலவேளை நடந்து கொள்வார்கள். இதைப் புரியாதவர்கள். அவர் களைக் குறை சொல்லுவார்கள்.

ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவ வயது மாற்றம் ஏற்படுகின்ற போதுதான் இவ்வாறு வருகின்றது. ஈஸ்ட் ரோஜன் ஹோர்மோன் சுரப்பிலேயேதான் இவ்வாறான பிரச்சினைகள் பெண்களுக்கு வருகின்றது. ராஜி நீ மன அழுத்தத்துக்கு உள்ளாவதனால், உன்னுடைய படிப்புத் தான் பாதிக்கப்படப் போகின்றது. பெண்களுக்கு எல்லா வற்றிலும் தான் பிரச்சினை. முக்கிய பிரச்சினை ராஜி! உடல் கூறுகள். ஆதிகாலத்தில் யாரும் ஆடையே அணியவில்லை. பிறகு இலைகுழைகளினால், அதன் பின் தோலினால் இடுப்புக்குக் கீழே மறைத்தார்கள். மேற்பகுதி மறைக்கும் வழக்கம் இருக்கவில்லை. காலப் போக்கில் மார்புக்கச்சை அணிந்து பின் தான் மேலாடை அணிகின்ற வழக்கம் வந்தது. எங்கெல்லாம் மறைக்கப் படுகின்றதோ அங்கெல்லாம் பார்க்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படும். ஆனால், எதையும் பெரிதாகப் போட்டு மனத்துக்குள் கவலைப்பட்டால், எமக்குத்தான் பிரச்சினை. இதையெல்லாம் அப்படியே அலட்டிக் கொள்ளாமல் விடுவதுதான் நல்லது. இப்போது பார் நீ அழுது குழம்பியதாலேயே தான் எல்லோருக்கும் தெரிந்தது. சரி விடு சொல்லிவிட்டாய் தானே இப்போது மனப்பாரம் குறைந்தது. வா ஸ்கூலுக்குப் போவோம்" என்று சித்ரா எழுந்தாள்.

"அது என்ன ரீச்சர். பெண்களை விரும்புகின்ற பெண்களை எடுத்துக் கொள்ளுங்கள். லெஸ்பியன் பெண்களுக்கு இவ்வாறு பெண்களின் மார்பகங்களைப் பார்க்கும் போது ஈர்ப்பு வருவதில்லையே. அது என்ன ஆண்களுக்கு மட்டும் இப்படிக் கேவலமான எண்ணங் கள் வருகின்றன" என்று கேட்டாள்.

அவள் கேட்டவுடன் சித்ரா விழுந்து விழுந்து சிரித்தாள். "அது ஆண்கள் பெண்களைப் போல மனத்தை அடக்கி வைக்கும் பக்குவம் கொண்டவர்கள் இல்லை. கோயிலினுள் மேலாடை இல்லாமல் போகின்ற ஆண்களைப் பார்த்த எந்தப் பெண்களுக்கும் உணர்ச்சி தூண்டப்படுவதில்லையே. ஆண்கள் அப்படித்தான். அவர்களுக்குப் புத்தி புகட்ட முடியாத காரணத்தாலேயே தண்டனை கொடுத்துத் தண்டிக்கின்றார்கள்"

பேசிக் கொண்டிருந்தபோது சித்ராவின் மேசைக்கு மேலே மார்பகம் தெரியுமாறு ஆடை அணிந்த ஒரு பெண்ணின் படம் இருந்தது. அதைப் பார்த்த சித்ராவை

"பார்த்தீங்களா ரீச்சர் உங்களுடைய கண்களும் ஓட்டமெற்றிக்கா அதைத்தானே பார்க்கிறன" என்றாள்.

சிரித்துக் கொண்டே சித்ராவும்

இந்த விளம்பரதாரர்கள் பெண்ணைப் போகப் பொருளாக இவ்வாறான படங்களிலே காட்ட விரும்பு கின்றார்கள். புலவர்கள், கவிஞர்கள், பெண்களின் உறுப்புக்களை விமர்சித்தும் பாடல்கள் எழுதுவதை பெண்ணியவாதிகள் கண்டிக்கின்றார்கள். தமிழிலே எமக்குக் கிடைக்கும் முதல் இலக்கியங்களான சங்கப் படல்களில் மட்டும் 100 க்கும் அதிகமான இடங்களில் மார்பகங்களைக் கொங்கைகள் என்று வர்ணிக்கின்ற பாடல்கள் இருக்கின்றன. கம்பன் தன் பாடல்களில் அள்ளிக் கொட்டி இருக்கின்றான். 84 இடங்களில் வர்ணித்து எழுதி இருக்கின்றான். அவர்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளதை ஊதினார்கள். இப்போது இருப்பவர்கள் ஊதியதைப் பெருப்பிக்கின்றார்கள். உதாரணத்திற்கு கம்பராமாயணத்திலே ஒரு இடத்தில் ராஜி!

தண்டுடைய தாமரைமலர் போன்ற தனது கண்களையும் சக்கரவாளங்கள் தோன்றும் தனது கொங்கைகளையும் நெடிய வில்லினையுடைய இராமன் நோக்கவும் அவனது தோள்களைச் சீதை நோக்கினாள் என்று கம்பர் பாடியிருக்கின்றார். இங்கு எதற்காக அந்த கொங்கை வர வேண்டும். காமக்கண் கொண்டவனா இராமன்? அவன் கண்கள் அங்கேயா போக வேண்டும்? மறு பக்கமாகச் சிந்திக்கும் போது ஆண்களுக்குத் தோள் அழகு என்றால், பெண்களுக்கு மார்பகம் அழகு என்று வைத்துக் கொள்வோம். இருந்தாலும் பெண்களின் உறுப்புக்களை எழுத இந்தக் கம்பனுக்கு யார் அனுமதி கொடுத்தது? அதை அந்தக் காலத்தில் இதைத் தட்டிக் கேட்க ஆட்களே இருக்கவில்லை போலும். அதுவும் சில இடங்களில் மிக விரசமாகவும் எழுதியுள்ளார். இதனாலேதான் பிற்காலத்தில் கம்பரசத்தில் அண்ணாத்துரை எல்லாவற்றையும் பிரித்து மேய்ந்திருக்கிறார்.

"இப்போது பெண்ணியல்வாதிகள் ஆடைகள் எல்லாவற்றையும் கழட்டிவிட்டுத் திரிய வேண்டும். அப்போதாவது இந்த ஆண்களின் ஆவேசம் அடங்குதா என்று பாரப்போம் என்கின்றார்கள்" என்று ஆவேசம் கொண்டு கதைத்தாள் சித்ரா.

மற்றைய நண்பிகள் போல இறுக்கமான ஆடைகளை அணிய முடியாத தன்னுடைய ஏக்கத்தையும். மற்றவர்கள் முன்னே கலகலப்பாகக் கூச்சமில்லாமல் போய் நிற்க முடியாது அவள் தவிப்பதையும், கேலிகளினால், நண்பர்களுடன் சர்வசாதாரணமாகப் பழக முடியாத தன்னுடைய நிலைமைகளையும் எண்ணிய ராஜி

"என்னுடைய பிரச்சினைக்கு இன்னும் தீர்வில்லையே ரீச்சர்" என்றாள்.

அடிக்கடி முதுகுவலி என்று பாடசாலைக்கு ராஜி வராத காரணத்தை இப்போதுதான் சித்ரா உணர்ந்தாள்.

'நாளை டொக்ரிடம் போவோம். நீ விரும்பினால், அறுவைச் சிகிச்சை செய்யலாம். ஜெர்மனி போன்ற நாடுகளில் மருத்துவக் காப்புறுதி நிலையத்தில் உன்னுடைய பிரச்சினையைச் சொன்னால், பாடசாலையில் அவமதிப்பு என்று கூறி சத்திரசிகிச்சைக்கான முழுச்செலவையும் காப்புறுதி நிறுவனமே பொறுப்பெடுப்பார்கள். இங்கே அப்படியெல்லாம் எங்கே செய்யப் போகின்றார்கள். மனிதர்களின் மனநிலையைப் பற்றிச் சிந்திக்கின்ற நிறுவனங்கள் இங்கே எங்கே இருக்கின்றன? நீ எதையும் பற்றி யோசிக்காதே. அது ஒன்றும் பிரச்சினை இல்லை. நான் உன்னைக் கூட்டிக்கொண்டு போகின்றேன். இனிமேல் இது என்னுடைய பொறுப்பு. ஆனால், இதற்கெல்லாம் கவலைப்பட மாட்டேன் என்று எனக்கு உறுதிமொழி தர வேண்டும்" என்ற போது ராஜி சித்ராவைக் கட்டி அணைத்தாள். பெரிய சுமை உடனே இறங்கியது போன்ற உணர்வு அவளுடைய உள்மனத்துக்குள் தோன்றியது.

வெளியே வந்த இருவரிடமும் என்ன நடந்தது என்று பார்வதி கண்களால் சைகை காட்டினாள். "கதைப்பது போலக் கதைத்தால் சொல்லுக்கு வலிமை இருக்கின்றது அம்மா. ஒரு சொல் வெல்லும் ஒரு சொல் கொல்லும் என்று சும்மாவா சொன்னார்கள். இல்லையா ராஜி"

"ஜெஸ் ரீச்சர்" போயிற்று வாறேன் அம்மா என்று சொல்லியபடி இருவரும் சிரித்தபடி பாடசாலை நோக்கி நடந்தார்கள். என்ன நடந்தது என்று தெரியாமல் சிவா மீண்டும் எப்படித்தான் இந்த சித்ரா இந்த ஸ்ருடன் ஸை மயக்குவதற்கு மந்திரம் செய்து வைத்திருக்கின்றாளோ தெரியாது என்று முழித்தான்.

---

மு.அநாதரட்சகனின் அகவை 70 ஐ முன்னிட்டு ஜீவநதியின் 450 ஆவது வெளியீடாக "மு.அநாதரட்சகன் வாழ்வும் படைப்பும்" நூல் அவரது இல்லத்தில் 14.7.2025 சோ.தேவராஜா தலைமையில் வெளியிடப்பட்டது. கருத்துரைகளை சி.ரமேஷ், சி.விமலன், க.தணிகாசலம், கொற்றை பி. கிருஷ்ணானந்தன், இ.இராஜேஸ்கண்ணன், கலாநிதி சு.குணேஸ்வரன் ஆகியோர் வழங்கினர். வெளியீட்டுரையை க.பரணீதரனும் ஏற்புரையை நூலாசிரியரும் வழங்கினார்கள்.



வி.கே.றொபின் அவர்களின் "அவளின் மொழி" கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழா 2025.7.5 அன்று தேசிய கலைஇலக்கியப் பேரவையின் முருகையன் கேட்போர் கூடத்தில்க.சீலன் தலைமையில் நடைபெற்றது. வெளியீட்டுரையை க.பரணீதரன் நிகழ்த்தினார். கருத்துரைகளை க.தணிகாசலம், மாதவி உமாசுதசர்மா, ஶ்ரீலேக்கா பேரின்பகுமார் ஆகியோர் நிகழ்த்தினார்கள். ஏற்புரையையும் நன்றியுரையையும் நூலாசிரியர் நிகழ்த்தினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சபா.ஜெயராசா

# சமகாலச் சிற்பக்கலை

## இத்துறையில் திறனாய்வு தமிழ்ச் சூழலிற் பெருமளவு மேற்கொள்ளப்படவில்லை

சமகாலச் சிற்பக் கலை, தொழில் நுட்பச் செயற்பாட்டிலும் செய்பொருள்களிலும் நிகழ்த்தப்படும் தீவிர பரிசோதனைகளை அடியொற்றி மேற் கிளம்பியுள்ளது.

புடைப்புச் சிற்பம், சேர்க்கைச்சிற்பம் செதுக்கற் சிற்பம், வார்ப்புச் சிற்பம் என்றவாறான மரபுவழி சிற்ப வகைகள் தொழில்நுட்பம் மற்றும் பரிசோதனைகள் வழியாக புதிய நீட்சிகளை எடுக்கின்றன.

உயரம், அகலம், ஆழம், என்ற முப்பரிமாணங் களைக் கொண்ட கலை வடிவமே சிற்பம். மண், மரம், கல், உலோகம், நார்ப்பொருட்கள், எலும்பு, முதலாம் திண்மப்பொருள்களைக் கொண்டே சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. சமகாலத்தில் பனிக்கட்டிகளை அடிப்படையாகக் கொண்ட சிற்ப ஆக்கமும் வளர்ச்சி யடைந்து வருகிறது. கழிவுப் பொருள்களில் இருந்தும் சிற்ப ஆக்கம் நிகழ்த்தப்படுகிறது.

செவ்வியல், இயற்கையியல், நடப்பியல், சோசலிச நடப்பியல், புதுமையியல், பின்னைப்புதுமை யியல், புனைவியல், மனப்பதிவியல், முதலாம் பல்வேறு கலைச்சிந்தனைகளின் தொடர்ச்சியோடும் வளர்ச்சி யோடும் இணைந்த வகையில் சிற்பக் கலை பன்மை நிலை ஏற்றங்களைப் பெற்று வருகிறது.

நவீனத்துவத்தின் வளர்ச்சியோடும் பல்வேறு நுட்ப முறைகளோடும் பொருள்களோடும் சிற்பங்களை ஆக்குதல் நிகழத் தொடங்கியுள்ளது.

வழிபாட்டுச் சிற்பம், காவற்சிற்பம், குறியீட்டுச் சிற்பம், தொடர்பாடற் சிற்பம், மாய வித்தைச் சிற்பம், பிணி நீக்கும் சிற்பம், இன அடையாளச் சிற்பம், அல்மானிடச் சிற்பம், நினைவகப் பதிவுச்சிற்பம், சடங்குச் சிற்பம், அலங்கோலச்சிற்பம், தொன்மச் சிற்பம், அறிவூட்டற் சிற்பம் முதலான தொன்மையான வகைகள் சமகாலச் சிற்ப ஆக்கங் களிலும் தொடர்ந்த வண்ணமுள்ளன.

ஐரோப்பிய மறுமலர்ச்சி காலத்தில் உரு வாக்கம் பெற்ற சிற்ப ஆக்கத் தொடர்ச்சி சமகாலத்தி லும் நீடித்த வண்ணமுள்ளது. காலமாற்றத்தோடு நிகழும் பண்பாட்டு அசைவியமும் புதியபொறிகளும் சிற்பக் கலையோடு இணைந்து கொள்கின்றன.

சிற்பம் என்பது ஒரு பனுவல்(Text). அது பல்வேறு வாசிப்புக்களைக் கொண்டது. சமகாலத்தில்



பன்மை வாசிப்பு எழுச்சி கொள்ளத் தொடங்கியது. சிற்பம் கனதியான உரையாடலை உருவாக்கி நனவிலி மனத்தைத் துளாவி நிற்கும் என்ற உளவியற்கருத்து மேலும் உயர்வு பெறத் தொடங்கியுள்ளது.

கியுபிசம், வடிவக கணித அருவவியல், சுப்பமற்றிசம், கொன் ஸ்ரக்ரிவிசம், டாடாயிசம், போர்மலிசம், பியூச்சறிசம், பொப் ஆட், மினமலிசம், லாண் ஆட், இன்ஸ்ரோ ஸ்பெக்ஸன் ஆட் முதலியவை சமகாலத்தில் பரவலுற்று வருகின்றன.

நடப்பியலைப் பிரதி நிதித்துவப்படுத்தும் ஒரு புதிய வழிமுறையாக கியூபிசம் அமைந்துள்ளது. நடப்பியலைப் பெய்தலே அதன் நோக்கம். அது எப்படி இருக்கின்றது என்பதை வெளிப்படுத்துவது முன் னெடுப்பு ஆகாது என்ற அழுத்தமும் உண்டு.

வடிவ கணித அடிப்படையில் அருவ வடிவங்களை ஏற்படுத்தல் சிற்பவியலில் மேற்கொள்ளப் படுகிறது. சதுரம், வட்டம், முக்கோணம் முதலான அடிப்படைகளில் உருவங்கள் வடிவமைக்கப்படுகின்றன.

தூய்மையான கலைச் சிந்தனையுடன் அருவக் காட்சிகளை எளிமையமான வடிவகணித ஏற்புடைமை யோடு வடிவமாக்குதல் சுப்ப மாற்றிசத்தில் மேற் கொள்ளப்படுகிறது.

கொன்ஸ்ரக்ரிவிசம் என்ற கட்டுமானவியல் ஓவியம் மற்றும் சிற்பக்கலைகளில் சமகாலத்தில் நீளப்பதிவுற்று வருகின்றது. புறவய உண்மைகளை வடிவங்களால்(Forms) வெளிப்படுத்துவதும், அகவய உண்மைகளை உருவங்களால்(shapes) புனைவதும் முன்னெடுக்கப்படுகின்றன. வடிவங்கள் முப்பரிமாண அழுத்தங்களைக் கொண்டவை. உருவங்கள் இரு பரிமாண அழுத்தங் களைத் தருபவை.

கட்டுமைச் சிற்பங்களை உருவாக்குவதற்கு கைத்தொழிற் பொருட்களாகிய கண்ணாடி, பிளாஸ்டிக் எனப்படும் நெகிழி மற்றும் உலோகங்கள் பயன்படுத்தப் படுகின்றன. சமகாலத்தின் நடப்பியற் பண்புகள் இவற்றால் வெளிப்படுத்தப்படுகின்றன.

டாடா இசையும் நவீன முதலாளியத்தையும் உயர் குடியினரது பண்பாட்டையும் நிராகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுகின்றது. பொறிமுறையான அழகியல் அவர்களால் வெளிப்படுத்தப்படுகிறது. கலையின் முழுமையான விடுதலையை அவர்கள் வலியுறுத்துகின்றனர். மார்சல் டச்சமின் "நீர் ஊற்று" என்ற சிற்பம் டாடா இசத்தின் இயல்பை வலியுறுத்தும் படைப்பாகும்.

சிறுநீர் கழிக்கும் தொட்டியை நீர் ஊற்று வடிவமாக அவர் உருவகப்படுத்தினார்.

போர்மலிசம் என்ற வரன்முறையியலும் சம காலச்சிற்பக்கலையில் நீடு பரவலுற்றுள்ளது. எவ்வாறு வடிவம் உருவாக்கப்படுகிறது எவ்வாறு அது காட்சி தருகிறது என்பதை ஊடுருவி நோக்கவல்ல சிற்பமாக அது அமைகிறது. காண்பியப் பண்புக்கே அங்கு முதன்மை தரப்படுகிறது.

பியூச்சரிசம் என்னும் எதிர்காலக்கலை, இருபதாம் நூற்றாண்டில் எழுச்சி கொள்ளத் தொடங்கி யது. தொழில் நுட்பம், நவீனத்துவம், விரைவு பெறும் நகர்ச்சியும் நுகர்ச்சியும் இந்தக்கலையாக்கத்தில் இடம் பெறுகின்றன. பழைமை நிராகரிப்புக்கு உள்ளாக்கப் படுகிறது. நவீன உலகின் வலுவெழுச்சி சிற்பங்களில் வனைவு பெறுகிறது.

சிற்பத்தில் புதிய கண்டுபிடிப்புக்களை நிகழ்த்து தலும் புறவயநிலையில் தரிசனங்களை வளர்தல் குறிக் கோள்களாகக் கொள்ளப்படுகின்றன. நவீன வினைப் பாட்டையும் அசைவையும் வெளிப் படுத்துவதற்கு உடைவுபட்ட வடிவங்களும் கூர்மைப்பட்ட கோவை களும் பியூச்சரிசத்தில் எடுத்தாளப்படுகின்றன.

"பொப்" சிற்பம் என்பது நவீன வெகுசனப் பண்பாட்டின் வெளிப்பாடுகளுடன் இணைந்தது. உயர் கலை மற்றும் தாழ்கலை என்ற எல்லைகளை அது தகர்த்து விடுகின்றது. தைரிய மூட்டும் வடிவங்கள் நிறங்கள், மீள்உரைப்பு, நகைச்சுவைப்பாங்கு, முதலி யவை சிற்பத்தில் எடுத்தாளப்படுகின்றன.

நுகர்ச்சியாளர் படிமங்கள், விளையாடலைப் பொதிந்த நுட்பவியல்கள், சமூகத்தைத் திறனாய்வுக்கு உட்படுத்தும் வடிவங்கள் முதலியவற்றை உரு வாக்குதல் "பொப்"கலையின் பண்புகளாகின்றன. சமூகத்தைத்துடிப்பான வடிவங்களுக்குள் கொண்டு வருதல் மேற்கொள்ளப்படுகின்றது வெகுசனப்பண் பாட்டின் உசாவலாக அவ்வகைச் சிற்பங்கள் அமை கின்றன.

"மிசிமலிசம்" என்ற சிற்றியலும் சமகாலச் சிற்பக்கலையில் எடுத்தாளப்படுகின்றது. எளிமையான வடிவங்களுக்குள் கருத்தைக் கொண்டு வருதல் தேவையான கேத்திரகணித வடிவங்களைப் பயன் படுத்துதல், பொருள்களின் இயற்பியல் நிலைவரத்துக்கு முதன்மை தருதல், கைத்தொழிற் பொருள்களைப் பயன்படுத்தி ஆக்கம் மேற்கொள்ளல் முதலியவை சிற்றியல் படைப்புகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

தமக்கு முன்னால் இருப்பவற்றைப் படைப்புக்கு உட்படுத்தல், புறநிலை நடப்பியலைப் புலப்படுத்துதல் முதலியவை அவர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. தேவையற்ற கவனக் கலைப்பான்கள் தவிர்த்து விடப்படுகின்றன.

"லான்" கலைப்படைப்பில் சீனர்களின் சிந்தனை அடித்தளமதாகின்றது. "லான்" என்று சீன மொழிச் சொல்லின் பொருள் ஓக்கிட் மலர். தமிழில் இது மந்தாரை என்று அழைக்கப்படும். நாளாந்த வாழ்வின் பல்வேறு கோலங்கள் சிற்பமாகவும் உயிரோட்டமாகவும் சித்திரிப்புக்கு உள்ளாக்கப்படுகின்றன. சிற்பம் என்ற முன்னைய வரையறைகளை மீறி உலோகத் தகடுகளால் உருவங்களைச் செய்தலும் முன்னெடுக்கப்படுவதைக் காணலாம்.

"இன்ரோஸ் பெக்கஸன்" கலை என்பது அகநோக்கல்கலை என்றும் குறிப்பிடப்படும். கலைஞரது மனத்துக்குள்ளே நிகழும் எண்ணங்கள், உணர்வுகள், அகநிலை அனுபவங்கள், அகநிலை எறிவுகள் முதலிய வற்றுக்குச் சிற்ப வடிவம் கொடுக்கப்படுகிறது. தன் னிலைக் கண்டு பிடிப்புகள் சிற்ப வடிவம் பெறுகின்றன. ஒருவரது மனம் அவருக்கே உரிய அகவய அளவீடு களைக் கொண்டது. அது சிற்ப வடிவை எடுக்கின்றது.

தமிழ்சூழலில் அண்மைக்காலமாகக் கோயிற் சிற்பக் கலை அதீத வளர்ச்சி கொண்டு வருகிறது. கோபுரச்சிற்பங்கள், வழிபாட்டுச் சிற்பங்கள், வாகனச் சிற்பங்கள், மஞ்சச் சிற்பங்கள், தேர்த்தள சிற்பங்கள், என்றவாறு சிற்ப ஆக்கங்கள் பெருமளவில் நிகழ்த்தப்படு கின்றன. கருங்கல், சுண்ணக்கல், உலோகம் (ஐம் பொன்), வெள்ளி, மரம், முதலிய அடிநிலை ஊடகங்கள் சிற்ப அக்கத்துக்குப் பயன்படுத்தப்படுகின்றன. கோபுரச் சிற்பங்கள் சீமெந்தினாலும் ஆக்கப்படு கின்றன.

அவ்வகைச் சிற்பங்கள் மரபு தழுவியே ஆக்கப் படுகின்றன. உறுப்பளவுகள் வரையறுக்கப்பட்ட அளவு களில் மேற் கொள்ளப்பட வேண்டும். புராண மாந்தரும் கதைகளும், கடவுளரும் சிற்பமாக வடிவமைக்கப் படுகின்றனர். கைலாசவாகனத்தில் பெருவடிவில் இராவணனது சிலை மரத்தினால் வடிவமைக்கப்படும். ஊர்வனவும் விலங்குகளும், பறவைகளும் சிற்பமாக்கப் படுகின்றன. சிற்பமாக்கல் ஒரு கலையாக மட்டுமன்றி, சடங்காகவும் நிகழ்த்தப்படுகிறது.

புராணக்கதையுரைப்பின் குறியீட்டு வடிவங் களாக அவை அமைகின்றன. அவை பிரதிநிதித்துவப் பாடாக மட்டும் அமையவில்லை. ஆன்மிக உணர்வெழு கைக்கும் வழியமைக்கின்றன. நிறைகுடமும், தாமரை யும், தூய்மை, அழகு வளப்பெருக்கு, தெய்வீகம் ஆகியவற்றை குறியீட்டுப்படுத்துகின்றன.

சமகாலத்தைய பிறிதொரு வளர்ச்சி, வீதியின் நீட்சியில் ஆலயங்களுக்குரிய நுழைவாயிலையும் அதற்குரிய சிற்பங்களையும் அமைத்தல். அதனை ஒரு புதிய வளர்ச்சி என்றே குறிப்பிடவேண்டும். அது பக்திக் குரிய சின்னமாகவும் அந்தஸ்துக்குரிய சின்னமாகவும் அமைகிறது. சமகாலத்தில் இடம்பெற்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சி, யாழ்ப்பாணப்பல்கலைக்கழக இராமநாதன் கட்புல மற்றும் அவைக்காற்றுத்துறையில் சிற்பம் ஒரு கற்கை நெறியாக ஆரம்பிக்கப்பட்டிருந்தலாகும். அதன் தெறிப்பாகப் பல்வேறு பெரும் ஆளுமையினரின் சிற்ப நிலை நிறத்தல் நிகழத் தொடங்கியுள்ளது.

சமகால சிற்ப வளர்ச்சி பன்மைநிலைகளிலே பல்வேறு புலக்காட்சிகளையும் அனுபவங்களையும் உள்வாங்கி ஆக்கங்கள் நிகழ்த்தப்படுகின்றன. அறிவுப் பகிர்வு, அனுபவப் பகிர்வு, மற்றும் அழகியற் பகிர்வோடு மட்டும் சிற்பம் நின்று விடுவதில்லை. எதிர்மறையான சமூகத்தை அடியோடு மாற்றியமைக்கும் சமூக வலுவூட்டலில் சிற்பங்களுக்கும் வகிபாகம் உண்டு.

சிற்பம் என்பது அசையாப்பொருள் அன்று. அது உயிர்ப்பு வடிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ந. இரவீந்திரன்

# நேற்றில் கரைந்தோடும் இன்றிலிருந்து



7

பன்னிருவர் நாங்கள் கந்தையா வாத்தியாரைச் சந்திக்கப் போயிருந்தவேளை சாய்வு நாற்காலியில் படுத்தவாறிருந்தார் உடல் நலக்குறைவு ஏற்பட்டதில் சில நாட்கள் வீட்டில் ஓய்வெடுத்தவாறு இருந்த நிலையிலும் எங்களைக் கனிவுடன் வரவேற்றுக் கதைகேட்கத் தயாரானார். மடத்துக்கு அவர் வந்து விளக்கேற்றிப் பூசை செய்ய இயலாமல் இருக்கும் இது போன்ற நாட்களில், அனைவராலும் அன்ரி என அழைக்கப்படுபவரான அவரது இளைய மனைவி மன்றத்தில் வந்து நாளாந்த வழிபாட்டு செயலொழுங்குகளை மேற்கொள்வார். அவரும் வருவதற்கு இயலாத வேளைகளில், நான்கு குழந்தைகளைப் பெற்ற பின்னர் இளம் வயதில் இறந்துவிட்ட முதல் மனைவி வழியில் கிடைத்த மூத்த மகன் வந்து மடத்தை இயக்கிச் செல்வார். முன்னவர் விட்டுச் சென்ற அந்த நான்கு பிள்ளைகளும் சிறு குழந்தைகளாக இருந்த சூழலில் அவர்களை வளர்க்கும் பொறுப்புடன் இளையவராகக் கந்தையா வாத்தியாரின் இணையராக ஆகியிருந்த அன்ரிக்கும் மூன்னு பிள்ளைகள் பின்னர் பிறந்திருந்தனர். அவர்களில் முதலிருவர்களான சிவமும் அம்பலமும் எங்களது சமவயது ஆண்கள் என்ற வகையில் மன்றத்தில் சேர்ந்து இயங்கினார்கள் - மடத்தைப் பார்க்கும் பொறுப்பு வந்தமையாத "விளையாட்டுப் பிள்ளைகள்" இவர்கள்!

இந்த ஆரம்பக் கட்டத்தில் எங்களைப்போல் "தன் நாமம் கெட்டுப்" பெற்ற "மன்றம்" என்ற நாமத் தரிப்பு சிவத்துக்கோ அம்பலத்துக்கோ ஏற்படாதிருந் திருக்கலாம் அப்போது வந்து போகிறவர்களாக இருந்த இருந்தார்கள் என்ற அடிப்படையில் அவர்கள் வாயிலாக எங்களது பிரச்சினையின் சில காரணிகளைக் கந்தையா வாத்தியார் அறிந்திருக்கலாம் தவிர, சமூக ஊடாட்ட அக்கறைமிக்கவரான அவரது அவதானிப்பிலேயே எங்களுக்கான நியாயங்களை உணர்ந்து கொண்டிருப்பதற்கான வாய்ப்புத் தான் அதிகம். மன்ற அதிகாரத் தரப்பினர் தன்னிடம் வந்து சொன்னவற்றை அப்படியே ஏற்கும் குருட்டுத்தனம் அற்றவராக, எமது பக்கத்து நியாயப்பாடுகளை அக்கறையுடன் கந்தையா வாத்தியார் செவிமடுத்தார்.

நாங்கள் விலகி இருப்பதிலான சரி, பிழை என்பது குறித்த எந்தவொரு கருத்துக் கூறலுக்கும் அவர் முனையவில்லை. இடையிட்ட சின்னஞ்சிறு கேள்விகளுடன் கதையின் முழுப் பரிமாணங்களையும் அவர் கேட்ட பாங்கு எமக்கான பெரும் திருப்தியாக அமைந்திருந்தது. அனைத்தையும் உள்வாங்கி நிறைவாக்கிய பின்னர் முத்தாய்ப்பாகக் கந்தையா வாத்தியார் சொன்ன இந்த வார்த்தைக் கோர்வைகள் வெறும் வசனங்கள் அல்ல, எங்களைச் செப்பனிட்டுச் செதுக்கிய அரிய மந்திரச் சொற்கள்:

"மன்றத்தில நடந்த விசயங்களில ஆரில கூடுதலான பிழை இருந்தது, எது சரி என்றது இப்ப முக்கியமில்லை. மன்றமென்று இவ்வளவு காலமும் உங்களுக்குள்ளை இருந்த ஒற்றுமை தான் உங்களுக்குரிய பலமான அடையாளம். அதைப் பாதுகாத்து வளர்க்கிற பொறுப்பு உங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்குது. நடந்ததைப் பற்றி இரண்டு தரப்பும் பின்னாலை உங்களுக்குள்ளையே ஏதோவொரு கணிப்புக்கு வரலாம் இப்ப மன்றத்தில நீங்கள் போய் இணைஞ்சு திரும்பவும் அதே ஒற்றுமையோடை இயங்குகிறது தான் ஊருக்கும் - உங்களுக்கும் நல்லது!"

சாதாரண மனிதராக இருந்திருப்பின் எங்களுக்குள் முரண்பட்டு மோதிக்கொண்டிருந்த இரு பகுதியினர் இடையே தொடர்ந்து குரோதங்களை வளர்த்து மன்றத்தைக் காணாமல் ஆக்கியிருக்க இயலும். பிரிந்தவர்களாக நாங்கள் தனிவழியில் போயிருந்தால் ஓரிரு வருடங்களில் சந்திக்க இருந்த உயர் தரப் (ஏ/எல்) பரீட்சை எங்களைப் பொதுத் தளத்தில் இருந்து காணாமல் ஆக்கியிருக்கும். அவர்களும் தனித்தனி வளர்ச்சிக்கான மூர்க்கத்தில் முனைந்தவர்களாகத் தாமும் ஒவ்வொரு பக்கமாகச் சிதறி மன்றத்தைக் காணாப் பொருளாக்கி இருப்பர். ஏற்பட்ட அந்த உடைவினை அப்படியே நீடிக்கவிட்டு வலுப்பெற அனுமதித்து இருப்பின் மேற்கொண்டு ஒவ்வொருவரும் தனியாட்களாகும் வரை பிளவுகளைப் பெருக்க ஏற்றவர்களாகவே அனைவரும் இருந்தோம்.

அந்தவகையில் மன்றம் உருவாகுவதற்கு இடம் விட்டதோடு மட்டுமன்றி, மீண்டும் மன்றத்தில் இணைந்து செயற்பட்டவர்களாக "மன்றம் எனும் பண்போடு" உருக்குறுதி மிக்க கட்டமைப்பைச் சாத்தியப்படுத்திய ஆளுமையுமாக கந்தையா வாத்தியார் திகழ்ந்துள்ளார் என்ற அம்சம் வெளித்தெரியாத வண்ணம் எங்களுக்குள் ஆழப்பதியலாயிற்று. சுகமடைந்த பின்னர் நாளாந்தம் வீட்டுக்குச் சென்று திரும்ப அவசியமில்லாமல் மடத்திலேயே இரவிலும் தங்க ஆரம்பித்தார். சாப்பாட்டை சிவமோ அம்பலமோ கொண்டுவந்து கொடுப்பதுடன் அவர்கள் இருவரும் தங்கிப் படிப்பைக் கவனித்தனர். அவர்களது குடும்பச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழலின் வறுமைப் பிடியைச் சவாலாக எடுத்துப் பொறியியலாளராக சிவமும் வைத்தியத் துறையில் அம்பலமும் முன்னேறியவர்களாக வளர்ந்தது மட்டுமன்றிக் காலகதியில் அவர்களும் முழு அளவான மன்றமென ஆகியிருந்தனர்.

கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ்களுக்குரிய சாதாரண தர - உயர் தரப் (ஓ/எல்., ஏ/எல்.) பரீட்சைகளை முகங்கொண்டவாறு தான் கழகம், மன்றம் என நாங்கள் புடமிடப்பட்டு வளர்ந்தோம். ஏற்கனவே சட்டத் துறைப் பட்டப் படிப்புக்காக பல்கலைக் கழகத்தினுள் நுழைய இருந்த வாய்ப்புடன் மன்ற உருவாக்கத்தில் பங்கெடுத்த தேவர் கொழும்புக்குப் புறப்பட்ட அடுத்த வருடம் சந்திரன் மொறட்டுவப் பல்கலைக் கழகத்துக்கு தெரிவாகிச் சென்றார். அடுத்தடுத்த வருடங்களில் யோகேஸ்வரனும் சுப்பிரமணியமும் பொருளியல் - கணக்கியல் துறைகளுக்கான பல்கலைக் கழகப் பிரவேசங்களைப் பெற்றனர் (இவ்விருவரும் பின்னர் பூண்டுலோயாவில் சாதனை புரிந்த கதையை அடுத்த அமர்வில் பகிர்வோம்).

சந்திரன், யோகேஸ், மணியம் என மூவரும் மன்றச் செயற்பாடுகளில் போதியளவு ஈடுபட்டவாறே தான் படிப்பையும் கவனத்திலெடுத்தனர். குலேந்திரன், மகேசன், கங்காதரன் என நாங்கள் அதீதமாக மன்றச் செயற்பாடுகளால் ஆகர்சிக்கப்பட்டு படிப்பை இரண்டாம் பட்சமாக்கினோம் என்பதில் எங்களுடைய குடும்பங்களில் வருத்தம் இருந்த போதிலும் எவரும் மன்ற ஈடுபாட்டை இல்லாமலாக்க முயற்சிக்கவில்லை. எமது போக்கிலே எங்களை இயங்கவிட்டவாறே எமக்கான எதிர்காலங்களை வடிவப்படுத்துவதற்கான ஏற்பாடுகறைக் குடும்பங்களும் உற்றார் உறவினர்களும் மேற்கொண்டபடி இருந்தனர்.

மன்றமெனும் ஆரோக்கியமான தளம் தான் எங்களுக்குள் வலுவான ஒற்றுமையைக் கட்டியெழுப்ப உதவியது. அதன் பிரதிபலிப்பாக எங்களது சுய முன்னேற்றத்தில் ஊரும் உறவினர்களும் ஒன்றிணைந்து செயற்படுவதும் அமைந்தது. ஒருவகையில், எமது கிராமத்தினுள் ஆயிரம் முரண்களுடனும் ஊடாடிய வலுவான ஒற்றுமைப் பண்பை உள்வாங்கி ஒருமுகப் படுத்திய அமைப்பாக்கமாகி இருந்த மன்றக் குணாம்சம் இதுவெனலாம். நாங்கள் பதின்ரண்டு பேரும் மீண்டும் மன்றத்தில் ஒன்றிணைந்த பின்னர் "பன்னிருவர் குழு" என எந்த அசுமாத்தமும் மன்றத்துக்குள் இருந்ததில்லை. செயற்பாட்டுக்கு உரித்தான விடயங்கள் நிர்வாகக் கூட்டங்களில் முடிவெடுத்த பிரகாரம் நடந்தேறி வந்தன. நிர்வாகத்தில் தனக்கான கருத்துப் பெரும் பான்மை பெறத் தவறும் போது "பதினைந்து வயதுக்கு மேற்பட்டோர் கூட்டம்" ஒன்றில் விவாதத்துக்கு உட்படுத்தி, அங்கே ஏற்பினைப்பெறும் வாய்ப்பும் அனுமதிக்கப்பட்டது.

அத்தகைய விவாதங்கள் எதன்போதும் பன்னிருவர் குழு மட்டுமன்றி வேறெந்தக் குழுச் சேர்க்கையும் இடம்பெற்றதில்லை. ஒரு விடயப் பொருளில் ஒன்றுபட்ட நண்பர் மற்றைய ஒன்றில் வேறுபடுகிற போது தாராளவாத விட்டுக்கொடுப்பை மேற்கொள்ளாமல் தத்தமது கருத்தை வென்றெடுப் பதற்கு ஒவ்வொருவரும் சுதந்திரம் உடையவர்களாக இருந்தோம். தனது நிலைப்பாடுதான் சரியானது என விட்டுக்கொடுக்காமல் ஆக்கிரோசமாகச் சண்டை போடும் விடயம் தோல்வி கண்டு, எதிரான கருத்து ஏற்புடையாகிவிட்டால் அந்தத் தீர்மானத்தை வெற்றிகரமாக்குவதற்கு மீண்டும் ஒற்றுமையுடன் இயங்கும் பாங்கு ஒவ்வொருவரிடமும் இருந்தது. பதின்ரண்டு பேரும் எந்த ரோசமும் பாராமல் மீண்டும் மன்றமானதைப் போன்றது அது!

"பெரும் அடிதடி போல வாய்ச் சண்டை போட்டவர்கள் இனிமேல் ஒன்றுபடப் போவதில்லை என்று நினைத்தால் அடுத்த நாள் கைகோர்த்துக் கொண்டு நிற்கிறீர்களே" என்று வியந்தவர்கள் இருந்தனர். தமது அரசியல் நலன்களுக்கு இடையூறாக மன்ற ஒற்றுமை தடைக்கல்லாக உள்ளது என எண்ணிய வர்களுக்கு இத்தகைய ஒன்றுபடல் வியப்பாக மட்டு மன்றிச் சகிக்க இயலாததாகவும் இருந்தது. எங்களுடைய கடுமையான சண்டைகள் பற்றிக் கந்தையா வாத்தியார் கலங்கியதில்லை மறுநாளில் ஒருவர் போல இணைந்து இயங்குவோம் என்பதனை அவர் அறிவார். ஒருவகையில் அவரால் ஏற்படுத்தித் தரப்பட்ட பக்குவமே அது!

அதன் விடயங்களிலும் சரி, பொதுக்கூட்டங் களில் பரிமாறிய கருத்துகளாயினும், விளையாட்டின் போது இடம்பெற்ற இடர்ப்பாடுகள் என எல்லா விடயங்களிலும் தனது மாறுபட்ட கருத்தினை அவர் தெரிவிக்கும் முறை தனித்துவமானது. அடுத்த நாளில் பொழுது சாய்கிறபோது சாவதானமாக நாங்கள் ஓய்ந்திருப்போம் அந்தச் சந்தர்ப்பங்களைப் பயன் படுத்திக் கந்தையா வாத்தியார் தன்னுடைய அபிப்பிரா யங்களை அமைதியாக முன்வைப்பார். "ரவி, இந்த விடயத்தில் நீங்கள் கூறிய/ நடந்துகொண்ட வாறில்லாமல், இப்படி யோசிப்பது / நடந்துகொள்வது பொருத்தமானதாக இருக்கும்" என அவர் சொன்ன எந்தவொரு விடயத்திலும் முரண்படவோ அதுகுறித்து ஆதங்கப்படவோ இடமிருந்ததில்லை. அவற்றை ஏற்றுத் திருந்துவதற்கு முற்படும் மனவுணர்வு தூண்டப்படும் வகையிலேயே அவரது கருத்துகள் அமையும். அவ்வப் போது பழைய கதைகளையும் சொல்வார். "ஒருநாள் கேனா மாஸ்டரோடு யாழ்ப்பாணத்துக்குச் சைக்கிளில் போனபோது "பழநி" என்ற பட விளம்பரத்தைப் பார்த்து ரண்டு பேரும் தியேட்டருக்கு உள்ளை போனோம் பழநி முருகன் வருவாரென்றால் விவசாயி ஒருத்தற்றை பேர் பழநி என்றதைப் பார்த்து வெறுத்துப்போனோம்" என்பது அவர் சொன்ன கதைகளில் ஒன்று!

இதுபோன்ற தனது பக்தி மனப்பாங்குக்கு ஏற்புடையவர்களாக எங்களை மாற்றுவதற்கு எந்த முயற்சியையும் அவர் எடுத்ததில்லை. எங்களது போக்கின் திசை மார்க்கத்தில் சரியாக முன்னேறுவதற்கு ஏற்ற வழிப்படுத்தல்களை ஏற்படுத்தித் தருபவராக இருந்தார். இந்த உறவு ஓரிரு வருடங்களில் முடிவுக்கு வரும் வகையில் மடத்தை நீங்கி வீட்டில் சென்று ஓய்வெடுக்கலானார். கடும் சுகவீனத்துக்கு உள்ளாகி இருப்பதனை அறிந்து எல்லோரும் ஒன்றாகப் போய்ப் பார்த்துத் திரும்பினோம். ஓரிரு நாட்களில் நிரந்தர உறக்கத்தில் மூழ்கினாரென அறிந்து தவித்தோம். நோயிலிருந்து மீண்டெழுந்து வந்து தட்டிக்கொடுத்து வளர்ப்பார் என்றிருந்தால் ஒருபோதும் காண முடியாத நிலை ஏற்பட்டுவிட்டதே!

அவர் எமக்குள் இத்தனை ஆழமாக ஊடுருவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளார் என்பதை அப்போது உணராமல் தானிருந்தோம். விளையாட்டோடு கலந்த ஆற்றுப்படுத்தலாகவே அவர் எமக்குள் நிறைந்திருந்தார். நிரந்தரப் பிரிவு என்றதும் அதிர்ந்துபோய் "மறுமலர்ச்சித் தந்தைக்கு அஞ்சலி" எனப் பிரசுரம் அடித்துக்கொண்டு சென்று இறுதி வணக்க நிகழ்வில் விநியோகித்தோம். முன்னதாக எமது மறுமலர்ச்சியின் பிதா அவரே எனும் நினைப்புப் பேசுபொருளாக அமைந்திருக்கவில்லை என்றாலும் அவரது மறைவு அதனை ஓங்கி அறைந்து எங்களுக்கு உணர்த்திவிட்டது. அவருடைய உடலைத் தாங்கிய பாடையைத் தூக்குவதற்கு உறவினர்கள் ஆர்வம் காட்டாததைக் கண்டு நாங்களே தோள்களில் சுமந்து கடற்கரைச் சுடலைக்கு எடுத்துச் சென்றோம். நான் உட்பட மன்றத்தவர் சிலர் அவரை மட்டுமே அவ்வாறு தூக்கிச் சென்றோம் என்ற புதிய அனுபவம் அது!

அந்தியேட்டிக்கு அழைப்பு வந்ததன் பொருட்டு அங்கே சென்று அமர்ந்த சில நொடிகள் கிரிகைகள் நடந்த இடத்தில் இருந்து "மன்றம் வந்திருப்பதை" அறிந்த அன்ரி ஓட்டமும் நடையுமாக வந்து எங்களுக்கு முன் அமர்ந்தார். "வருத்தத்தில அவர் படுத்திருக்கேக்க சொன்னவர், "என்னைச் சொந்தங்கள் தூக்க வேண்டியதில்லை மன்றம் தூக்கும்" என்று. அதைப்பற்றி அறியாமலே அவற்றை நம்பிக்கையைக் காப்பாற்றிப் போட்டீங்கள்" என்று சொன்னபோது அன்ரி அழவில்லை. மன்றத்தில் அவர்கள் கொண்டிருந்த பற்றுறுதி தான் அங்கே வெளிப்பட்டது. எங்களுக்குள்ளே அவர் என்பதைக் கடந்து கந்தையா வாத்தி யாருக்குள் மன்றமும் நிறைந்திருந்தது என்ற உண்மையை உணர்த்திய இந்த விடயத்தை இப்போது எழுதும் இந்தப்பொழுதிலும் கூட கண்கள் தன்னுணர்வின்றிக் கண்ணீரை வெளியிடுவது மட்டுமன்றி, அந்தக் கணத்தை நினைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நெஞ்சத்தைக் கனமாக்கும் எண்ணக் கலவைகள் திசைமாறிச் சென்றுவிடாத வாழ்வியலை எமக்கானதாக ஆக்கியுள்ளது என்ற உண்மையும் வலுப்படுகிறது. அது எப்படி வளர்ந்தது எனத் தொடர்ந்து பேசுவோம்!

## குறும்பாக்கள்...!

எட்டுப் பிள்ளைகள்...
அப்பாவின் ஏராளமான
சொத்துக்களைபங்கு பிரிக்க
யாருமே வரவில்லை
புத்தகங்கள்..!
****
ஆபிரிக்காவின்
அடிநிலத்தில்
தங்கப்பாளம்
அரேபியாவில் நிலம் அகழ
எண்ணை வயல்
எங்கள் மணித் திருநாட்டில்
(செம்)மணி...மணியாய்..!
****
பிறந்த நாளுக்கு
அப்பா ஆசையாக வாங்கித் தந்த
அழகுப் பொம்மை
என்னையே கட்டிப்பிடித்தபடி
எவ்வேளையிலும் உறங்குது
புதை குழியில்...!
****
பத்து இடங்களில்
சொகுசு மாளிகைகள்
பேரப் பிள்ளைகளுக்காக..
அந்த பாட்டனின் பெருமைகள்
வரலாற்று சாதனைகளாக அவர்
மீட்டெடுத்த திருநாட்டில்..!
****
சமாதானப் படையின்
வருகை
என்றும் பசுமையாய்
பாத்தீனியம்..!

- ஷெல்லிதாசன்



## அங்கிள் குட்மோர்னிங் !!!

அங்கிள் குட்மோர்னிங்
பச்சைச் சீருடையில்
காவலுக்கு நின்றவனைப் பார்த்து
பள்ளிச் சீருடையில்
நின்ற பாலகன் புன்னகைத்தான்....

புன்னகையைத் தொலைத்துப்
பல வருடங்களாகி விட்ட அந்தப்
பச்சைச் சீருடையான்
பாலகனை முறைத்தபடி
நீ பயங்கரவாதியா
என்று கேட்டான்....

இல்லை அங்கிள்
ஏனப்படிச் சொல்கிறீர்கள்
என்ற பாலகனை அப்படியானால்
எதற்காக உன் கையில்
புத்தகப் பை வைத்திருக்கிறாய்
என்று கேட்டான் அந்தப்
பச்சைச் சீருடையான்....

- காரைக்கவி கந்தையா
பத்மானந்தன்

## இறக்கையின் மொழி

சிறகிருந்தும்
சிறைப்பட்ட பறவை
உதிர்த்த
இறக்கையின்
மௌன மொழியினில்
கனவுகள் பேசும் - அதன்
மென் மூச்சினில்
பலநூறு ஆற்றல்கள்
மறைந்திருக்கும்
அசைவில்லா அசைவில்
ஆயிரம் அர்த்தங்கள்
புதைந்திருக்கும் - அதன்
புதை மேட்டில்
பூக்களும் புன்னகைக்கும்
இசைவில்லா
வாழ்வின்
இம்சைகள் பலகோடி
சொல்லாமலும்
சொல்லும்.

- இதயராசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிதா சேனாதிராஜா

# புகைப்படங்களும் பேசும்




கையில் அந்தக் குழந்தையை ஏந்தியதும் தன் நிலை மறந்தான் முகுந்தன். கண்கள் கொஞ்சம் பனிக்கத் தான் செய்தன. மனதில் கிடந்து அரித்துக்கொண்டே இருக்கும் ஒரு அழகிய முகம் மங்கலாய் கண்முன்னே தெரிந்தது. விட்டால் நினைவுகள் வெகுதூரத்திற்கே சென்றுவிடும் என்று விழித்துக்கொண்டு நண்பனின் முகத்தை பார்த்தான். அவனது கண்களிலும் ஏதோ வொரு சொல்ல முடியாத உணர்வு.

“மச்சான்! என்ர மச்சான் வர ஒரு மாசம் ஆகும். நீ அதுவரைக்கும் இதை சார்ஜ் போட்டு ஓன் பண்ணி வைக்கோணும். இல்லை எண்டா பழுதாப் போகும் ...” என்று நண்பன் வாசு கூறிய போது தான் அது குழந்தை இல்லை கமரா என்ற நினைவே வந்தது. என்றாலும் அது ஒரு புதிதாய் பிறந்த குழந்தை தான் அவனுக்கு. இவ் வளவு புல்லரிப்பை மகிழ்வை வெம்மையை கனதியை வேறு எவற்றாலும் தந்துவிட இயலாது. உணர்வுகளின் கூட்டில் திக்கு முக்காடிக்கொண்டிருந்தான் முகுந்தன். அவனது முகத் தை பார்த்து

“டேய்... இது புது மொடல். உனக்கு பாவிக்க தெரியும் தானே?” என்றான் வாசு. இது அவனை சீண்டுவதற்கான வார்த்தைகளே தவிர மனமுடைப்பதற் கானது அல்ல என்பது அவனுக்குத் தெரியும்.

“ம்... நான் அங்க இந்த மாரி மொடல் தான் பாவிக்கிறனான்.” என்றான் முகுந்தன்.

“சரி மச்சான். நான் வெளிக்கிடுறன். அடுத்த வருஷம் தான் இனி வருவன். கவனமா இரடா... நான் இருக்கிறன். எதெண்டாலும் கேள்.” அவனைத் தாவி கட்டியணைத்தான். 20 வருடங்களின் பின்னரான நேரடிச் சந்திப்பு. காரிற்குள் ஏறிய வாசுவிற்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி. அவனுக்காகத்தான் அந்த கமராவை வாங்கிக்கொண்டு வந்திருக்கிறான் என்றால் அவன் வாங்கியிருக்கவே மாட்டான். அன்பின் அடையாள மாய் அவன் பொருட்களை ஏற்பதில்லை. 27 வருடங் களுக்கு முன்பும் அவன் இப்படிப்பட்டவன் தான். மன மகிழ்வோடு விமானத்தை பிடிக்க விரைந்து கொண்டி ருந்தான்.

முகுந்தன் தனது தந்தையின் கமராவை சிறு வயதிலிருந்தே தொட்டுப் பழகியவன். அவன் வளர வளர அதன் மீதான காதலும் பெருகிக்கொண்டே போனது. ஆனால் அவனது தந்தை அதனை இலகுவில் அவனைக் கையாள வடுவதில்லை. அவன் முரண்டு பிடித்தால் ஒன்றே ஒன்றுதான் சொல்வார்.

“உன்ர உழைப்பில வாங்கி நீ என்னெண்டாலும் செய். இதுதான் எங்களுக்கு சோறு போடுது.” இந்த வார்த்தைகள் அவனுள் ஒரு சிறு பொறியை தூண்டி யிருந்தது.

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை யில் உயர்தரம் படித்துக்கொண்டிருந்த காலம் அது. அன்று அவனை தானாகவே அழைத்த தகப்பன், “மானிப் பாய் லேடீஸில ஐசி போட்டோ எடுக்கோணும். நான் இண்டைக்கு போகேலாது. எனக்கு வேற கலியாணம் ஒண்டு இருக்குது. நீ போட்டு வா.” என்றார்.

அவனுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. முதன் முறை யாக அப்பாவே கமராவை கையில தாறார். நண்பன் வாசுவையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டான். அன்று தமது பாடசாலை செல்வதையே மறந்து போயி னர் இருவரும். பெண்கள் பாடசாலைக்கு செல்லப் போகின்றோம் என்றதுமே வாசு மெய்மறந்து தலை யாட்டினான்.

அங்கே கமராவையும் இடத்தையும் ஒழுங்கு படுத்தி புகைப்படம் எடுக்கத் தொடங்கி கொஞ்ச நேரத்திற்குள் களைத்துப்போனான் முகுந்தன்.

“என்ன மச்சான் இது? ஒரு இடத்திலையே இருந்து “உம்” எண் டு ஒரு உணர்வும் இல்லாத மூஞ்சயள படம் எடுக்க அலுக்குது” என்றான். வாசுவிடமிருந்து பதிலில்லை. அவன் வாயில் வீணீர் ஊற்றாத குறை. மெல்ல அவனை நுள்ளி உலகிற்குள் மீட்டெடுத்தான் முகுந்தன். சலித்தவாறே கமராவுக்குள் கண்ணைப் புகுத்தியவனுக்கு பேரொளி ஒன்று அவன் கண்களை பறித்துச் செல்வதாய் உணர்ந்தான். எனினும் கண்கள் அந்தப் பேரழகை பருகிக்கொண்டிருக்கின்றனவே. அப்படியாயின் கண் கெட்டுப் போய்விடவில்லை.

தங்க நிறத்தாள். பாம்பென நீண்ட இரட்டை பின்னல். வரைந்து வைத்த இதழ்கள். இதழ்களில் புன்னகைத் தவழல். கரு கருவென்று வில்லை ஒத்த புருவங்கள். மீனின் அழகும் மானின் மிரட்சியும் கொண்டு அந்த வில்லில் பூட்டிய அம்புகளாய் தாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்கள். அதை மீறி அவனால் அவனது கண்களை அசைக்க முடியவில்லை. ஒலிகள் எதுவும் அவன் காது களை அடையவில்லை. இமைகளை தூர விலக்கின கண்கள்.

"டேய்.. எடுத ்திட்டியா?" என்ற வாசுவின் ஓங்கிய குரல் அவனை மீட்டது.

மொழி வரவேயில்லை. இல்லை என தலை யசைத்தான். அவள் புன்னகையோடு ஒரு புகைப்படம் எடுத்துவிட வேண்டும் என தட்டினான்.

"சரியா?" என்றான் வாசு.

மீண்டும் இல்லை என்பதாய் தலையசைத்தான்.

"இஞ்ச.. கொஞ்சம் சிரிக்காமல் இரும்.." என்றான் வாசு அவளிடம்.

சிரிக்காவிட்டாலும் அவள் பேரழகியாக மிளிர் கிறாளே. மீண்டும் எடுத்தான்.

"என்னடா மச்சான்?"

கொஞ்சம் தலையை பதிக்குமாறு கைகை காட்டி னான் முகுந்தன். ஒருவாறு அன்றைய நிகழ்வு முடிந் திருந்தது. வீட்டிற்கு வெளிக்கிட்டார்கள். ஆனாலும் முகுந்தன் அந்தப் பாடசாலையின் வாயிலில் தன்னை விட்டு விட்டு பிணமாய் வெளியேறினான். சைக்கிளில் அமர்ந்ததிலிருந்து மௌனம்.

"என்னடா..?" என்றான் வாசு.

"டேய்.. இன்னும் கொஞ்ச நேரத்தில பள்ளிக் கூடம் விட்டுடும் எல்லா?... திருப்பி பள்ளக்கூடத் தடிக்கு விடடா மச்சான்." என்றான் முகுந்தன்.

"ஏனடா?"

"விடன் நீ"

பாடசாலை வாசலிற்கு அவர்களும் போக பாட சாலை விட்டு மாணவர்கள் வெளியே வரவும் சரியாக இருந்தது. அவனது கண்கள் தீவிரமாய் தேடிக் கொண்டி ருந்ததையும் அதன் பசியையும் உணர்ந்துகொண்டான் வாசு. கடைக்குச் சென்ற தந்தை தனக்காக வாங்கிவரும் இனிப்பிற்காய் காத்திருக்கும் ஒரு குழந்தையின் பட படப்பும் ஆவலும் முகுந்தனின் கண்ணில் கண்டான். உன்னிப்பாக அவனை அவதானித்துக் கொண்டிருந் தான். அவனது பார்வை ஒரு பேரழகின் மீது தன்னை புதைத்தது. அவனது கைகள் வாசுவை இறுகப்பற்றின. பெருமூச்சின் வெம்மையை அவனே உணர்ந்தான். இதயத்தின் துடிப்பு அவனது காதுகளில் பறையாய் ஒலித்தன. மேனியெங்கும் வியர்வை. அவள் நடக்கலா னாள். அவன் பறந்துகொண்டிருந்தான்.

வழிநெடுகிலும் அவளை வர்ணித்துக் கொண்டேயிருந்தான் முகுந்தன். வாசுவிற்கு காதடைத்து விட்டது. ஒரே விடயத்தை எத்தனை முறை தான் கேட்பது. எனினும் நண்பனின் உளறல்களை அவனை விட யார்தான் கேட்பர். ஒவ்வொரு நாளும் பாடசாலை முடிய அவளிற்கு பின்னால் போவதே வேலையாகியது. நாட்கள் நகர்ந்தும் அவனது பிதற்றல் கள் குறையவேயில்லை. அவளுக்கும் தெரிந்திருந்தது. அவன் பின்னால் வருவது. மெல்லிய புன்னகையை சிந்தி விட்டு போகத் தொடங்கினாள். முகுந்தனின் பைத்தியம் மேலும் கூடிக்கொண்டே போனது. ஒரு நாள் திடீரென வாசு கேட்டான், "டேய் மச்சான்... அந்தப் பிள்ளை யின்ர பேர் என்னடா?" விக்கித்து நின்றுவிட்டான் முகுந்தன். மூன்று மாதமாகியும் அவனுடையவளின் பெயர் தெரியாமல் இருக்கிறேனே.

"மச்சான் நீயே போய் கேளடா." என்றான் முகுந்தன்.

"டேய்.. விசராடா உனக்கு? ஆராவது பாத்துப் போட்டு என்ர அப்பரிட்ட சொன்னா மனுசன் என்னை கட்டிப்போட்டு தோலுரிக்கும்."

"சரி நானே கேக்குறன்" என்று அவளை மறித்து, "உங்கட பேர் என்ன?" என்றான். அவளுக்கு உதறத் தொடங்கியது. "நான் சொல்ல மாட்டன்." என்றாள்.

"சொல்லாட்டி விடமாட்டடன்." என்ற முகுந்தனை பார்த்து "நந்தினி" என்றுவிட்டு பறந்துபோனாள்.

வரும் வழியெல்லாம் அந்தப் பெயரை தேவாரம் போல் ஓதிக்கொண்டே வந்தான் முகுந்தன். அத்தோடு விட்டானா என்ன...

"டேய்.. அவள் என்னோடை என்ன முதல் வார்தை கதைச்சவள் தெரியுமோ?"

"நீயே சொல்லு" என்று சவித்தான் வாசு.

"நான் சொல்ல மாட்டன்" என்றான் முகுந்தன்.

"சொல்லாட்டி போ?" என்றான் குட்டிக் கோபத்தோடு.

"டேய்... அந்த வார்ததைய தானடா அவள் சொன்னவள்" என்று சொல்ல இருவரும் வீதி வீதியாகச் சிரித்துக்கொண்டே வந்தனர்.

முகுந்தனிடம் அவ்வப்போது தந்தை தரும் புகைப்பட பிடிப்புகளில் வரும் எந்த மாந்தரும் அவளைப் போல அவனை கவர்ந்துவிடவில்லை. அவள் முகம் தந்த உயிர்ப்பை அவை தருவதில்லை.

அவளது புகைப்படத்தை தன் பேசில் மறைத்து வைத்தான். அடிக்கடி அந்தப் புகைப்படத்தோடு கதைத் தான். தான் எடுத்த மிகச்சிறந்த புகைப்படம் அதுவே என நம்பினான். இனியும் எடுக்கப்போவதில்லை அவ்வாறு ஒரு படத்தை. அவனது தவம் ஒன்பது மாதங்களில் கை கூடியது. அவனுக்கு அது ஒரு பிரசவ வலி. அவனை விட மிக மகிழ்ந்தவன் வாசு. "அப்பாடா... இவன்ர புலம் பல்ல இருந்து தப்பலாம்." என்று பெருமூச்சு விட்டான்.

அவனுக்கு அந்த வரம் கிடைத்தது தொண்ணூற றைந்தில். அன்றும் ஒரு சிறிய பிறந்தநாளுக்கு புகைப் படம் எடுத்துவிட்டு வரும் வழியில் அவளை சந்திப்ப தாக முடிவு செய்திருந்தான். இருவரும் நவாலி வேதக் கோயிலடியில் சந்திக்கும் திட்டம். அவளை எவ்வாறா யினும் இன்று ஒரு படம் எடுத்துவிட வேண்டும் என்று வாசுவிற்கு கூறிக்கொண்டே வந்தான். கோயிலுக்கு அருகில் வர வர மேலே தாக்குதல் விமானம் பறந்து கொண்டிருந்தபடியே திடீரென குத்தி எழும்பியது. சைக்கிளை இருந்து இறங்கி இருவரும் நிலத்தில் படுத்தனர். கோயிலிலிருந்து பேரொலியும் புகை மூட்ட மும் அழுகுரல்களும் காதில் நெருங்கிக் கொண்டி ருந்தன. என்றாலும் அவனவள் வந்துவிட்டால்... நெருங்கினர். இதயம் நின்றுபோனது. அழுகுரல்கள். முனகல்கள், கருமையும் வெம்மையுமாய் அவ்விட மெங்கும் இரத்த வாடை. அவன் கண்கள் எங்கோ நிலைக்குற்றியது. மயங்கி விழுந்தான். மீள எழுந்தபோது வைத்தியசாலையில்.

"மச்சான், ஒண்டும் இல்லையடா... அவள் வந்திருக்க மாட்டாள்." என்று அவனைத் தேற்றினான் வாசு. மௌனமாய் சுவரை வெறித்துக்கொண்டிருந்தவ னின் கண்களில் தாரை தாரையாய் கண்ணீர். வாய் எதையோ முணுமுணுத்துக்கொண்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடா முகுந்தன்?" என்றவனுக்கும் வார்த்தைகளை தாண்டி கண் முட்டிற்று. அது அவனது நண்பனின் கண்ணீரை பார்த்ததன் விளைவு.

"சொல்லடா.."

"அவள் நெடுகலும் போடுற பச்சை சட்டை." என்று நிறுத்தினான் முகுந்தன்.

"பச்சை சட்டை.." என்று எடுத்துக் கொடுத்தான் வாசு.

"துண்டு துண்டா கண்டனான்டா..." என்றவன் "உன்னை கொண்டுட்டனே நந்தினி.. என்ர நந்து.. உன்னைக் கொண்டுட்டனே... என்ர நந்துக்குட்டி உன்னை நானே கொண்டுட்டனே... என்ர பிள்ளையை நானே கொண்டுட்டன்..." மீளவும் மயங்கினான்.

அதன்பின் பித்துப்பிடித்தவன் போல யாருடனும் கதைக்காமல் திரிந்த முகுந்தன் தொண்ணூற்றைந்து ஐப்பசி மாதத்தின் முன்னிரவில் தொலைந்துபோனான்.

வாசுவும் ஒருமாதிரியாக லண்டன் போய் சேர்ந்தான்.

இரண்டாயிரத்து இரண்டில் சமாதான ஒப்பந்த காலப்பகுதியின் ஒரு காலைப்பொழுதில் முகுந்தனை கண்டுபிடித்தான் வாசு. அவன் லண்டனிலிருந்து வந்திருந்தான். அவனது தேடல் முகுந்தனை சந்திக்க வைத்தது. பெரிய ஆம்பளை போல காற்சட்டைக்குள் விட்ட சேட்டும் நிமிர்ந்த நடையும் கண்களில் தெளிவுமாக அவனருகில் மௌனித்திருந்தான் முகுந்தன். வாசுவால் கதைக்கவே முடியவில்லை. கண்கள் கரைந்திருந்தன. மௌனத்தை முகுந்தனே உடைத்தான்.

"வாழ்க்கையே முடிஞ்சுபோச்சுதெண்டு நினைச்சன். சாகிறதை நாட்டுக்காக சாவம் எண்டுட்டு வந்தனான். அவளின்ர முகத்தை தவிர ஒண்டும் இந்த உலகத்தில வடிவில்லை எண்டு நினைச்சன். ஆனா..." நிறுத்தினான். வாசு அவனது முகத்தை பார்த்தான்.

"ஆனா இங்க வந்தும் எனக்கு கமரா பிடிக்கிற வேலை தான். மனம் வரேல. குற்ற உணர்ச்சி ஒரு பக்கம். அவளவிட வேற ஒண்டும் என்ர கண்ணுக்கு வடிவாத் தெரியாது எண்டுற நினைப்பும்..." இடைவெளி விட்டு தொடர்ந்தான்.

"களப் படப்பிடிப்புக்கு போனன். அங்கதான் என்ர எண்ணம் எவ்வளவு பிழை எண்டு தெரிஞ்சுது."

"ஏன்.. அவள மாரி வேற ஆரையும் சந்திச்சியா?" நிராசையுடன் கேட்டான் வாசு. ஒரு நக்கல் புன்னகையை உதிர்த்துவிட்டு தொடர்ந்தான் முகுந்தன்.

"ஒவ்வொரு போராளியின்ர முகத்திலயும் பேரொளியையும் கனவையும் பாத்தன். கதைகளா கேட்ட வீரத்தை அவையில பாத்தன். தமிழன் எண்ட திமிரை அவையின்ர கண்ணில பாத்தன். போருக்குப் போகேக்கையும் சிரிப்பு மாறாமல் இருக்கிற மன உரத்தையும் உண்மையையும் பாத்தன். இந்த உலகத்தின்ர எல்லா வடிவையும் அவையில கண்டன். அவளினர் உருவம் மெல்ல கலங்கிப்போயிட்டுது. இப்ப எல்லாம் இவை தான் பேரழகு." அவனது முடிப்பில் பெருமிதம் இருந்தது.

"நான் வாங்கிற முதல் கமராவில அவளைத் தான் முதலில படம் எடுக்கோணும் எண்டு முந்தியெல்லாம் நினைச்சனான். ஆனா இப்ப..."

"இப்ப.." தொடக்கினான் வாசு.

"தலைவரைத்தான் எடுக்கோணும்...எடுப்பன்.." என்றவனது நிமிர்வைக் கண்டு பெருமையோடு புறப்பட்டான் வாசு. அதற்குப் பின்பு நிறைய நிறைய நடந்து முடிந்துவிட்டன இந்த மண்ணில். மனிதர்களின் மனதில். அன்றைக்கு பின்பு இன்றுதான் சந்தித்தான். ஒடிந்து போயிருந்த நண்பனிற்கு எது ஆறுதல் தரும் என்பது அவனுக்குத் தெரியும்.

தொலைபேசியில் கதைக்கும் போதெல்லாம் முகுந்தன் கூறுவான்," முகத்தில் எந்த உயிர்ப்பும் இல்லாத மனிசரை படம் எடுக்கிற வேலை." ஆம் அவன் தன் பிழைப்பிற்காக ஒரு ஸ்ருடியோவில் ஐசி, பாஸ்போர்ட் புகைப்படங்கள் எடுக்கும் வேலை. மனம் ஒட்டவேயில்லை என்பதை அவனது சலிப்பான பேச்சு கூறிவிடும்.

"மச்சான், நான் ஒரு கமரா அனுப்பட்டே... உனக்குப்பிடிச்சத தேடிப்போ..."

"இல்லையடா மச்சான். அப்பா சொன்ன மாரி என்ர காசில ஒரு கமரா சாகிறதுக்கு முன்னுக்கு வாங்கோணும்.. ஆனா அது நடக்காமலே செத்துப் போவனோ எண்டு பயமாக் கிடக்கு.." ஒருநாள் தேம்பி விட்டான். சித்திரவதைகளால் சிதைந்த உடலை மீட்டாலும் அவனது உள்ளம் பெரு வலிகளைச்சுமந்திருந்தது. மறுகணம் விரக்தியோடு சொல்வான், "வாங்கியும் என்னதான் செய்யிறது. நான் அவரை படம் எடுக்கவே ஏலும்.." என்று அவன் விம்மும் தருணங்களில் வாசுவும் வெடித்துவிடுவான்.

அவனது தேடலை தூண்டவே வாசு இம்முறை தனது மச்சானுக்கு வாங்கிய கமரா என பொய் கூறி முகுந்தனிடம் கொடுத்தது.

இப்பொழுதெல்லாம் அதனை எடுப்பதும் அதனைக்கொண்டு திரிவதும் முகுந்தனுக்குப் பிடித்திருந்தது. ஒரு மாதம் தன்னோடு இருக்கப்போகும் அந்தக் குழந்தையை தூக்கித்திரிந்தான். எனினும் எந்த முகமும் அவனை ஈர்க்கவில்லை. எந்த மனிதரும் அவனது நினைவில் புகுந்து புகைப்படம் எடு எடு என விரட்டவில்லை. ஆனால் விலங்குகளிலும் பறவைகளிலும் இயற்கையின் படைப்புகளிலும் அவன் அந்த உயிர்பை தேடிப்பிடித்தான். அவை ஆயிரமாயிரம் அழைப்புகளை அவனுக்கு அனுப்பின தம்மை புகைப் படத்திற்குள் அடக்கும்படி. அவற்றின் அசைவிலும் இசையிலும் தன்னைத் தொலைத்துவிட்டான். நாட்கள் நெருங்கிக் கொண்டிருந்தன.

நீண்ட நாட்களுக்குப்பின் வாசுவின் அழைப்பு வந்தது. வாசுவின் மச்சான் வந்திருக்ககூடும். "அவனிட்ட கமராவைக் குடுக்க முதல் அவனிட்ட ஒண்டு சொல்லோணும். ஆனா எப்பிடி சொல்லுறது." கைகள் நடுங்க அவனது அழைப்பை எடுத்தான் முகுந்தன். வழக்கம் போல அவன் முகுந்தனது நலன் விசாரித்துவிட்டு..

"வேற என்னடா மச்சான்?..." என்றான்.

குரல் தழு தழுக்க "ஒண்டு கேக்கட்டாடா மச்சான்?" என்றான் தயக்கத்துடன் முகுந்தன். "என்னடா?"

"கமராவை நான் வச்சிருக்கட்டா மச்சான்?" என்றான் முகுந்தன்.

எதிரில் பெரும் மௌனம். குலைந்து போனான் முகுந்தன். கேட்க கூடாததை கேட்டுவிட்டேனோ என்ற பயம் அவனைசூழ்ந்தது.

மறுமுனையில் பெரும் விம்மல். அதற் கிடையில் வார்த்தை சிதறல்கள். "மச்சான்...மச்சான்..." முகுந்தனின் கண்களில் கண்ணீருடன் மயிலும் மரமும் கூடுகளும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிவரதன்




# ஜீவா ஜீவரத்தினத்தின் வாழும் கவிதை சில குறிப்புகள்

"வாழும் கவிதை" எனும் கவிதைத் தொகுதியைத் தந்த ஜீவா ஜீவரத்தினம் துறை நீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டவர். நீலாவணன் எனும் பெருமைக்குரிய கவிஞர் நீலாவணையை பிறப்பிடமாகக் கொண்டவர்தான் கிராமிய எழிலையும், அம்மண்ணின் மாண்பையும் மிக இலகுவான நடையில் கவி உலகிற்கு கொணர்ந்தவர் கவிஞர் நீலாவணன்.

இதேவேளை ஜீவா ஜீவரத்தினம் நல்ல தமிழை இலக்கண வழியில் அதேவேளை எதுகை, மோனை, கற்பனை, நல்ல சொலலாடல்களுடன் கவி புனைந்தவர், யுவன் அவர்கள் ஜீவா ஜீவரத்தினம் பற்றி கூறும்பொழுது "காலத்தின் கண்ணாடியான ஒரு கவிஞன், அதன் முன்னோடியாக மாறும்போது ஒரு தீர்க்கதரிசியாகவே மாறுகிறான் என்ற உண்மையைக் கவிஞரின் தத்துவப் படைப்புகள் விளக்குகின்றன" என்கிறார்.

ஆங்கிலத்தையே கற்ற இவர் தமிழ்ப்பற்றினால் உந்தப்பட்டு தமிழாசானாகப் பயிற்சி பெற்று, அதையே தனது மூலதனமாகக்கொண்டு பதுளை தமிழ் மகளிர் உயர்தர பாடசாலையில் சேவை செய்துள்ளார்.

தினகரனில் அவரது தியாகம் என்ற காவியம் வெளிவந்துள்ளது. இதன்மூலம் ஈழத்து முன்னணிக் கவிஞர் வரிசையில் தானும் ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டதாக கவிஞர் யுவன் ஆசிரியரைப் பற்றிய உரையில் குறிப்பிடுகின்றார். 1963 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணம் ஆசீர்வாதம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு விலை ரூபா ஒன்று எனக் குறிப்பிடப்பட்டு இக்கவிதை நூல் வெளிவந்துள்ளது. கவிதையின்பம், காட்சியின்பம், காதலின்பம், சமூகம், பல்சுவைப்பாடல்கள், தனிப் பாடல்கள் என ஆறாகப் பிரித்து தனது கவிதைகளை நூலாக்கித் தந்துள்ளார்.

ஜீவா ஜீவரத்தினத்தின கவிதைகள் அறுபதுகளில் கலைச்செல்வி, விவேகி, ஆனந்த சாகரம், வீரகேசரி, தினகரன், சுதந்திரன் போன்ற பத்திரிகைகளிலும் வெளிவந்துள்ளன.

இக்கவிஞரின் தனிச்சிறப்பே அவரது சொல்லாட்சிதான் பக்கம் 23 இல் தமிழ்க்கவி தந்தவன் என்ற கவிதை அதற்கொரு சான்று

வட்டம தியினை வெட்டிக்கு ழைத்தொரு
வண்ணமு கம்படைத்து அங்கு
சுட்டும்வி ழியெனச் சொல்லுவ தற்கிரு
சோதிக்க யல்பொருத்தி அதை
விட்டக லாதவி தத்தில்பு ருவத்தை
வில்லென வேவளைத்து மனத்
தட்டினை வீடெனக் கட்டிவ சிப்பவள்
தந்தாள்த மிழ்க் கவிதை!

இதேபோன்ற பக்கம் 37 இல்

மலரே உன் பிறவி மேன்மை
எத்தனைதான் பிறப்புக்க ளெடுத்த போதும்
இச்சகத்தில நல்லபெயர் எளிதில் வாரர்
வித்தகரும், புத்தகங்க ளாய்ந்த பேரும்
வெள்ளிகளை, விண்ணிலவைப் பாடி யோரும்
அத்தனது பாதத்தைத் தழுவி நிற்கும்
அரும்பேற்றை அடைந்தனரோ?
மலரே, நீதான்
எத்தினமு மவனடியிற் சேர்வ தாலே
எடுத்திட்ட பிறவியிலே ஏற்றங் கொண்டாய்!

என அழகு தமிழில் நல்ல தெரிந்தெடுத்த சொற்களை கொண்டு கவி புனைகிறார்.

இவ்விரு கவிதைகளும் ஜீவா ஜீவரத்தினம் "சாவாக் கவிதை சமைக்கத் துடிக்குமெம் ஜீவா எனும் ஜீவரத்தினத்தின் பூந்தொடையல் வாழும் கவிதை" என்ற நீலாவணனின் வாசகம் மெய்ப்பிக்கின்றது.

சின்ன வயதினில் சிந்தையெனும் பீடத்திலே தோன்றிய எண்ணங்களையெல்லாம் கவிஞர் கவிதையாய் வடித்துள்ளார். அவர் தந்த வாழும் கவிதை இன்றும் எம் கையில் தவழுவதும் அவருக்கு பெருமையே.

அவரை நினைவு கூர்வதற்கு கிடைத்த இத்தருணத்தை எண்ணி மகிழ்வதோடு இச்சிறு குறிப்பை எழுத கிடைத்தமைக்காக வாழும் கவிதைக்கு நன்றி கூர்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியாக்ரன்

கொமிக்ஸ் தொடர்

கதை - இ.சு.முரளிதரன்
வரைகலை - ஷாயினி வித்தி ஆனந்தன்
தரம் - 12 உயிரியல்
யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல் அஸூமத்

# பத்தும் நூறாயிரமும்



"இதென்னா, இப்பிடி வலிக்கிது இடுப்பு!" என்ற நோவோடு கூடத்திலமர்ந்து சிறிய டீப்போவின் மீது குனிந்து எழுதிக்கொண்டிருந்தேன் - அந்தப் பகுதியை எழுதிய பிறகு இடைவேளை எடுக்க வேண்டும் என்ற நினைவில்.

நல்வாழ்த்துகளுடன் நண்பர்கள் ஜிகரமும் தாகாரமும் உள்ளே வந்தார்கள்.

பகுதியை முடிக்குமுன்னரே இடைவேளை கிடைத்ததில் மகிழ்ச்சியாக எழுந்து மறுவாழ்த்தைக் கூறியவாறே அவர்களை வரவேற்று இருக்கச் செய்தேன்.

நலன்கள் உரையாடப்பட்டுக் கொண்டிருக்கும் போதே உள்ளத்தில் ஓர் ஆய்வும். "இப்போது இவர்கள் இருவருமே தங்கள் மருத்துவமனயில் இருக்க வேண்டியவர்கள். இப்படி வரவியலாத பொழுதில் வந்திருக்கின்றார்கள் என்றால், ஏதோ தலையாய காரணம் இருக்க வேண்டும்."

மனைவி உள்ளிருந்து வந்து வாசற்கதவின் திரைச் சீலையை ஒதுக்கிப் பிடித்து இருவர்மாரின் மனைவியர் நலம் வினவிவிட்டு என்னை உள்ளே வரப்பணித்தாள்.

உள்ளே போனதும், "என்னாப்பா! சீனியுமில்ல, பாலுமில்ல!" என்று முறையிட்டாள்.

இதெல்லாம் எனக்கு ஆண்டுக்கணக்கிற் பரிச்சயமென்பதால், "எனக்கிட்ட உள்ளதே அம்பது ரூவாதான். சீனி மட்டுந்தான் வாங்கேலும்!" என்றேன்.

"சீ! பிளேன் டீயா குடுக்கிறது?..." என்றவள் அவளுக்கேயுரிய குறுக்குவழி மூளையை அறிமுகப் படுத்தினாள். "அடுத்த வீட்லருந்து வாங்கி எடுக்கிறேன். பொறகு குடுத்துறுவோம்!"

"அடுத்த வீடு என்பது அதற்காகத்தானே உருவாக்கப்பட்டிருக்கிறது! பிறகேன் என்னைக் கூப்பிட்டு நச்சரிக்கிறாள்?" என்ற எரிச்சலோடு புன்னகையாய் வெளியில் வந்து அமர்ந்துகொண்டேன்.

"ஒன்டும் ஏற்பாடு செய்றதில்ல!" என்றார் ஜிகரம். "நாங்க அவசரமாப் போக வேணும். டிஸ்பென்ஸரிக்கு ஒரு மணித்தியாலந்தான் ஷோட் லீவ் போட்டுட்டு வந்தநாங்கள்."

"ஓமோம்!" என்று மற்றவரும் ஒத்து ஊதினார் அவர் எப்போதும் அதே தராதரத்தில் இருப்பவர்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுப்பா!" என்றேன் நான். "நீங்க வந்திருக்கிற வரத்திலர்ந்தே அவசரம்னு விளங்குது. அது அவளுக்குத் தெரியணுமே!. சரி, விஷயத்தச் சொல்லுங்க!"

"அவசரமா நீங்க ஒரு வாழ்த்துக் கவிதை எழுதோணும்!" என்றார் தாகாரம்.

"என்னா, தயாரிப்பா! என்ட வாழ்க்கையிலேயே அது கெடையாதே! எழுந்த மானத்துக்குப் பாடுற கண்ணாமூச்செல்லாம் என்கிட்ட இல்ல! உருப்படியா ஒண்ண எழுதுறதுன்னா எட்லீஸ்ட் ரெண்டு கெழமயாவது வேணுமே, புலவர்களே!"

"ந்தா, உன்ட எடுப்பையெல்லாம் பக்கத்தில ஒதுக்கித் தள்ளிப்போட்டு மரியாதையா எழுதி முடி!" என்றார் ஜிகரம்.

"ஒக்கே ஒக்கே! விஷயத்தச் சொல்லாம சும்மா எழுதுடான்னா என்னத்த எழுதுறது?"

"ஒரு வாழ்த்துக் கவிதை!"

"எல்லாரையும் வாழ்த்தி எழுதியே எனக்குள்ள வாழ்த்தெல்லாம் எடம் மாறிப் போச்சி! இருக்கிற கொஞ்ச நஞ்சத்தையும் வழிச்சித் தொடைக்க நெனவு போல! சரி, பொழச்சிப் போகட்டும்! யாரப் பத்திக் காது குத்தணும்?"

"கவிஞர் காவன்னா இலங்கைக்கு வர்றார். எங்கட கவுன்ஸிலாலதான் வரவழைக்கிறாங்க. அவர கௌரவிக்கப் போறாங்க. அந்த விழாவில நீங்கதான் கவிதை பாட வேணும்!"

"காவன்னா! காமேலழகர்! ரெண்டாவது முறையா இங்க வர்றார். வரட்டும். ஆனா அதுக்கும் எனக்கும் என்னா சம்பந்தம்? கவுன்ஸில்லதான் எந்தப் பக்கம் பார்த்தாலும் கவிஞர்களாச்சே! நான் எதுக்கு, புதுசா நான்?..."

"அதென்னவோ, நீங்கதான் பாட வேணுமென்டு கவுன்ஸிலுக்குள்ள அபிப்பிராயப்பட்டவங்கள். காவன்னா தமிழ்நாட்டிலயே பெரிய கவிஞரில்லையா! அவர வாழ்த்திப் பாடுறதென்டா இங்கயும் ஒரு பெரிய கவிஞர்தானே வேணும்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னா, ஐஸா?"

"ஐசுமில்ல ஜூசுமில்ல! அதுதானே உண்ம! காவன்னா மரபுக் கவிதையும் புதுக்கவிதையும் கைவந்தவர். உங்களுக்கும் இது ரெண்டிலயும் நல்ல பரிச்சயம். அதும் போக, கவுன்ஸில் பெரியவர்ட விழாவில நீங்க பாடின வாழ்த்துக் கவிதை எல்லாருக்கும் பிடிச்சுப் போயிட்டுது. எங்கட புரொக்டரும் நீங்கதான் பாட வேணுமென்டு ஒரே போடாப் போட்டுட்டார்!"

"யார், நம்ம ரவூஃபா?"

"ஓமோம்!"

"அதெல்லாஞ் சரிதான். ஆனா எனக்குன்னு ஒரு கொள்கை இருக்கில்லியா?"

"வாழ்த்திறதென்டா வாழ்த்திறதுதானே! பிறகென்னடாப்பா மண்ணாங்கட்டிக் கொள்கை?"

"டொக்டர்! எழுதுறவன்லாம் இலக்கியக் காரன்னு நான் கணக்கெடுக்கிறதில்ல. எழுத்துக்கேத்த பண்பாடும் இருக்கிறவனத்தான் நான் கணக்கெடுக் கிறது. ரசூலுல்லாவப் பாடுன இந்த நாக்கால நான் புஷ்ஷயும் பாட முடியாது!"

"சரி! ஆனால் காவன்னா புஷ்ஷில்லயே!"

"மதியாதார் வாசல் மிதியாதேங்கிற சொல்லுக்கு மதிப்புக் குடுக்கிறவன் நான். நம்மள மதிக்காதவுங்க தமிழ் நாட்டில ரொம்பப் பேர் இருக்கி றாங்க. நம்மள கிள்ளுக் கீரையா நெனைக்கிற ஜாதிங்க! என்னமோ அவுங்க மட்டுந்தான் தமிழுக்கு ஒத்தாரிட் டிங்கிற மாதிரித் தல வீங்குனவுங்க! இவுங்கள தமிழ் நாட்டில மதிக்கிறவங்களே குறைவு! அதுனால இங்க வந்து என்னமோ வெட்டிக் கிழிக்கிற மாதிரி பாவ்லா பண்ணீட்டு நல்லா சம்பாதிச்சிக்கிட்டும் போறாங்க! நாம அங்க போனா ஒரு சதத்துக்குங் கணக்கெடுக்க மாட் டாங்க! அது மட்டுமில்லாம, நம்ம நாட்ட அவுங் களோட சரக்குகளுக்குச் சந்தையாவேற நெனச்சிக் கிட்டிருக்கிறாங்க! இவுங்களுக்குப் போய் நாம ஏன் காவடி தூக்கணும்? அதுனாலதான் இவுங்க இங்க வந்தா எந்தக் காரணத்தக்கொண்டும் நான் அந்தக் கூட்டத் துக்கே போறதில்ல! இப்ப என்னடான்னா அப்பிடி வர்ற ஒருத்தர வாழ்த்தச் சொல்லி என்னய வற்புறுத்துறீங்க! அதாவது நம்மள நாமளே இன்னுந் தாழ்த்திக்கிடுற மாதிரி?"

"எல்லாரையும் அப்பிடிச் சொல்லக் கூடாது!"

"அதுண்மதான். இப்ப சுபமங்களாக்காரர் வந்தார். என்னா ஒரு அற்புதமான மனிதர்! நமக்குத்தான் குடுத்து வைக்கல்ல. மத்தப்படிக்கு யாரையாவது சொல்லுங்க பாப்போம்? கவிஞர் வையன்னா வந்தார். ஒரு பேட்டி குடுத்தார். என்னா சொன்னார்? "நான் இலங்கையில் உள்ளவர்களுக்குக் கவிதை கற்றுக் கொடுக்க வந்துள்ளேன்!" - இது நமக்குத் தேவையா? நம்ம நடை விளங்குதில்ல, நூல்கள் கிடைக்கு தில்லேன்னு சாக்குப் போக்குச் சொல்றதிலேயே நம்மள கீழ போடுற தியறியும் பிரக்டிக்கலும் அவுங்களோட கலை! அவுங்களோட நடையும் இலக்கியமும் நமக்கு நல்லாத் தெரியும். ஆனா அவுங்களுக்கு நம்ம இலக்கியம் தெரியாதாம்! இதிலர்ந்து நமக்கு என்னா தெரிய்து? நாம அவுங்களவிட அறிவு கூடினவுங்க! இவுங்களா நமக்குத் தமிழோ கவிதையோ சொல்லித் தாறது?..."

"மெய்தான். ஆனால் இங்க பிரச்சினை வேற. நம்ம லெப்ப தமிழ்நாட்டுக்குப் போயிருக்கிறார். இவரக் கண்டிருக்கிறார். அப்ப இவர் தன்ட பிரச் சினைகளைச் சொல்லியிருக்கிறார். உதவி கேட்டிருக் கிறார். லெப்பயும் சம்மதிச்சுக் கூப்பிட்டிருக்கிறார். ஒரு லட்சம் அன்பளிக்கிறதா முடிவு செய்திருக்கிறாங்கள்."

"இந்த லெப்பைக்கு இங்க உள்ளவுங்கள கண்ல படலி யாமா? இந்த லட்சத்த இங்கவுள்ள பத்துப் பேருக்குப் பங்கிட்டா பத்துப் பேராவது நாளைக்கி இலக்கியத்தில ஜொலிக்க மாட்டாங்களா? இல்ல, இங்க வுள்ள இலக்கியக்காரங்களப் பழி வாங்க நெனச் சிட்டாரா?... கவுன்ஸிலுக்குள்ளயே நூத்துக் கணக்கில கவிஞர்கள், எழுத்தாளர்கள் இருக்கிறாங்களே, இவுங் களுக்கு ஓட்டுப் போடுறது தமிழ்நாட்டு இலக்கிய வாதிங்களா?"

"காமேலழகர் பாவமடாப்பா! நல்லா விழுந் திட்டார்! வாழ்க்கையில நல்லா அடிபட்டுத் தெளிஞ் சிருக்கிறார். அதுதான் நபிகள் காவியம் எழுதியிருக் கிறார்! அது ஒரு மாற்றந்தானே? ஒருத்தன் வழிக்கு வந்திட்டா அவனக் கைவிடேலுமா?"

"மாற்றமா!... அப்ப உங்களுக்கு நடப்பே தெரியாதா?... சரி, நபிகளார் காவியம். இதை எழுதிறதில என்னா கஷ்டம் இருக்குன்னு சொல்றீங்க? ஆராய்ச்சி பண்ணித் தேடி வேர்த்து விறுவிறுத்து அலைஞ்சி எழுதுறதுக்கு அதில என்னா அப்பிடி படாத பாடு இருக்கு? ஆயிரத்து நானூறு வருஷங்களா நபிகளார் வரலாற்றை எத்தனைப் பேர் எழுதியிருக்கிறாங்க? அதையே திரும்பவும் எழுதிறதில என்னா கஷ்டம் இருக்கு? ஈமானோட இந்த "க்ரெய்க்" எழுதின மாதிரி புதுமையான நடையில, புதுமையான பார்வையில உலகமே பார்க்காத ஒரு கோணத்தில எழுதியிருந்தா ஏத்துக்கிடலாம். இதில அப்பிடி ஒண்ணும் இவரோட முத்திரை இல்லையே! பத்தோட பதினொண்ணு! அதையும் ஏன் எழுதினார்னு தெரியுமா?"

"ரசூலுல்லாவோட வரலாற்ற எழுத வேணாம்னு சொல்றீங்களா?" என்று குறுக்கிட்டார் தாகாரம்.

"நீங்க எப்பவுமே மறுபக்கமாத்தானே எதையும் முதல்ல புரிஞ்சிகிடுறது!... ரசூலுல்லாவோட காவியங்கள் இன்னும் லட்சக் கணக்கில வரத்தான் போகுது. ஆனா இவர் என்னா எழுதியிருக்கிறாரு, ஏன் எழுதினார்னுதான் இப்ப பேச்சு! உங்களுக்கெல்லாம் நல்லாத் தெரியும். கம்யூனிச சிந்தனைதான் உலகத் துக்கு ஏத்ததுன்னு முற்றுமுழுசா ஏத்துக்கிட்டவர் இவரு. முதல் முறை இங்க இவரு வந்தப்ப இவர் ஒரு முஸ்லிம்னு பல பேருக்குத் தெரியாது. காமேலழகர்னுதான் இவரத் தெரியும். ஆனா ஒரு கூட்டத்தில ஒருத்தர் இவரது உண்மையான பேரச் சொல்லீட்டாரு. அதக்குறிச்சி இவரு எவ்வளவு சங்கடப்பட்டாருன்னு தெரியுமா?... தன்ட வேஷம் வெளிவந்திறிச்சேன்னு இவர் நொந்து போய்க் கதைச்சாரு! அப்பிடியாப்பட்ட கம்யூனிசக் காரர்! கம்யூனிசக்காரனா இருக்கிறத நான் தவறுன்னு சொல்லல்ல. கொள்கையில உறுதியா இருக்கிறது நல்லதுதான். ஆனா தன்ட சுயநலத்துக்காக உண்மைய மறைக்க நெனச்சா, அதை என்னால ஏத்துக்கிட முடி யல்ல. அது ரெட்ட வேஷம்! இவரப் போயி எப்பிடிக் கொள்கைக்காரர்னு சொல்ல முடியும்? தான் ஒரு முஸ்லிமா இருந்தாலும் தனக்குப் பொதுவுடைமைக் கொள்கை பிடிச்சிருக்குன்னா அவரு உறுதியா அத ஏத்துக்கிடணும். அதுதான் மனுசனுக்கு அழகு. நம்ம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலயே பல பேரு அதுக்கு உதாரணமா இருக்கிறாங்க. அவுங்கள நான் மதிக்கிறேன். ஆனா இவரு போடுறது வேஷம்!.. இலக்கிய உலகத்தில தனக்கும் ஒரு இடம் வேணும்னாதான் கம்யூனிச சித்தாந்தத்த ஏத்துக்கிடணும்னு இவருக்குத் தோணியிருக்கு. அந்தப் பக்கமாப் போயிட்டாரு. ஓக்கே. அப்பிடியே இருக்க வேண்டியதுதானே! எப்பவாவது கொள்கை மாறினா, அதையும் எல்லாரும் ஏத்துக்கிடுறபடி மாறி வாழணும். சும்மா சந்தர்ப்பத்துக்குத் தக்க மாதிரி மாறினா மகா துரோகம்! ஏமாத்து வேல! அவரோட மகளுக்குக் கலியாணம் வந்திச்சி. ஒரு கம்யூனிசக்காரனுக்கு முடிச்சிக் குடுத்திருந்தாலும் நாம ஒத்துக்கிடலாம். ஆனா முஸ்லிமுக்குத்தான் ஏற்பாடு பண்ணு னாரு. கையில மடியில இல்ல. உண்மையிலயே மத்தவுங்க மாதிரி இவரு பணத்தத் தேடல்ல தான். ஊழல் பண்ணலதான். யாரையும் ஏமாத்தியோ பொய் சொல்லியோ சம்பாதிக்கலதான். கையில பணமில்ல! இப்ப பணத்துக்காக சில முஸ்லிம் கள்கிட்ட போயிருக்கிறாரு. அவுங்க உதவி செய்திருக்கலாம்தான். ஆனாலும், "நீ கம்யூனிசவாதிதானே! இப்ப ஏன் முஸ்லிம்கள்கிட்ட வாற?" ன்னு கேட்டிருக்காங்க. இஸ்லாத்துக்கு நீ என்னா எழுதியிருக்கிறன்னு கேட்டிருக்கிறாங்க. அப்பத்தான் இவரு நபிகளார் வரலாறு எழுதுறாரு! அதயும் பாதிய ஒரு பாகமா! கல்யாணம் நடந்துது. ஆனா அவர் தொடர்ந்தும் முஸ்லிமா இல்ல! ரெண்டாம் பாகம் எழுதவேயில்ல! விஷயம் முடிஞ்ச கையோட அவரு இஸ்லாத்தக் கைகழு வீட்டாரு! இது அவரோட கொள்கைப் பிடிப்புன்னு சொல்லலாம். ஆனா எனக்கென்னமோ சந்தர்ப்பவாத மாத்தான் தெரியிது! இப்பிடிப் பட்ட வுங்க என்னதான் எழுதினாலும் எனக்கென்னமோ அது குருடன் வழி காட்டின மாதிரித்தான் தெரியிது!... அதோட ஒரு விஷயம் சொன்னாரு. அதயும் நீங்க கவனிக்கல்ல. இந்தக் காவியத்தில ஒரெடத் திலயும் நான் முஸ்லிம் கிற வார்த்தையையோ இஸ்லாம்ங்கிற வார்த்தை யையோ பாவிக் கல்லன்னு சொல்லியிருக் கிறாரு!"

"இப்ப நீங்க என்ன சொல்ல வர்றீங்க?"

"இந்த மனுசன் ரெட்ட வேஷக்காரர். அந்தப் பக்கம் கம்யூனிசத்தயும் இந்தப் பக்கம் இஸ்லாத்தை யும் ஏமாத்துறாரு! இதுதான் என்ட கணிப்பு! இவர் கம்யூனிஸ்ட்டாவே இருக்கட்டும். கட்யூனிசத்திலயும் நல்ல மனுசங்க, நல்ல எழுத்தாளங்க இருக்கிறாங்க. அந்த நல்லவுங்க எந்த நிலையிலயும் முகமூடி போட மாட்டாங்க. கொள்கையிலதான் உறுதியா இருப்பாங்க. நம்ம ஜீவாவப் பாருங்க. எவ்வளவு அற்புதமான ஒரு வாழ்க்கை! அவரோட ஒப்பிடுற நேரம் இந்தக் காவன்னா நோவெயார்!"

"சரிடாப்பா! அதெல்லாம் இப்ப பழைய கதைகள். இனிமேலயாவது அவர் சொந்த முகத்தோட இருப்பார்னு நம்புவோம். ஏன்னா அவர எந்த இடத்தில எப்பிடி மாற்ற வேணுமென்டதெல்லாம் அல்லாட வேல. அவன்ட படைப்ப நாம திருத்த முடியுமா? ரெண்டாவது இப்ப லெப்ப வாக்குக் குடுத்திட்டு வந்திட்டார். அத இனி மாத்தேலாது. அடுத்தது நீதான் வாழ்த்துக் கவிதை பாட வேணு மென்டு எல்லாரும் தீர்மானிச்சிட்டாங்க. அதயும் இனி மாத்தேலாது. பிடிவாதம் பிடிக்காம ஒத்துக்கோ!" என்றார் ஜிகரம்.

வழக்கப்படியே அதை ஆமோதித்தார் தாகாரம்.

தேநீர் வந்தது. குடிக்கும்போதே எனது சிந்தனையும் ஒரு முடிவுக்கு வரப் பார்த்தது. ஏனென்றால் கொட்ட வேண்டியதையெல்லாம் கொட்டித் தீர்த்த பிறகு உள்ளே இப்போது பளுவில்லா மல் இருந்தது. அதனால் இரண்டாவது அபிப்பிராயம் முளைக்கத் தொடங்கியிருந்தது. ஒரு மனிதனுக்கு இரண்டு அபிப்பிராயங்கள் இருக்கக் கூடாதா, என்ன!

"நல்லது," என்றேன். "உங்களுக்கும் டிஸ்பென்ஸரிக்குப் போக நேரமாகுது. எது நடந்தாலும் அது நன்மைக்கேன்னு நெனைக்கிறவன் நான். என்ட ஆதங்கங்களத்தான் நான் இவ்வளவு நேரமும் கொட்டித் தீர்த்தது. மத்தப் படிக்குத் தமிழ்நாட்டில எத்தனையோ நல்ல மனசுகளும் இருக்கு. பாலப் பாக் காட்டிப் போனாலும் பால் பானயப் பார்க்கணும்னு சொல்லு வாங்கல்ல! விஷயங்கள் தெரியாம நாமளும் அவர வரச் சொல்லியாச்சி. நம்ம நாட்டோட தன்மானத்த யும் பார்க்கணும்ல! எந்த நாடுமே குடுக்காத மரியாதய நாம குடுக்கணும். நாம அங்க போனா இதில கால்வாசிகூட நமக்குக் கெடைக்காதுன்னு தெரியும்! பரவாயில்ல! நான் எழுதுறேன். உங்க ரெண்டு பேரயும் கவுன் ஸிலோட பெரிய வரையும் புரக்டரையும் மறுதலிக்க என்னால முடியாது! சரி, நீங்க அச்சப் படாதீங்க! என்ட வாழ்த்து நல்லாவே அமையும். ஏன்னா நான் வாழ்த்தின ஒருத்தர் எந்தக் காரணத்தாலயும் கெட்டுப்போகக் கூடாதே!"

"சூ! கோடை மழை பெய்த மாதிரி! நீங்க டியூப் "பல்"ப்தானே! பிந்தித்தான் வெளிச்சம் வந்திருக்கு! கூட்டம் முடிய உங்களுக்குப் பணமும் கிடைக்கும். சும்மா இல்ல!... இது அழைப்பிதழ்!" என்று அழைப்பிதழைத் தந்தார் ஜிகரம்.

பிரித்துப் பார்த்தால், வாழ்த்துக் கவிதைக்கான எனது வரவு என்னைப் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தது!

*

இலக்கிய கூட்டங்களின் மரபு மாறாமல் ஒரு மணித்தியாலம் கழித்துத்தான் கூட்டம் தொடங்கியது.

அல் ஃபாத்திஹா முதலில். பிறகு அறிவிப் பாளரின் சிற்றுரை. அதைத் தொடர்ந்து வரவேற்புரை.

வரவேற்பு விருத்தப்பாவில் இருந்தது. மருதனோடைக் கவிஞரின் வஞ்சப்பா! யார் யாரையோ வெல்லாம் திட்டித் தீர்த்துவிட்டுக் காவன்னாவை இரண்டு வரிகளில் புகழ்ந்து முடித்தார்! அவருக்கு மரதனோட்டக் கவிஞர் என்று பெயர் வைத்திருக்கலாம்! ஐம்பத்தைந்து நிமிஷங்களுக்கு வரவேற்புரை அமைந்து, காவன்னாவையே போவன்னா ஆக்கியது!

சிறப்புரைகள், சிறப்புச் சிறப்புரைகள், தலைவர் உரை, விருந்தினர் உரை, வேண்டியோர் - வேண்டாதோர் உரைகள் என்று பொழுது இருண்டுகொண்டு வந்தது!

நான் வாழ்த்துரை செய்யும்போது மின்சாரம் போய்விடுமோ என்ற அச்சத்தில் குழம்பிப் போயிருந் தேன். "நாங்கள் கவுன்ஸில்ல இருக்க, நீ எங்கிருந்தடா வந்தாய்?" என்பதுபோல் எரிச்சலோடும் பொறாமை யோடும் நினைத்து என்னைப் பார்த்துச் சில பற்களைக் காட்டியவர்களின் வஞ்சகங்களும் இடம்பெற்றன!

லெப்பைதான் தலைமை வகித்திருந்தார். நான் மேடையில் அவருக்குப் பின்புறமாக அமர்ந்திருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய முறை வருவதற்குச் சில விநாடிகளுக்கு முன்னர் எனது பக்கமாகத் திரும்பி, "நேரமில்ல கவிஞரே! ரெண்டு நிமிடத்தில முடிக்கப் பாருங்கோ!" என்று எனது கழுத்தை அறுத்துவிட்டார் அந்தச் சந்தர்ப்பவாதி!

அப்போதே எழுந்து வந்துவிடலாமா என்று தோன்றியது. ஒருவரை வாழ்த்துவதென்றால் அதை வாழ்த்தாக எண்ணி வாழ்த்த வேண்டும். ஏதோ வேண்டா வெறுப்புப் போன்றோ நமது தொலைக் காட்சிகளில் ஒரு நிமிடத்தில் நூறு சொற்களைப் பேசி முடிப்பார்களே, அப்படியோ வாழ்த்தினால், அது பழி யாக மாறி வாழ்த்தியவனையே வந்து சேராதா? அப்படி வாழ்த்துவதற்குத்தான் சிரமப் பட்டு எழுதினேனா?

இரண்டு நிமிஷங்களில் என்ன வாழ்த்துவது? சபையோருக்கு வந்தனம் பாடவே இரண்டு நிமிடங்கள் போதாவே! வந்தனம் பாடாவிட்டால் ஒவ்வொருத்த னும் முகத்தைத் தூக்கி வைத்துக் கொள்வானே! பின்னர் அது எதிர்போய் முடியுமோ!...அப்படி வாழ்த்த வேண்டுமானால் ஔவையார் பாணியில் "வரப்புயர" என்று கூறிவிட்டு இருந்துவிட வேண்டியதுதான்! இங்கேயோ "அறுப்புயர!" என்று வாழ்த்தலாம்!

எனது முறை வந்தது. கால்மணிக் கூறுக்குள் அடக்கியிருக்க வேண்டியதை நான் ஐந்து நிமிஷங் களிலாவது முடிக்க வேண்டிய வற்புறுத்தலால் விரைந்து பரபரத்தேன். என்ன இருந்தாலும், காமேலழகர் கவிஞன் அல்லவா! அவர் கவிதையை மிகவும் ரசித்ததையும் கவனித்துக்கொண்டேன். அது போதுமாயுமிருந்தது எனக்கு. கவிதை தெரியா அவை யோர் எனது கவிதையின் பின்னணியும் தெரியாத நிலையில் மூச்சடக்கி யோகா நிலையில் இருந்தார்கள்.

கவிஞரான வக்கீல் அவர்கள் தலையிற் கைவைத்துக் குனிந்திருந்ததால், அவருடைய ரசனை எனக்கு விளங்கவில்லை. தலைமையில் இருந்த லேனாவோ, இரண்டு நிமிஷக் காலகட்டத்தை அதற்கு மேல் உயர்த்திக் கொண்டதால், என்னைக் கவுன்ஸிலின் துரோகியாகவே பார்க்கத் தொடங்கி யிருந்தார்! அவை யில் இருந்தவர்களோ, திருவிளையாடல் சினிமாவில் சிவாஜி பாடும் போது இடையில் உண்டாகிய நிலைகுத்தலில்தான் இருந்தார்கள்!

வாழ்த்துக் கவிதை முடிந்திருந்தபோது, ஏதோ இமய மலையில் ஏறி நின்று வாசித்த களைப்பு தெரிந்தது. பக்கத்தில் இருந்தவர்கள் நாகரிகம் கருதிக் கை கொடுத்தார்கள். அவர்களுக்கும் விளங்கியிருக்குமா என்பது எனக்குச் சந்தேகமே. வேண்டுமானால் நேரம் எடுக்காததற்காகக் கை கொடுத்தி ருக்கலாம்!

அதன் பின்னர் காமேலழகருக்கு ஓரிலட்சம் பொற்கிழி அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் பேசினார்.

"இவ்வளவு அருமையான கவிதையை ரசிக்கா மல் சபையோர் ஏன் கல்லாகிப் போயிருந்தீர்கள்?" என்று தொடங்கினார் அவர்.

எனக்குக் குளுகுளுவென்றிருந்தது. ஆனால் சபை யோரோ அதே திருவிளையாடல் நடிப்பில்தான் இருந்தார்கள்!

நான் ஜிகரத்தாரையும் தாகாரத்தாரையும் அவர்கள் என்னையும் பார்க்கும் படியாகக் காமேலழகர், தனது நூலில் முஸ்லிமோ இஸ்லாமோ குறுக்கிடாமல் தான் பார்த்துக்கொண்டதாக, நான் நண்பர்களிடம் கூறியிருந்ததை உண்மையாக்குவதுபோல் பெருமை யுடன் குறிப்பிட்டார்!...

பலருடைய சுயங்களை வெளிப்படவைத்த கூட்டம் ஒருவாறு இரவு எட்டுக்கு முடிவடைந்தது.

மேடையைவிட்டுக் கீழே வந்ததும் வராதது மாக வக்கீல் எனது குரல்வளையைப் பிடித்தார். "நீங்களே உங்க கவிதையைக் கொன்னுட்டீங்களே! இதைவிடப் பாடாம இருந்திருக்கலாமே!" என்றார்.

"நான் என்னா புரக்டர் சர் செய்யிறது! அவர் லேனா ரெண்டு நிமிஷத்தில முடிடான்னுட்டாரே!" என்று ஆதங்கப்பட்டேன்.

"வரவேற்புரை அஞ்சி நிமிசத்தில முடிய வேண்டியது. அதக் கட்டுப்பாடு பண்ண முடியாதவர் உங்கள எப்பிடிக் கட்டுப்பாடு பண்ண முடியும்? இனி மேப்பட்டு இப்பிடியெல்லாம் நீங்க எறங்கிப்போக வாணாம்!" என்று சினம்படச் சொல்லிவிட்டு அவர் அப்பாற் போனார். அந்தப் பாராட்டு எனக்கு மகிழ்ச்சியை அளித்தது.

"நம்ம புரவலர் இப்ப நமக்கெல்லாருக்கும் ஓட்டல்ல பெரிய விருந்துக்கு ஏற்பாடு பண்ணியிருக் கிறார். நேரா அங்கதான் போறோம்," என்றார் கனி நண்பர்.

இவர்கள் விழா முடிந்ததும் தருவதாகச் சொன்ன காசு எப்போது கிடைக்கும் என்று நான் தடு மாறிக்கொண்டிருந்தேன். அதனை வாய்விட்டு ஜிகரத் திடமோ தாகாரத்திடமோ கேட்கவும் கூச்சம் தடுத்துக் கொண்டிருந்தது. ஏனென்றால் வீட்டுக்குத் திரும்பு வதற்குக் கையில் காசில்லை. இங்கே கிடைக்கும்தானே என்றுதான் வந்திருந்தேன். ஒரு பத்து ஷரூபா இருந்தாற் போதும்...

விழா மண்டபத்தின் ஓரத்திற் சலசலப்புக் கேட்டது. என்னவென்று பார்த்துவர கனி ஓடினார். அவர் வந்து சொன்ன விஷயம் வித்தியாசமாக இருந்தது.

"நம்ம லேனா தமிழ்நாட்டில வச்சி, காமேலழ கருக்கு ஒரு லட்சம் தர்றதாச் சொன்னாராம். கவிஞர் நூறு புஸ்த்தகங்களும் குடுத்திருக்கிறாரு. அதுக்குள்ள நாப்பதினாயிரமும் வேணும்னு அவர் சொல்றாரு. அதெல்லாம் சேத்து மொத்தமாத்தான் ஒரு லட்சம் குடுத்திருக்குன்னு இவுங்க சொல் றாங்க! இதுனால காவன்னா கோவமாயீட்டாரு. புரவலர் குடுக்கிற விருந்துக்கும் வார்றதில்லன்னு சொல்றாராம்!"

அப்போது புரவலர் எங்கள் பக்கமாக முகம் சிவக்க வந்தார். அவர் சொல்லிக் கொண்டு வந்தவை இவை:- "இவன் வந்தாத்தான் என்னா, வராட்டித்தான் என்னா! ஒரு மரியாதைக்கு நான் இதைச் செஞ்சா அந்தாளு பணத்திலயே குறியா இருக்கிறான்! நீங்கல்லாரும் வாங்க, நாம போய்ச் சாப்பிடுவோம்!"

ஊருலகம் பலதும் பத்தும் கதைத்துக் கொண்டிருக்கையில் நான் கனியின் காதுகளில் மெது வாக வள்ளுவருக்கு நன்றி கூறிவிட்டுச் சொன்னேன்:- "பிரதர்! பர்ஸ வீட்ல விட்டுட்டு வந்துட்டனா இல்ல வழியில தவற விட்டுட்டனான்னு தெரியல! நான் ஓட்டலுக்கு வரல்ல. நேரமாகுது. பஸ் தவறீட்டா போய்ச்சேர ஏலாது. ஒரு பத்து ரூவா தாங்க, பிரதர்! நாளைக்கித் தாறேன்!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரவதனா செல்வகுமாரன்
யேர்மனி




# மாமி சொன்ன கதைகள்

## (சந்திரா இரவீந்திரன் அவர்களின் "மாமி சொன்ன கதைகள்" நூலை முன்வைத்து...)

"மாமி சொன்ன கதைகள்" 2022 இல் வெளிவந்த நூல். 120 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் ஆசிரியர் சந்திரா இரவீந்திரன் (சந்திரகுமாரி இரவீந்திரகுமாரன்).

சந்திரா இரவீந்திரன் ஈழத்தில் ஆத்தியடி, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தற்சமயம் புலம் பெயர்ந்து குடும்பத்துடன் இலண்டனில் வாழ்ந்து வருகிறார். மொழியாழுமை மிக்க இவர் தனது உணர்வுபூர்வமான, தனித்துவமான, அழகும் கவர்ச்சியும் கொண்ட எழுத்துக்களால் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர்.

இவரது முதற் சிறுகதைத்தொகுப்பான நிழல்கள் 1988 இல், ஈழத்தில், யதார்த்தா பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. அப்போது இவர் சந்திரா தியாகராஜா என்ற பெயரில் எழுதிக் கொண்டிருந்தார். இவரது இரண்டாவது சிறுகதைத்தொகுப்பான நிலவுக்குத் தெரியும் 2011 இல் காலச்சுவடு பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டது. இந்த இவரது மூன்றாவது நூலும் காலச்சுவடு பதிப்பகத்தினால் தான் வெளியிடப் பட்டுள்ளது.

இந்நூலின் அட்டைப்படத்தை ஓவியர் கே. கே. ராஜா அவர்கள் வரைந்துள்ளார். முன்னுரையை எழுத்தாளர் தாமரைச்செல்வி அவர்களும் என்னுரையைச் சந்திரா இரவீந்திரன் அவர்களும் எழுதியுள்ளார்கள்.

சிறிய நூல். "மாமி சொன்ன கதைகள்" என்ற தலைப்பைப் பார்த்தால், மாமி சொல்லிய சின்னச் சின்னதான கதைகள் உள்ளே இருக்கும் என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால் உள்ளே இருப்பதோ சற்றும் எதிர்பார்த்திராத காத்திரமானதொரு இலக்கியப் படைப்பு.

மாமியாரும் மருமகளும் கீரியும் பாம்பும் போலத் தான் வாழ்வார்கள் என்பதான கதைகளையும் நகைச் சுவைப் பதிவுகளையும் கேலிச்சித்திரங்களையும் தான் நாங்கள் பெரும்பாலும் கண்டிருக்கிறோம். இங்கே சந்திரா இரவீந்திரன் எழுதியிருப்பதோ, தனது அன்பு மகனின் மனைவியோடு அன்பாகவும் பண்பாகவும் நேசமாகவும் உறவாடிய ஒரு தாயின் - சந்திரா இரவீந்திரனது மாமியினது வாழ்வு பற்றிய கதை.

ஈழத்தில் போர் உக்கிரம் கொண்டிருந்த ஒரு பொழுதில் தான் சந்திராவுக்குத் திருமணம் நிச்சயமாகி யிருந்தது. அப்போது சந்திராவின் குடும்பம் விடுதலைப் போராளிகளாக இருந்த அவரது தம்பிமாரைத் தேடித் தேடி வந்து கொண்டிருந்த இந்திய இராணுவத்தின் தொல்லை தாங்க முடியாது சொந்த ஊரான ஆத்தி யடியை விட்டு யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்து, அங்கு யாழ்ப்பாணத்தில் இருந்த அவர்களது அப்பா வின் புகையிரதநிலைய உத்தியோகத்தர்களுக்கான வதிவிட பங்களாவில் தங்கியிருந்தார்கள். வீட்டின் பின்புறத்தில் இந்திய இராணுவத்தின் பெரிய முகாம் ஒன்று.

அந்த வீட்டில்தான் சந்திராவுக்குப் பதிவுத் திருமணம். அப்போது ஊர் கூடி பெரும் எடுப்பு எடுத்துத் திருமணவைபத்தை நடத்தக் கூடிய நிலைமை இருக்க வில்லை. மிகச் சொற்பமான நெருங்கிய உறவுகள் தான் வந்திருந்தார்கள். அன்றுதான் சந்திரா, தனது கணவர் இரவீந்திரகுமாரனது தாயாரான மனோன்மணி மாமியை முதன் முதலாகக் காண்கிறார். மனோன்மணி மாமி வீட்டின் நடு மண்டபத்தில் முன் வரிசையில் வீற்றிருக் கிறார். மாமியின் தோற்றத்தையும் அசைவுகளையும் அணுவணுவாக ரசித்து, அதனூடான தனது உணர் வலைகளை முதலாவது அத்தியாயத்தில் சந்திரா விபரித்திருக்கும் விதம் அழகு. கூடவே சாப்பாடு, பலகாரம், கேக் வெட்டல்... என்று தித்திப்பாய் போய்க் கொண்டிருக்கும் போது மாப்பிள்ளை வீட்டார் விடை பெறுகிறார்கள். கணவர் ரவி அடுத்த நாளே அபுதாபிக் குப் பயணமாகிறார் என்ற போது தவிர்க்க முடியாமல் மெல்லிய சோகம் மனதில் கவிந்து கொள்கிறது.

படிக்கும் எங்களையே சோகம் பற்றிக் கொண்டால் மணமகள் சந்திராவுக்கு அந்தக் கணம் எப்படியிருந்திருக்கும்?! ஆனாலும் சந்திரா மனம் தளர வில்லை. கிழமை நாட்களில் யாழ் செயலகத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்கும் அவர் ஒவ்வொரு சனிக் கிழமையும் யாழ் மத்தியில், ஸ்ரான்லி ரோட்டிலிருக்கும் யாழ். புகையிரதநிலைய பங்களாவிலிருந்து யாழ்ப் பாணத்திலிருந்து சற்றுத்தள்ளி இருபாலையில் கட்டப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராய் என்ற ஊரில் இருக்கும் தனது மாமி வீட்டுக்குச் சைக்கிளில் போகத் தொடங்குகிறார்.

நல்லூர்க்கந்தசுவாமி கோயில் கடந்து, முத்திரைச் சந்தியில் இருக்கும் சங்கிலிய மன்னன் சிலையைக் கடந்து... அது ஒரு நீண்ட சைக்கிள் சவாரி. பதிவுத்திருமணம் நடைபெற்று, கணவர் ரவி அபுதாபிக் குப் பயணமாகியதிலிருந்து அவர் மீண்டும் வந்து திருமணம் நடக்கும் வரையான அந்த ஒரு வருட காலமும் சந்திரா அலுக்காமல் சலிக்காமல் தனது கணவரின் தாயாரான மனோன்மணி மாமியிடம் போய் வந்திருக்கிறார்.

மனோன்மணி மாமிக்குக் காது கேட்காது. இருந்தாலும் மாமி சொல்லும் கதைகளையெல்லாம் பொறுமையாகக் காது கொடுத்துக் கேட்டு, அத்தனை யையும் கிரகித்து, சேர்த்து, முப்பத்தி மூன்று வருடங் களாகத் தனக்குள் வைத்திருந்து மாமியின் வாழ்வைப் பதிவு செய்திருக்கிறார் சந்திரா இரவீந்திரன். இப்படி யொரு மாமி வாய்த்தது சந்திராவுக்குக் கிடைத்த வரமா, அல்லது மனோன்மணி மாமியை இந்நூலினூடு இலக்கியத்தில் வாழவைத்த சந்திராவைப் போன்ற ஒரு மருமகள் கிடைத்தது மாமிக்குக் கிடைத்த வரமா என்று சொல்லத் தெரியவில்லை.

இருபது அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் சொல்வது ஒரு மாமியின் வாழ்வை மட்டுமல்ல. இது ஒரு காலத்தின் பதிவு. இந் நூலைப் படித்து முடித்த பின், ஒரு நல்ல திரைப்படத்தைப் பார்த்த பின், சில நாட்களுக்கு அதில் இடம்பெறும் சில காட்சிகள் மனத் திரையில் ஓடிக் கொண்டே இருப்பது போல மனோன் மணி மாமி மனத்திரையில் ஓடிக்கொண்டே இருக்கிறா.

மனோன்மணி மாமி, யாழ்ப்பாணத்தில் கோப்பாய் என்ற இடத்தில் இருக்கும் இருபாலை என்ற ஊரில் 1935இல் பிறந்தவ. ஆறுமுகநாவலர் அவர்களின் ஆசிரியரான சேனாதிராச முதலியார், தமிழில் புலமை பெற்றிருந்த பெரிய அறிஞரான நெல்லைநாத முதலி யார் போன்ற கல்விமான்கள் பிறந்த இருபாலையில் தானும் பிறந்திருக்கிறேன் என்பதில் மாமிக்கு தனக்குள்ளேயே ஒரு தனிப்பெருமை.

மனோன்மணி மாமியின் தந்தையின் முதல் மனைவி, அவர்களது குழந்தைக்கு இரண்டு வயதாக இருக்கும் போது நோய்வாய்ப்பட்டு இறந்து விட்டா. அது ஆண்குழந்தை. அந்தக் குழந்தையைக் கவனிப்பதற் காகவாவது மறுமணம் செய்யும் படி உற்றார் உறவினர் வற்புறுத்தியதில், சில வருடங்கள் கழித்து அவர் நெடுந்தீவைப் பூர்விகமாகக் கொண்ட இன்னொரு பெண்ணை மறுமணம் செய்து கொண்டார். அவர் களுக்குப் பிறந்த குழந்தைதான் மனோன்மணி மாமி. முதல் குழந்தைக்குப் பதினைந்து வயதாக இருக்கும் போதுதான் மனோன்மணி மாமி பிறந்தா. அதனால் அவவுக்குப் பயங்கரச் செல்லம்.

மனோன்மணி மாமிக்கு ஐந்து வயதான போது அவவின் பாடசாலை வாழ்க்கை தொடங்கியது. அவ தனது ஆரம்பக்கல்வியான அரிவரியை இருபாலை சாதனா பாடசாலையில் கற்கத் தொடங்கினா. அப்போ தெல்லாம் சிலேட்டோ பென்சிலோ பாவனையில் இருக்கவில்லை. நீளமான பெட்டிக்குள் மண்ணைப் போட்டுப் பரவி அதில் தான் அ, ஆ என்று எழுதிப் பழக்கினார்கள். அடுத்த வருடம் பாலர் வகுப்புக்குப் போகும் போது தான், அது 1941இல், சிலேட்டும் பென்சிலும் கிடைத்தன.

பிறகு மூன்றாம் வகுப்புக்குப் போன போது கொப்பி, பென்சில் எல்லாம் கிடைத்தன. மனோன்மணி மாமி வகுப்பில் படு கெட்டிக்காரி. வாத்தியார் கரும் பலகையில் கணக்கு எழுதி முடித்ததும் அதற்கான விடைகளைச் சரியாக எழுதி முதல் ஆளாகக் கொப்பி யைக் கொண்டு போய் ஆசிரியரின் மேசையில் வைத்து விடுவா. எல்லாம் சரியாகவே செய்திருப்பா. வாசிப்பதி லும் கெட்டிக்காரி. வீட்டுப்பாட வேலைகளையும் எப்போதும் சரியாகச் செய்து விடுவா. பாடசாலையை அவ மிகவும் நேசித்தா. ஒன்பது மணிக்குப் பாடசாலை தொடங்குகிறதென்றால் ஏழுமணிக்கே பாடசாலைக் குப் போய் விடுவா. அவவின் ஒழுக்கம், அமைதி... போன்றவற்றை மற்றைய பிள்ளைகளுக்கு ஆசிரியர்கள் உதாரணமாகக் காட்டும் விதமாக அவ ஒரு சிறந்த மாணவியாகத் திகழ்ந்தா.

ஒவ்வொரு வகுப்பிலும், பாடசாலையில் நடை பெறும் மூன்று தவணைப்பரீட்சைகளிலும் மனோன் மணி மாமிதான் முதலாம் பிள்ளை. விளையாட்டுப் போட்டிகளிலும் கயிறடித்தல், சாக்கோட்டம், ஊசிக்கு நூல் கோர்த்தல், கிடுகு பின்னுதல்... என்று எல்லா வற்றிலும் முதலாவதாகவே வருவா. கலை நிகழ்ச்சி களிலும் நடனம், நாடகம், பாட்டு என்று எல்லாவற்றிலும் பங்கு பற்றுவா. அவ்வப்போது நடைபெறும் ஒழுக்கம், வரவு, திறமை போன்றவற்றிற்கான பரிசளிப்பு விழாக்களி லும் நிறையப் புத்தகங்களைப் பரிசில்களாகப் பெற்றுக் கொள்ளுவா. இப்படியே படிப்பும் பாட்டும் விளையாட்டும் என்று சிட்டுக் குருவியாய் அவ பறந்து கொண்டிருந்த வேளையில் தான் வாழ்க்கையில் விதி விளையாடத் தொடங்கியது.

மனோன்மணி மாமி நான்காம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது ஒரு நாள் திரைப்படங்களில் வருவது போல ஒரு சம்பவம் நடந்தது. மனோன்மணி மாமியின் தந்தை பிரதான வீதியொன்றில் நடந்து போய்க் கொண்டிருந்த போது லொறி ஒன்றின் புகை கண்ணுக்குள் அடித்ததில் அவருக்கு இருகண்களும் தெரியாமல் போய் விட்டன. அவர் சுருட்டு வேலைக்குத் தான் போய்க்கொண்டிருந்தவர். அதன் பின் கண் தெரியாத அவரைச் சிலகாலம் மனோன்மணி மாமிதான் பாடசாலைக்குப் போகமுன்னம் வேலைக்குக் கூட்டிக் கொண்டு போய் விடுவதும் பாடசாலை முடிந்ததும் திரும்பக் கூட்டிக் கொண்டு வருவதும் என்று சிரமப் பட்டா.

இப்படியே மனோன்மணி மாமி ஐந்தாம் வகுப்புக்கு வந்து விட்டா. ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சை நடைபெற்றது. அதில் மனோன்மணி மாமி ஏ தரத்தில் சித்தியடைந்து விட்டா. இன்னொரு மாணவி பி தரத்தில் சித்தியடைந்திருந்தா. ஏ தரத்தில் சித்தியடைந்ததால் மனோன்மணி மாமிக்கு நல்லதொரு வாய்ப்புக் கிடைத்தது. அவ தனது ஆறாம் வகுப்பை வசாவிளான் மகாவித்தியாலத்தில் தொடரலாம். ஆனால் அங்கு போய், வர போக்குவரத்து வசதிகள் இல்லை என்பதால் விடுதியில் தங்கியிருந்துதான் படிக்க வேண்டும். அப்படி விடுதியிலிருந்து படிக்க விடுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோன்மணிமாமியின் பெற்றோருக்கு இஷ்டமில்லை. அவர்கள் அதை விரும்பவில்லை. மனோன்மணி மாமியின் தாயார் தனியாக எங்கும் போய்ப் பழக்கமில்லாதவர். மனோன்மணி மாமி இப்படிப் போய்விட்டால் கடைகளுக்குப் போகக் கூட தங்களுக்கு ஆட்களில்லை என்று சொல்லி அவர்கள் மறுத்து விட்டார்கள். இதையறிந்த தலைமை ஆசிரியை வீடு தேடி வந்து "இப்படியொரு சந்தர்ப்பம் எல்லோருக்கும் வாய்த்து விடாது. மனோன் மணி மாமியின் திறமையால் தான் இது அவவுக்குக் கிடைத்தது. படிப்பு முக்கியம்" என்பதை விளங்கப்படுத்தி அவர்களைச் சம்மதிக்க வைத்தா.

மனோன்மணி மாமியும் அவர்கள் சொன்னதன் படி ஓடியோடி சூட்கேஸ் வாங்கி, வேறும் சில அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கி, அடுக்கி வசாவிளான் மகாவித்தியாலயத்துக்குப் போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்து போது விதி வடிவில் அம்மாவின் ஒன்று விட்ட தம்பியான மனோன்மணிமாமியின் மாமா திடீரென்று அங்கு வந்து சேர்ந்தார். இப்படி மனோன் மணி மாமி படிப்பதற்காகப் போகப்போகிறா என்பதை யறிந்ததும் "விடுதியில் போயிருந்து படிக்க விட வேண்டாம். அப்படிப் போயிருந்து படித்தால் பெண் பிள்ளைகள் கெட்டுப் போய் விடுவார்கள்" என்று சொல்லி விட்டார். ஏற்கெனவே மனசில்லாதிருந்த பெற்றோர், மாமா சொன்ன இந்தக் கதையுடன் மனோன்மணி மாமியைப் போக வேண்டாமென்று அப்படியே தடுத்து விட்டார்கள்.

வாசிக்கும் எங்களுக்கே மனசு கனத்துப் போகிறது. மனோன்மணி மாமியின் மனம் அந்த நேரம் என்ன பாடுபட்டிருக்கும்! அந்த அரிய வாய்ப்பு கடைசி நிமிடத்தில் அவவிடமிருந்து பறிக்கப் பட்டு விட்டது. பிறகு பி பிரிவில் சித்தியடைந்த மாணவிக்கு அந்த வாய்ப்புப் போய்ச் சேர்ந்தது. பிற்காலத்தில் அந்த மாணவி ஒரு ஆசிரியர் ஆகியிருந்தார்.

அதன் பின் மனோன்மணி மாமி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் தனது ஆறாம் வகுப்பைப் படிக்கத் தொடங்கினா. தினமும் இரண்டு மைல் தூரம் நடந்து போய் நடந்து வந்தா. அவவுடன் இன்னும் சில மாணவியரும் போய் வந்து கொண்டிருந்தார்கள். அச் சமயம் மனோன்மணி மாமியின் அண்ணனுக்குத் திருமணமாகி வேலைநிமித்தம் அவர் வேறு தூர இடத்தில் இருந்தார்.

மனோன்மணி மாமி ஆறாம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் போது திடீரென்று அவவின் தந்தை இறந்து விட்டார். அதன் பின் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடத் தொடங்கியது. கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கூடப்படித்த மாணவியர் வேறுவேறு பாடசாலைகளுக்குப் போகத் தொடங்கி விட்டார்கள். ஒரு கட்டத்தில் மனோன்மணி மாமி தனியாக அங்கு போக முடியாத சலிப்பில் மீண்டும் வந்து தனது பழைய சாதனா பாடசாலையில் படிக்கத் தொடங்கி விட்டா. அப்போது சாதனா பாடசாலையும் மகாவித்தியாலயம் என்ற தரத்துக்கு உயர்ந்திருந்தது. அங்கும் மனோன் மணி மாமி சிறப்புச் சித்திகளுடன் மேல் வகுப்புகளுக்குப் போய்க் கொண்டிருந்தா.

*1950*இல் எஸ். எஸ். சி (க.பொ.த சாதாரணதரம்) எனப்படும் பத்தாம் வகுப்புப் படிக்கும் போது மனோன் மணி மாமிக்கு வயது பதினைந்து. அந்த வருடம் பரீட்சை. ஆவணி மாதம் அநுமதிப்பத்திரங்கள் கூட வந்து சேர்ந்து விட்டன. அந்த நேரம் பார்த்து மனோன் மணிமாமியின் அண்ணன் வந்து மனைவிக்குக் குழந்தை பிறந்திருப்பதாகவும் உதவிக்கு ஆள் தேவையென்றும் சொல்லி அம்மாவையும் மனோன்மணி மாமியையும் அழைத்துச் சென்று விட்டார்.

யாருமே மனோன்மணி மாமியின் படிப்பைப் பற்றியோ அவவுக்குப் பரீட்சை வருகிறதென்பது பற்றியோ கிஞ்சித்தும் சிந்திக்கவில்லை. அவ ஒரு பெண் என்பதால் அந்த அசிரத்தை வந்திருக்கலாம்.

இரண்டு மாதங்கள் கழித்து திரும்பி வந்த போது பழைய பாடசாலை அதிபர் மாறி புதிய அதிபர் வந்திருந்தார். இரண்டு மாதங்கள் பாடசாலைக்கு வராத காரணத்தைக் கேட்டு விட்டு லிற்றோல் பரீட்சைக்குத் தோற்றாத படியால் எஸ். எஸ். சி (க.பொ.த சாதாரணதரம்) பரீட்சையை இம்முறை எடுக்க முடியாது அடுத்த வருடந்தான் எடுக்கலாம் என்று சொல்லி விட்டார். மனோன்மணி மாமிக்குத் துயர் தாளவில்லை. என்ன செய்வது? இம்முறை விதி அண்ணன் வடிவில் வந்து அவவை ஏமாற்றி விட்டது. எங்களையுந்தான்.

மனோன்மணி மாமியை விடக் குறைந்த புள்ளிகள் எடுப்பவர்கள் எல்லாம் பரீட்சை எழுதப் போகிறார்கள். மனோன்மணி மாமி இன்னும் ஒரு வருடம் படித்த பின்தான் பரீட்சை எழுதலாம். வீட்டிலுள்ள வறுமை நிலை இதற்கு ஒத்துழைக்குமா? கவலை ஒரு புறமும் ஏமாற்றம் மறுபுறமுமாக வாட்ட மனோன்மணி மாமி இரண்டு வருடங்கள் பாடசாலைக்குப் போகாமல் அப்படியே வீட்டில் நின்று விட்டா. ஆனால் அந்த இரண்டு வருடங்களும் தனது வாழ்க்கையை வேறுவிதமாக அநுபவித்தா.

தோழியருடன் சேர்ந்து சுயதொழில்கள் செய்து சந்தோசமாகத்தான் இருந்தா.

*1953* இல் அவவுக்குப் பதினெட்டு வயதாக இருக்கும் போது அவவின் சினேகிதப்பிள்ளைகள் அவவை மீண்டும் படிக்க வரும்படி கேட்க, அவவுக்குள் ஒளிந்திருந்த படிக்க வேண்டுமென்ற ஆசையும் அவவை அருட்ட அவ படிக்கத் தொடங்கி விட்டா. *1953* மார்கழியில் பரீட்சையும் எழுதி க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்தும் விட்டா. அதனைத் தொடர்ந்து க.பொ.த உயர்தரத்தைப் படிக்கலாமென்று முடிவெடுத்தா.

அப்போதும் அந்த விதி வந்து அவவோடு விளையாடியது. அந்தக் காலகட்டத்தில் அவவின் அண்ணன் அங்கு யாழ்ப்பாணத்தில்தான் இருந்தார். அண்ணிக்கு ஒரு தம்பி இருந்தார். அழகான வாலிபன். அவருக்கும் மாமிக்கும் இடையில் எப்படியோ காதல் மலர்ந்து விட்டது.

அவர்தான் இம்முறை விதிவடிவில் வந்து "படித்தது போதுமென்றும் இனிமேல் பாடசாலைக்கே போக வேண்டாம்" என்றும் மாமியைத் தடுத்து விட்டார். காதலனை எதிர்க்க மாமி தயாராக இருக்கவில்லை. அப்படியே படிப்பை விட்டுவிட்டா.

அதை மனோன்மணி மாமி இப்படிச் சொல்கிறா. இந்தக் காதல் எப்போது, எப்படி, எந்தப் புள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஆரம்பித்தது என்றெல்லாம் சரியாக என்னால் சொல்லிவிட முடியவில்லை. அந்த மாயவலைக்குள் இருவரும் அகப்பட்டது என்னவோ மறுக்க முடியாத உண்மைதான்.

பருவவயதும் காதலும் சேரும் போது உலகம் சிறியது போல ஆகி விடுகிறது. அப்படித்தான் அப்போது எனக்கும் இருந்திருக்கிறது போலும். அதை விட எதுவும் சிறந்ததில்லை, முக்கியமானதுமில்லை என்ற உணர்வு என்னை ஆட்கொண்டிருக்க வேண்டும்.

அதனால்தான் நான் எஸ்.எஸ்.சி பரீட்சை சித்தி யடைந்த பின்னர் தொடரவிருந்த படிப்பைப்பற்றி அவரிடம் சொன்ன போது இதுவரை படித்தது போது மென்றும் இனிமேல் பாடசாலைக்குப் போக வேண்டா மென்றும் அவர் சொல்ல நானும் எதுவும் பேசாமல் இருந்திருக்கிறேன். அதன் பின்னர் பாடசாலைக்குப் போகாமல் நின்றிருக்கிறேன். என்னால் அவரின் சொல்லை மீறமுடியவில்லையா அல்லது அவர் மேலிருந்த காதல் என் படிப்பை விஞ்சி விட்டதா என்று இப்போது சொல்லத் தெரியவில்லை.

படிப்பை நான் தொடர்ந்திருந்தால்... என்று இப்போது நினைக்கும் போது என் வாழ்க்கைப் படகு ஒரு வேளை வேறு திசையில் சென்றிருக்கக் கூடுமென்றும் தோன்றுகிறது. (பக்கம்:77)

1954 இல் காதலித்தவருக்கும் மனோன்மணி மாமிக்கும் திருமணம் சந்தோசமாக நடைபெற்றது. காதல்திருமணங்களை எதிர்க்கும் அந்தக் காலத் திலேயே அண்ணன்தான் முன்நின்று செய்து வைத்தார். தொடர்ந்த இல்லற வாழ்வும் மகிழ்ச்சியா கவே அமைந்தது. 1955 இலேயே முதற்குழந்தையும் பிறந்தது. கணவருக்குப் பொலிஸ் உத்தியோகம். அதனால் பல சிங்கள இடங்களுக்குச் சென்று சிங்கள மக்களுடன் பழகும் வாய்ப்பும் மாமிக்குக் கிடைத்தது.

எல்லாச் சந்தோசங்களும் ஒரு பொழுதில் பொட்டென்று போய் விட்டன. 1970 இல் திடீரென்று ஒரு நாள் கணவர் பாரிசவாத நோயில் வீழ்ந்து, ஆறுமாதங்களில் இறந்து விட்டார். அப்போது 35 வயது மட்டுமே நிரம்பியிருந்த மனோன்மணி மாமி தனது ஒன்பதாவது குழந்தையை வயிற்றில் சுமந்து கொண்டிருந்தா. அதன் பின்னான மனோன்மணி மாமியின் நிர்க்கதியான வாழ்வு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும் என்பதைச் சொல்லவே தேவையில்லை.

மனோன்மணி மாமியின் படிப்பை பெற்றோரும் மாமனும் கணவரும்... என்று ஒவ்வொருவராக உதாசீனப்படுத்தி விட்டார்கள். அல்லது தூக்கியெறிந்து விட்டார்கள். மனோன்மணி மாமி மட்டும் படித்திருந் தால்... கணவரை இழந்த பின் அவ அத்தனை தூரம் கஷ்டப்பட்டிருக்க மாட்டா. படிக்கும் எங்களுக்கே பெரும் ஆதங்கம் ஏற்படுகிறது. மனோன்மணி மாமி, தான் படிப்பைத் தொடராது விட்டு விட்டதை எண்ணி யெண்ணி எவ்வளவு தூரம் ஆதங்கப்பட்டிருப்பா.

அந்த ஆதங்கம் இந்த வரிகளில் ஓரளவு தெரிகிறது.

எவ்வளவு ஆர்வம் எவ்வளவு திறமை இருந் தாலும் படித்து நல்லாக வருவதற்கு ஒரு விதியமைப்பும் வேண்டுமல்லவா?

என்னுடைய வாழ்வில் அது எப்போதும் குறுக்கே வந்து விளையாடிக் கொண்டே இருந்திருக் கிறது! (பக்கம்: 75)

ஆனாலும் மாமி சோர்ந்து வீழ்ந்து விடவில்லை. தன்னை வருத்தி இராப்பகலாக பாக்குச் சீவி, கிடுகு பின்னி... என்று தன்னால் முடிந்த கைத்தொழில்கள் எல்லாம் செய்து ஒன்பது பிள்ளைகளையும் நல்ல பிள்ளைகளாகவும் பொறுப்பான பிள்ளைகளாகவும் வளர்த்து ஆளாக்கி விட்டா. தைரியமும் மனஓர்மமும் மிக்க மாமி.

மனோன்மணி மாமியின் இளமைக்காலக் கனவுகள் எல்லாம் கனவுகளாகவே போய் விட்டாலும் சிறப்பானதொரு வாழ்க்கையைத்தான் மனோன்மணி மாமி வாழ்ந்திருக்கிறா. 1992 இல் யேர்மனிக்கு வந்து அதன் பின் கனடா சென்று பிள்ளைகளின் வளர்ச்சி களைக் கண்டு மகிழ்ந்து, பேரப்பிள்ளைகளுடனும் உறவாடி வாழ்ந்து, 2022 இல் நித்திய தூக்கத்தில் ஆழ்ந்து விட்டா.

இந்நூல் சொல்வது வெறுமனே மனோன்மணி மாமியின் வாழ்வை மட்டுமல்ல. கூடவே நாம் அறிந்த, அறியாத, மறந்த பல விடயங்களையும் சொல்கிறது. குறிப்பாக, அந்த ஊரின், ஊர் மக்களின் உணவுகள், பழக்கவழக்கங்கள், வாழ்க்கை முறைகள், வரலாறு கள்... என்று ஏராளம் குறிப்புகள்.

மனோன்மணி மாமி பிறந்த ஊரான இருபாலையில் இருபாலைக்கற்பக விநாயகர் கோயில் உள்ளது. இக்கோயில் தோற்றம் பெற்ற கதை சுவாரஷ்ய மானது.

1690 ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக் கேயரால் யாழ்ப்பாணக்குடாநாடு கைப்பற்றப்பட்டிருந் தது. அந்தக் காலங்களில் கடலிலிருந்து வள்ளங்கள் மூலம் அரிசி, நெல்... போன்ற தானியங்கள் இறக்குமதி செய்யப்படுவதுண்டாம். இவற்றிற்குப் பதிலாக இங்கிருந்து புகையிலை, சாயவேர், பனம்பண்டங்கள், கடகம், பெட்டி, பாய், கதிர்ப்பாய்... போன்றன ஏற்றுமதி செய்யப் படுமாம். இவற்றிற்கெல்லாம் பொருட்கள் கொண்டு வந்து இறக்கும் "ரேகு"த் துறையடியில் வைத்து, என்னென்ன சாமான்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பார்த்து வரி விதிப்பார்களாம். இந்த ஏற்றுமதி இறக்குமதித் தொழில்களில் வணிகம் செய்கிற செட்டிமார், சோனகர்களுடன் வேதாரணிய வீர சைவகுலத்தவரான சின்னத்தம்பி ஐயர் என்பவரும் வணிகம் செய்து கொண்டிருந்தாராம். அவருக்குத் திடீரென்று குறும்பான முகத்தையுடைய விநாயகர் சிலை ஒன்றைச் செதுப்பிக்க வேண்டுமென்ற ஆசை வந்து விட்டதாம். இந்தியாவிலிருந்து சிலையைச் செதுக்கி எடுத்தும் விட்டாராம். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி வைத்திருக்கும் போர்த்துக்கேயருக்குத் தெரியாமல் அதை எப்படி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வருவது என்பதுதான் அவருக்குப் பிரச்சனையாக இருந்தது. அப்போது ஒரு யுக்தி தோன்ற, அவர் பிள்ளையாரை ஒரு மூட்டை நெல்லினுள் புதைத்து அந்த மூட்டையை மூடித் தைத்து விட்டாராம். சுங்கச் சோதனையில் மூட்டையினுள் என்ன இருக்கிறது என்று கேட்ட போது பொய் பேச வராததால் "நெல்லும் சில கல்லும் இருக்கிறது" என்றாராம். அவர்களும் அது பற்றி யோசிக்காமல் வரியை அறவிட்டு அனுப்பி விட்டார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாம். கரையேறும் போது "பிள்ளையார் ஒரு காப்பாற்றும் தெய்வம்" என்ற எண்ணம் அவருக்கு வர, பிள்ளையாருக்கு நன்றிக்கடன் செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டார். அதன் பயனாக, பிரதிஷ்டை செய்து இந்தக் கற்பக விநாயகர் ஆலயத்தை உருவாக்கினாராம். அதன் பின் கோயில் உருவானதை அறிந்து போர்த்துக்கேயர் அதை உடைக்க முயற்றிசித்தது வேறுகதை.

அந்தக் காலத்தில்: பாடசாலை ஆசிரியையை "வாத்தியரம்மா" என்று சொல்லியிருக்கிறார்கள். சாதானா பாடசாலையில் படிப்பித்த ஒரு வாத்தியாரம்மா சொந்தமாக ஒரு மாட்டு வண்டில் வைத்திருந்திருக்கிறா. அதை "ஒற்றைத் திருக்கல் வண்டி" என்றுதான் சொல்வார்கள். அந்த வண்டியில்தான் அவ பாடசாலைக்குச் செல்வா. அதை ஓட்டுவதற்கு ஒரு ஆளையும் அவ வைத்திருந்தா.

பாடசாலையில் மதியச் சாப்பாடாக சோறு கொடுக்கப்பட்டது. சில நாட்களில் பாணும் வாழைப் பழமும் கொடுக்கப்பட்டது.

சாதி பார்த்தார்கள். "சாதி குறைந்த ஆட்கள்" என்று சொல்லி சில மாணவரை ஒதுக்கி வைத்தார்கள்.

அரசாங்கத்திடமிருந்து பொதுமக்களுக்கான அறிவிப்புகள் பறையடித்துச் சொல்லப்பட்டன. பறையடிப்பவர் "மூப்பன்" என அழைக்கப்பட்டார்.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப "கூப்பன்" எனப்படும் பங்கீட்டு அட்டை கொடுக்கப்பட்டது. பொதுமக்கள் அந்தக் கூப்பனுக்கு சங்கக் கடையில் அரிசி மளிகைச்சாமான்கள் வாங்கினார்கள்.

இரண்டாம் உலக யுத்தக்காலத்தில் ஆப்பிரிக்க நாட்டு ஆமிக்காரர் திடீர் திடீரென அங்கு வந்து இறங்கினார்கள். அவர்களைக் கண்டு இவர்கள் பயந்தார்கள். அவர்களைக் "காப்புலி" என இவர்கள் அழைத்தார்கள்.

பிள்ளையார் கோவில் கொடியேற்றத் திருவிழாவுக்கு சின்னமேளம், பெரியமேளம் எல்லாம் அழைத்து மகிழ்வாகக் கொண்டாடினார்கள்.

இன்னும், இலுப்பம்பூ, அதைச் செத்தல் மிளகாயுடன் வறுத்து இடித்து, உருண்டைகளாக்கிச் சாப்பிடுவது, இலுப்பங்கொட்டையை செக்கில் ஆட்டி இலுப்பெண்ணெய் எடுப்பது, அதில் மீன் பொரித்துச் சாப்பிடுவது, ஆடிக்கூழ், ஈச்சங்குருத்து, பயற்றங் கொழுக்கட்டை, பனங்காய்ப்பணியாரம், பனங்களி, வேப்பம்பூ வடகம்... இப்படி ஏராளம் சுவைகள் உள்ளே.

மனோன்மணி மாமியே ஒரு நல்ல கதை சொல்லியாக இருந்திருப்பார் போலும். அவர் தன்னைப் பற்றிச் சொல்லும் போது அவரைச் சுற்றியுள்ள மனிதர்களும் அவர் வாழ்ந்த அந்த உலகமும் மனக்கண்ணில் காட்சிகளாய் விரிகின்றன. சந்திரா இரவீந்திரனின் எழுத்தாற்றல் அதற்கு வலுவூட்டுகின்றது.

# வெண்பாக்கள்

1.
ஒற்றுமை ஒற்றுமை என்றே உரைத்தவர்
வேற்றுமை வித்தினை வீசிடுவார் - மற்றோர்
இனத்தினை சீண்டியே இன்பமும் கொள்தல்
மனத்தினில் நீக்கிடில் மாண்பு.

2.
நன்றே தெளிந்திடு நன்மையும் தீமையும்
இன்றேனும் செய்திடு ஈகைநீ - என்றும்
உதவும் உளமது உன்னுள் உறையின்
நிதமும் சிறப்பாய் உணர்.

3.
பெண்ணாய்ப் பிறந்ததுவே பேறென்பார் போற்றிடுவார்
கண்ணெனவே காத்திடவும் கேட்டிடுவார் - வெண்ணிலவைப்
பெண்ணுக்கு ஒப்பாக்கிப் பாரினிலே பாடியுமே
பெண்மையை சீரழிப்பார் கொன்று.

4.
காலமெலாம் கண்விழித்தே காத்திருந்தேன் நின்வரவை
நீலவிழி கண்டதுமே நொந்துவிட்டேன் - கோலக்
கனியிதழில் செந்தழலைக் கொட்டுகிறாய் போதும்
இனிமேல்நீ வேண்டாம் எனக்கு.



5
கண்துஞ்சும் போதினிலும் காத்திடுவாய் மெய்ந்நலமே
உண்டதுமே தூக்கமதை ஏற்றிடாதே - கண்டபல
கேடான சிற்றுணவு பெற்றுண்டு வாழ்ந்திருந்து
ஓடானாய் நோய்பெற் றுழன்று.

6.
செல்வத்தைத் தேடிடு சீரான பாதையில்
அல்லாது தேடிநீயும் அள்ளுதலால் - பொல்லாத
கேடுகளால் சூழ்ந்திங்கு கூடுதலும் நின்வாழ்வு
வாடுதலும் நீயடைவாய் வீழ்ந்து

– செய்னுலாப்தீன் நஸீரா.(ஏறாவூர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்க்குடில்

செம்மணியா அது?
நம்மணிகளின் உயிர்க்குடில்

அகழ அகழ
நம்முயிர்
செத்து வலிக்கும்படி
செத்த உடல்கள்!

நம் தமிழ்த் தாய்மார்களின்
கருவறைகள் சுமந்து
பெற்ற உடல்கள்!

கீழடியைத் தோண்டித் தோண்டி
தமிழர் வாழ்ந்த
மாண்புகளைக் கண்டோம்!

ஈழ அடியைத் தோண்டித் தோண்டி
தமிழர் மாண்ட
சாக் கூடுகளைக் காண்கிறோம்.

நெஞ்சோடு அணைத்தபடி
கிடக்கிறாள் தாய்
கொஞ்சமும் ஈவிரக்கமின்றி
கொன்று புதைத்திருக்கிறான்
விசர் நாய்!

கொஞ்சி அரவணைக்கவேண்டிய
பிஞ்சுக்குழந்தைகள்
என்ன செய்தனர்?

பள்ளிசெல்லும் குழந்தையும்
பயங்கரவாதியா?
புத்தகப் பையோடு புதைப்பதற்கு

உலக அதிசயங்கள் கண்டோம்
உண்மையில்
ஓரினமழிந்த முதல் உலக அதிசயம்
ஈழம்தான் எழுதிக்கொள்!

செம்மணி தொடக்கம்தான்
செங்குருதி படிந்த
ஈழமெங்கும்
உயிர் நீர் ஊற்றினால்
நிலம் பிளந்து
ஆயிரம் மனிதத் தலைகள் முளைக்கும்.

அவற்றின் கையிலிருக்கும் சாட்சிப் பத்திரங்களை
வாசி
இனிக் கருவறைகள்
குழந்தைகளை ஈனாது
கொலை வாள்களைத்தான் ஈனும்.

- மேரா



## வெள்ளைக் குயில்

துயர் நிறைந்திருந்தது
நிலமும் வானும் தீயால் எரிந்துகொண்டிருந்தன
சதுப்பு நிலத்துக்குள்ளிருந்து
இழுத்து வந்தன ஓநாய்கள்
இறகுகள் பிடுங்கப்பட்ட வெள்ளைக் குயிலொன்றை.

அதன் முகத்தில்
அச்சமும் சோகமும் திரண்டிருந்தன
கண்களில் கெஞ்சல் இருந்தது
உடல் முழுவதும் நனைந்திருந்தது குருதியால்.

அதன் கூக்குரல்
காடுகளைக் கடந்து
மலைமுகடுகளில் பட்டுச் சிதறியது
ஆற்ற முடியாத பெருவலி
பெரு வெளியெங்கும் சூழ்ந்திருந்தது.

நந்திக் கடலலையைப்
போர்வையாக்கி
மேனி மூட முடியவில்லை
அது விசக்காற்றில் விழுந்து இறந்து கிடந்தது

வாய்காலில் தேங்கிக்கிடந்த கடைசிச் சொட்டுக் கஞ்சியால்
மூன்று நாட்களுக்கு முன்புதான் தொண்டையை
நனைத்திருந்தது
அதன் வயிற்றில் மிகுந்த பசியும் தாகமும் இருந்தன.

கடைசியாக ஒரு தடவை
கடவுளை நோக்கி இரந்து பாடியது
அது ஊமைப் பாடலாகவே இருந்திருக்க வேண்டும்
அப்போதே அதன் உடலில் இருந்து
உயிர் உதிர்ந்தது.

பாடுவதைத் தவிர
வேறென்ன தெரிந்திருக்கக் கூடும்
அந்தக் குயிலுக்கு.

- யுகசேனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தளம்பல்

இதுவரை...
எந்தச் சரிவையும்
சந்தித்ததில்லை
என் வார்த்தை வழங்கல் பகுதியின்
சதா இயங்கியல்...
வண்ணத்துப் பூச்சியொன்றின்
சிறகசைப்பின் மெல்லுணர்வு
என் இதய அறைச்சுவரின்
அதிர்வில்...
பதற்றமற்ற பயணத்துக்கான
பருவச் சீட்டுடன் நான்!

துருத்தி முனையின் தகிப்பும்
மடத்தல்களின் மூர்க்கமும்
பலவேளை பலருக்கு...
என் முனையை மழுங்கச் செய்யும்
முனைப்பு...
கூர்மைக்கன்று...
என்னிடத்தில்...
கடத்தலின் கைங்கரியம்
கனகச்சிதமாய்...

இப்போதெல்லாம்...
நடுங்கி நைந்து போகும்
இதய அறைச் சுவர்கள்...
அந்தகாரப் பயத்தின் அரவணைப்பில்
தவித்துப் போகிறேன்...

என் உயிரணுவின் உற்பவித்தல்...
உனது வலியின் பிணிப்பில்
எனது சிதைவு...?

ஔடதத் துளிகளை அளைந்த
என் விரல் இடுக்குகளில்
உறைந்துபோகிறது உற்பாதம்
விரல் சுமந்து...
நடுக்கத்தில் கன்னச் சுவர் நனைக்கும்
அந்தரிப்பில்...
உன் உசாவல்...

என் உயிரணுவின் உற்பவித்தலின்
மூலாதாரமாய் நீ என்பதாலோ...
உனது வலியின் பிணிப்பில்
தோன்றிய அகாரணப் பயத்தில்...
எழுகிற நிதானத்தின் சிதைவில்
தோன்றும் தளம்பல்...!

## பிரிய(ம்) அறுத்தல்

எனது புலன்களின்
காலாவதி நெருக்குவாரத்திலும்...
மங்கிய விழித்திரையில்
படியெடுக்கப்படுகின்றன
உள்ளாரந்த உன் அவதியும்
அந்தரமும்...
சங்கடத்தின் சங்கதியை
வாசிக்கின்றன...
என் கண்களின் சுவாசம்!
உன் கண்களில் புகையும்
ஏக்கத்தில் விரையும்
வெளியேறா வார்த்தைகளில் கலந்து...

வாய் திறத்தலுக்கான
உன் சங்கடத்தினூடே
என் யாத்திரைக்கான
"வழிவெட்டல்"
எப்படி நிகழும்...?
அதற்கன அவதியில் நான்...
உனது பயணத் கால நிர்ணயத்தில் நீ?

இப்போதும் உணர்கிறேன்...
அன்று
உன்னருகில் இருந்து
குதூகலித்தலின்
ஒவ்வொரு ஊர்தலையும்...!
எனது அந்தப் பிடிப்பின்
இழையில் தொங்குகிறது
நம்பிக்கை இழத்தலின்
நிகழ்கால ஏக்கம்...?

மாறுதல்...
அனுபவம் கீறும்
வாய்க்கால் வழி கசிந்து...
உன்னையும் தழுவும்
ஒரு நாளின் அந்திமப் பொழுதில்
நீ உணர்வாய்...

பிரியம் அறுத்தலின்
பிரதேசத்தில்
நான் பயணிக்கத் தயாரானேன்
என் பிரியமான உனக்காக...

## உன்னை என்ன செய்தார்?

உன்னை என்ன செய்தார்...?
நீ என்ன செய்தாய்...?

உனது ஆத்மாவின் அந்தரிப்பில்
வெடித்துச் சிதறியது
அருகில் புதைக்கப்பட்ட
உனது தாயின் இருதயம் மட்டுமன்று
போதிமரமும்தான்

பால் மொச்சை தீரா
உனக்குரிய மார்புகளை
புழுக்கள்கூட நிராகரித்தன.
எப்படி...?
அவர்களால் மட்டும்
அத்தனை வக்கிரங்களைக்
கக்க முடிந்தது...?

அடித்துச் சிதைக்கப்பட்டன
சம்மட்டியால்...
உனது அண்ணனின்
மூளை இடுக்குகள்...

எழுதிய மை காயமுன்னரே
உனது அக்காவின்
புத்தகப் பையில் ஊறியது
உக்கிரத்தின் இரத்தக்கறை!
எந்த உப்புக்காற்றின் வெளியிலும்
கலந்து கரைந்து போகா...

மண்ணுள்ளே மூச்சடங்கி
அமிழ்ந்து போகா...
வஞ்சிக்கப்பட்ட இனமொன்றின் கதறல்!
உன் ஆத்மாவைப் போலவே...

ஆனாலும் என்ன...?
செம்மணிச் சிந்துப்பாத்தியின்
உன் சிதலங்களில் மீதா
எம் அவலத்தைத் பேசுவோம்...?
வேறு வழியின்றி...!

## குருவிச்சை அல்லவே ஆலமரம்

செரித்துப்போன பழமொன்றின்
செரிக்கா வித்தொன்றை
முக்கித் தள்ளியது
எங்கிருந்தோ...?
மரத்தின் கிளையொன்றில் வந்தமர்ந்த
சிறு குருவி...!

ஒட்டியிருந்த...
குருவியின் மலக்குழி ஈரத்தில்
துளிர்க்கும் வேர்த்தும்பை
ஊன்றுதற்கு
ஒரு மண்துகளும் ஒருப்படா...
உக்கிச் சரிதலை நோக்கிய...
செத்துப்போன பட்டையொன்றில்
மெல்லப் படரலாயிற்று...
அதன் வேர்க்கணுக்கள்!

சரிதல் நிலையெட்டிய
பட்டையின் இடுக்குகளில்
மெல்ல மெல்லப் படர்கிறது
குருவிச்சை ஒன்றின்
ஆதிக்கம்...
மலக்குழி ஈரத்தில் துளிர்த்த வேர்த்தும்பு
மரத்தினது ஈரத்தை உறிஞ்சியபடியே...!

என் நம்பிக்கையின் இருப்பைச்
குருவிச்சையின் செழிப்பில்
சிதைந்துபோகாது
சேமித்துக்கொள்கிறேன்!
எனது பிடிமானத்தை...
செரித்துப்போன பழமொன்றின்
செரிக்காத வித்தொன்று
ஒட்டியிருந்த...
குருவியின் மலக்குழி ஈரத்தில்
துளிர்த்தாலும்
குருவிச்சை அன்று!
நான்...
ஒட்டி உறிஞ்சி வாழ...!
வேரோடி... விழுதெறிந்து...
வீரியமாய் நிழல் பரப்பும்
ஆலமரம்!

- அ. பௌநந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

3

# ஆளுமையின் ஆட்சி, அகற்சியும் ஆழமும்



ஒருவரது ஆளுமையில் முக்கிய பங்கு வகிப்பது உணர்வு நுண்மதி. உணர்வுகளையும், உணர்ச்சிகளை யும் விளைதிறனுடன் விளங்கிக்கொள்வது, பாவிப்பது, முகாமை செய்வது ஆகியவற்றின் கூட்டுமொத்தமே அது. இதற்குள் தனது சொந்த உணர்வுகளை விளங்கிக் கொள்வதும், முகாமை செய்வதும் மட்டுமல்ல, மற்றவர் களது உணர்வுகளையும் அடையாளம் காண்பது, புரிந்து கொள்வது, அவற்றில் செல்வாக்குச் செலுத்தி வசீகரிப்பது ஆகியவையும் அடங்கும்.

மோகன்லால் கரம்சந்த் காந்தி அவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தைப் பல வருடங்களாக அஹிம்சை வழியில் நடத்திச் சென்றபோதும், அநேக மாக ஒவ்வொருநாளும் சந்தோஷமாகவும் உற்சாகமாக வும் காணப்படுவார் என்று கூறப்படுகிறது .அது அவரது உயர் உணர்வு நுண்மதியின் சுட்டி. பராக் ஒபாமா அவர்கள் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் (2015ஆம் ஆண்டு)ஒக்ளகோமாவில் (Oklahoma) இருந்த சிறைச்சாலைக்குச் சென்றார். அங்கு ஆறு கைதி களைச் சந்தித்தார். “சிறைக்குள் இருந்து மங்கிப் போதலைக் குறைத்தல்” என்ற கருப்பொருள் கொண்ட இந்தச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக அவர் குறிப்பிட்ட கைதிகளின் “கதைகளை” உற்றுக்கேட்டார் .தமது சொந்த வாழ்வில் அவர்கள் சந்தித்த சவால்கள் ,பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்தார். உணர்வு ரீதியாக அவர்களோடு தொடர்புகொள்ள அவரால் முடிந்தமையானது அரசுக்குச் சிறைக்கைதிகளுக்கு மிடையில் இருந்த சுவர்களை உடைத்து, நம்பிக்கை யைக் கட்டி எழுப்ப உதவியது. பின்னர் குற்றவியல் நீதிமன்ற அமைப்பில் சீர்திருத்தங்களைச் செய்வது தொடர்பான மசோதாவை ஆதரிக்க இந்தத் தரிசிப்பு உதவியது. இத்தகு நடைமுறைகள் ஒருவருடைய உணர்வு நுண்மதியுடன் தொடர்புடையவை.

தமது உணர்வு நுண்மதியை விருத்திசெய்ய விரும்புகிறவர்கள் “இப்போது எனது உணர்வு என்ன?” என்ற கேள்விக்கு அடிக்கடி விடை கண்டுகொள்ள வேண்டும்.

ஆன்மாக்கள் ஒன்றுபடும் புனித பூமியில்
சுருதி இசைந்த அன்பின் கீதம்
பறக்கத் தொடங்கும்
இணக்கம் எனது வழிகாட்டும் ஒளி
மகிழ்ச்சிப் பயணத்தில் கால் பதித்தோம்.
காதோடு பேசும் ஒலி மென்மையாய்
காற்றை நிறைத்தது

இது உணர்வு நுண்மதி தொடர்பாக யாரோ எழுதிய கவிதையின் தமிழ் வடிவம்.

அடுத்தவிடயம் என்னவெனில், “நான் ஒவ்வொரு மனிதருடனும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எவ்வாறு நடந்துகொள்கிறேன்” என்பதில் அக்கறையாக இருக்க வேண்டும். சகயோகமும், கூட்டாண்மையும் கொண்ட சமூகங்களே சரித்திரத்தில் சாதனை புரிந்திருக்கின்றன. எமது சொந்த அபிப்பிராயங்கள் என்பது எமது எண்ணங்கள் மட்டுமே. அவை எப்போதும் சரியாக இருக்கவேண்டும் என்பதில்லை. அவற்றை அடிக்கடி கேள்விக்குட்படுத்திச் சரி பார்த்துக்கொள்ளல் நுண்மதி கூடியவர்களின் இயல்பாக இருக்கும். அவர் தனது நம்பிக்கைகளையும் அடிக்கடி செவ்வை பார்த்துக் கொள்வார். சமூகத்தில் பலரிடம் காணப்பட் டால் அந்த நம்பிக்கைகள் சரியாக இருக்கவேண்டும் என்பது மில்லை. குழந்தைப்பருவத்திலும், பிள்ளைப் பருவத்தி லும் இருந்த நம்பிக்கைகள் பல கல்வியின் பயனால் மாறிப்போகலாம். போகவேண்டும். நல்ல உணர்வு நுண்மதி உள்ளவர்கள் வயது வந்த பின்னரும் சரியான தகவல்களின் அடிப்படையில் தமது நம்பிக்கைகளை மாற்றிக்கொள்வர்.

பெண்களுக்கு வருகின்ற சூதகம் என்பது அவர்கள் மேல் இடப்பட்ட சாபத்தின் ஒரு வெளிப்பாடு என்ற புராணக்கதை மீது இருந்த நம்பிக்கை, விஞ்ஞானத்தில் மாதவிடாய்ச் சக்கரம் படித்தபின் போயிருக்கத்தானே வேண்டும்?

உணர்வு நுண்மதியை வளர்க்க விரும்புகிறவர்கள் தமது உணர்வுகளுக்குத் தாமே பொறுப்பு எடுக்க வேண்டும். எமக்குக் கோபம் வந்துவிட்டது என்று வைப்போம். “நீ எனக்குக் கோபத்தை மூட்டினாய் “என்று நினைப்பதற்குப் பதிலாக” நான் உங்களுக்காக நீண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் காத்திருந்தேன். அதனால் கொஞ்சம் விரக்தி அடைந்திருக்கலாம்" என்று கூறலாம்.

எமது சூழலில் எத்தனையோ நேரான விடயங்கள் நடக்கும். சந்தோசமான விடயங்கள் நடக்கும். அவற்றைக் கொஞ்சம் ஆறுதலாக நேரம் எடுத்து மெல்லிதாக அனுபவித்து மகிழலாம் .குறுகிய நேரத்தில் பெரிதாகக்கொண்டாடுவதைவிட நீண்ட காலம் எடுத்துச் சிறிதாகக் கொண்டாடுவது சிறப்பு.

எமது கலாசாரத்தில் ஒரு நாற்பது, ஐம்பது வருடங்களுக்கு முன் திருமணங்கள் சிறிய அளவில் பெண் வீட்டிலேதான் நடக்கும்.முற்றத்திலே ஒரு சிறிய பந்தல் போடுவார்கள். அதிலே பெரும்பாலும் உறவினர் கள் மட்டும் கலந்துகொள்வார்கள். இரண்டாம் நாள் மாலை மாப்பிள்ளை வீட்டிலே நடக்கும் உபசாரத்தில் நண்பர்கள், அயலவர்கள் அழைப்பு இல்லாமலே கலந்து கொள்வார்கள். அதேபோல் மூன்றாம் நாள் பெண்வீட்டிலே உபசாரம். நாலாம் நாள் மணமக்கள் முழுகி, ஆலயம் சென்று வந்து நாலாம் சடங்கில் விசேட உணவுடன் கலந்துகொள்வர். பிறகு மண மக்களை உறவினர் அழைத்து விருந்து கொடுப்பது ,இரண்டு வாரத்திற்கு மேல் நீளும். இப்படியே அந்த மகிழ்வு ஒரு மாதத்திற்கு மேலாக ஒட்டிக்கொள்ளும் .இது மகிழ்வை நீடிக்கும் சரியான வழி.

இப்போது மிகப்பெரிய ஆடம்பர "ஹோட்டல்" ஒன்றில் கோடிக்கணக்கில் செலவு செய்து ஆயிரக் கணக்கானோருக்கு அழைப்பு விடுத்து, வீடியோ முதலாளியின் கட்டளைகளுக்குப் பணிந்து நடக்கும் விழாவில் அறுகரிசி போட்டு வாழ்த்தவும், சாப்பிடவும் நீண்ட வரிசையில் நின்று இடிபட்டு முடிய மணமக்கள் தே ன் நிலவுக்கு வெளிநாடு புறப்பட்டு விடுவார்கள். திரு மணம் நடந்த நெருக்கீடு மாறமுதல் ,வெளிநாட்டுக்குப் பயணப்படுவது மகிழ்வை அதிகரிக்குமா அல்லது நெருக்கீட்டை அதிகரிக்குமா என்று யாரும் சிந்திப்ப தாய்த் தெரியவில்லை. நாலு பணக்காரர் செய்வதை நாமும் அச்சொட்டாகப் பின்பற்றவே பேராசைப்படு கிறோம். உணர்வு நுண்மதி கூடியவர்கள் சுய சிந்தனை யுடன் செயற்படுவர். மகிழ்வை நீண்டகாலம் கூட்டுவர்.

அமெரிக்க இளம் தம்பதியினர் இத்தாலிய நாட்டின் ஹோட்டல் ஒன்றில் தங்கியிருக்கிறார்கள் .அந்த இளம் மனைவியின் "தனிமை" உணர்வை மிக அற்புதமாய்ப் படம் பிடிப்பது எர்னெஸ்ட் ஹெம்மிங்வே யின் "Cat in the rain" சிறுகதை. ஒருமுறை ஆறுதலாகப் படித்துப்பார்த்தால் தெரியும் பணமோ அந்தஸ்தோ மகிழ்ச்சியைக் கொண்டுவருவதில்லை என்பது .மகிழ்வு மனிதரால் ஏற்படுவது. மனிதர்களின் ஒத்துணர்வுதான் மகிழ்வைத் தருவது எப்போதும். சுற்றிவர நண்பர்களும், உறவினர்களும் இருப்பதும் அவர்களோடு உரையாடுவ தும், உறவாடுவதும் இன்பத்தின் அடிவேர்.

மறை உணர்வுகள் வருந்தான். அது இயல்பு. அவற்றை முற்றிலும் புறம்தள்ள வேண்டியதும் இல்லை. கொஞ்சம் செறிவைக் குறைத்துக்கொண்டால் சமாளிக்கலாம். அடிக்கடி ஆழ்ந்த சுவாசம் எடுக்க மறக்கக் கூடாது. காலையும் மாலையும் ஒழுங்காக மூச்சுப்பயிற்சி செய்து வந்தால் இலகுவில் உணர்வு நுண்மதியை அதிகரிக்கலாம்.

வளர்ச்சி என்பது இருபத்தொரு வயதுடன் முடிந்து போவது என்று நாங்கள் நினைக்கிறோம். அது உடல் வளர்ச்சி. உள்ளுறுப்புகளின் வளர்ச்சி. அறிவு வளர்ச்சி, அறிகை வளர்ச்சி, உணர்வு நுண்மதி வளர்ச்சி போன்ற விடயங்கள் வாழ்நாள் பூராவும் நடப்பது .அவற்றிலே எப்போதும் அக்கறை கொள்ளவேண்டும் . எங்களுக்கு ஒரு எதிரி இருக்கிறார் என்று வைப்போம்.அவர் எங்களை எப்படிப்பார்ப்பார் என்று இடையிடை கற்பனை பண்ணிப் பார்க்கலாம். எமது எந்த ஆளுமைக்கூறின் மீது அவருக் குப் பயம் இருக்கும்? அவரது எந்தக்கொள்கைக்கும் எமது கொள்கைக்கும் இடையில் வேறுபாடு உண்டு? வாழ்வு முறையில் நாம் எப்படி வேறுபடுகிறோம்? எது அவருக்குப் பிடிக்கவில்லை? இவற்றில் எதையாவது நாம் கொஞ்சம் மாற்றிக்கொள்ள வேண்டுமா, மாற்ற முடியுமா ?அப்படிச் செய்யமுடியுமாயின் எமது ஆளுமை எப்படி மாறும் ?அவரது அதிகாரத்திற்கு நாம் அச்சுறுத்த லாக இருப்பதாக அவர் நினைக்கிறாரா? நாம் எமது விழுமியங்களைக் கைவிடாமல் எப்படி மாறினால் அவருக்கு எம்மால் வரும் அச்சுறுத்தல் குறைய வாய்ப் பிருக்கிறது? போன்ற வினாக்களை மனதில் எழுப்பி விடை காண்பது எமது உணர்வு நுண்மதியை அதிகரிக்கும் ஒரு சிறந்த வழியாக இருக்கும்.

இன்று வாழ்வில் ஒரு பிரச்சினை வந்திருக்கும். சிறிதாக இருக்கலாம். பெரிதாக இருக்கலாம். அதை எப்படியோ ஒரு வழியில் சிலவேளை தீர்த்திருப்போம். அப்படிச் செய்திருந்தால், ஒரு பிரச்சினையை அல்லது ஒரு உணர்வை இன்று எவ்வாறு கையாண்டோம் என்பதை ஒழுங்காக டயறியில் குறித்துக்கொள்வது நன்று. அந்தப் பதிவு பின்னொரு காலத்தில் உதவும்.

ஒவ்வொருவருடைய ஆளுமைகளும் வெவ்வேறா னவைதான். ஆயினும் எங்கள் வாழ்வுப்பயணத்தில் எங் களைத் தூண்டிக்கொண்டிருக்கிற காரணி ஒன்றிருக் கும். அல்லது பல இருக்கும். அது ஆளுக்காள் வெவ்வே றாக இருக்கலாம். ஆயினும் அது என்ன என்று தெரியுமா? இல்லையெனில் அதை அவதானித்துக் கொள்ள வேண்டும். அதை அல்லது அவற்றைப் பாவித்து முதுமையின் முடிவுவரை பயணத்தை நகர்த்தவேண்டும்.

சிலர் செய்த சில விடயங்கள் அல்லது பலர் செய்த பல விடயங்கள் எம்மைப்பாதித்திருக்கலாம். எம்மைப் புண்படுத்தியிருக்கலாம். அது கடந்தகாலம். எப்போதும் அதை மனதில் காவி என்ன செய்யப் போகிறோம்? தனியாக வந்தோம். தனியாகத்தான் போகப்போகிறோம், முடிந்தவரை சொந்தக்காலில் நின்றுகொள்வோம். மற்றவர்கள் செய்தவற்றைக் காலப் போக்கில் மறந்து மன்னித்துவிட்டு, அவர்களைவிட்டுக் கொஞ்சம் விலகிக்கொள்ளலாம். உணர்வு நுண்மதி சிறப்பாக இருப்பவர்களிடம் "பழிவாங்கல்" என்பது மருந்துக்கும் காணப்படுவதில்லை.

எம்மைச் சுற்றி நாள்தோறும் பல தூண்டல்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்துகொண்டே இருக்கும். புலன் அங்கங்கள், எண்ணங்கள். உணர்வுகள் தூண்டப்படுவது இயற்கை தான். ஆயினும் அதற்கான தூண்டற்பேறுகளைக் காட்டுவதற்கு நாம் ஒன்றும் அவசரப் படவேண்டிய தில்லை. எந்த ஒரு விடயத்திற்கும் எதிர்வினை ஆற்று வதற்கு முன் சிறிது யோசிப்பது, சிறிது தாமதிப்பது நல்லது. சிலவேளை சில நாள்என்ன பலநாள் கூட யோசிக்கலாம். ஊகங்களை உண்மை என்று நம்புவ தற்கு நீண்ட காலம் எடுக்காததன் விளைவைத் தனது ஒதெல்லோ நாடகத்தில் அற்புதமாகக் காட்டுவார் ஷேக்ஸ்பியர்.

உணர்வுகளைத் தூண்டும் விடயங்களும் ஆளுக்காள் வேறுபடலாம். எமது கடுமையான மறை உணர்வுகளை-குறிப்பாகப் பயம் கோபம் போன்றவற்றை -தூண்டும் விடயங்கள் எவை என்பதையும் நாம் அவதானித்து வைத்திருத்தல் வேண்டும். சில நாய்கள் வெடியோசை கேட்டால் வீட்டை விட்டு வெகு தூரம் விலகி ஓடிவிடும். சில நாய்கள் கவனித்தபடி படுத்திருக்கும். நாய்களுக்கு யாரும் வெடியோசைபற்றிக் கற்றுத் தந்திருக்கமாட்டார்கள். எமக்கும் அப்படி வித்தி யாசங்கள் இருக்கும். இருப்பதில் தவறில்லை. அதைக் கவனித்து ஏற்றுக்கொள்ளவேண்டும். "நான் எதுக்கும் பயப்பிடமாட்டன்" என்று வீரம் பேசுவதை விட இது உணர்வு நுண்மதியை வளர்க்கச் சிறந்தவழி. விடயம் என்னவென்று தெரிந்தால் பிறகு மெல்ல மெல்ல அதற்குள் நுழைந்து, பயம் வரும்போது அகன்று, எம்மைத்தளரச் செய்து, திரும்பவும் அதற்குள் போய் - என்று படிப்படியாக எமது பயத்தைக் குறைக்கமுடியும். ஏற்றுக் கொள்ளா விட்டால் ஒன்றுமே செய்ய முடியாது.

வாழ்வில் பல விடயங்கள் நடக்கும். "இப்படி ஒன்று நடந்தால் நான் எப்படி உணர்வேன்?" என்பது பற்றி மற்றவர்களுடன்-நண்பர்களுடன், உறவினர் களுடன் - கலந்துரையாட வேண்டும். அது ஒரு முன்னாயத்தமாக இருக்கும். நெருக்கீடுகளுக்கு முகம் கொடுப்பதில் அது பெருமளவு உதவும்.

எங்கள் உள்ளுணர்வை நாங்கள் நம்பவேண்டும் .உள்ளுணர்வு உருவாவதில் நாளாந்த அவதானங்களும் முன் அனுபவங்களும் பங்குபெறுவதால் அது பல சமயங்களில் அர்த்தமுள்ளதாக இருக்கும்.

நாளாந்தம் எமக்கு வரும் எண்ணங்களில் கணிசமானவை திரும்பித்திரும்பி வருபவை .குறிப்பிட்ட ஒழுங்கில் திரும்பி வரும் மறை உணர்வு எண்ணச் சுழலை உடைக்கவேண்டும். நாங்கள் முயலாமல் இருந்தால் அவை திரும்பத்திரும்ப வரத்தான் பார்க்கும். அவற்றை வரவிடாமல் தடுக்கவேண்டும் என்று கடுமை யாக முயன்றால் அவை தொடர்ந்து வரும் .அவற்றைத் தடுப்பதற்கான வழி வேறு எண்ணங்களை –நேரான எண்ணங்களை – மனதுக்குள் நிரப்புதலே ஆகும் .நல்ல அறக் காரியங்களைச் செய்யத்தொடங்கினால் அவை பற்றி நினைக்கவேண்டி வரும். மற்றவர்களுக்கு நேர்மை யான வழியில் உதவத் தொடங்கினால் அவைபற்றி நினைக்கவேண்டி வரும். இவை ஒன்றும் முடியா விட்டால் இறை நாமங்களைப் பாராயணம் பண்ணுவது சுலபமான வழி. ஒரு விடயத்தை வாயினால் சொல்லும் போது அதை நினைக்காமல் சொல்ல முடியாது. ஆகவே நல்ல விடயங்களைச் சொல்வது எப்போதும் நல்லது.

வாழ்வில் எப்போதுமே ஒரு ஒழுங்கில் விடயங் களைப் பின்பற்றுவது நல்லது. ஒரு நாளில், ஒரு வாரத்தில், ஒரு மாதத்தில், ஒரு வருடத்தில் என்ன செய்யப் போகிறோம் என்று சிந்தித்து ஒரு ஒழுங்கை வரித்துக்கொண்டால் அதை ஓரளவுக்கேனும் பின்பற்றி வரலாம். உணர்வு நுண்மதி விருத்திக்கும் ஆரோக்கிய மான உணவுக்கும் தொடர்பு இருக்கிறதா? இருக்கிறது. பால், யோகட், பலவகைத் தானியங்கள், வித்துக்கள், சோயா அவரை, முட்டை, ஒமேகா 3 கொண்ட உணவுகள், அவரை இனக் காய்கறிகள் ஆகியவற்றில் "செரடோனின்" என்ற மகிழ்வை ஏற்படுத்தும் நரம்பிணைப்புப்பதார்த்தத்தை உருவாக்குவதற்குத் தேவையான மூலப்பொருள்கள் உள்ளன .ஆகவே அவற்றை ஒழுங்காக அருந்துவதோடு இளங்காலைப் பொழுதில் மெல்லிய சூரிய ஒளி படுமாறு நடத்தல் ,எதோ ஒரு வகைத் தியானத்தில் காலையும் மாலையும் ஈடுபடுதல், உடல் பயிற்சி தரக்கூடிய மாதிரியான வாழ்க்கை முறைக்குப் பழகிக்கொள்ளுதல் ஆகிய வற்றையும் செய்துவரும்போது உணர்வு நுண்மதி அதிகரிக்காமல் தப்பிக்கொள்ள முடியாது.

ஒருவரைப் பற்றிக் கதைக்கப் படுவதைவிட மோச மான விடயம் உலகில் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அது என்னவெனில் அவரைபற்றிக் கதைக்கப்படாமலே விடப்படுவதுதான் என்பர் ஒஸ்கார் வைல்ட். மனிதர்கள் எல்லோரும் தாம் பேசப்பட வேண்டும் என்று விரும்பு கிறார்கள். அதற்கு என்ன செய்வது? ஒருவருக்கு வாழ்வில் ஒரு துறையிலாவது ஆர்வம் இருக்கவேண்டும். சரி. ஒன்றுக்கு மேற்பட்ட துறைகளில் ஆர்வம் கொள்ளுதல் உணர்வு நுண்மதியை உயர்த்தும். லியனாடோ டாவின்சி ஒரு விஞ்ஞானி . அதே சமயம் மிகச் சிறந்த ஓவியர். பிறையன் மே ஒரு வான் பௌதிகவியலாளர். அதேசமயம் கிற்றார் வாசிப்பதிலும் வல்லுநர். இவ்வாறு பல உதாரணங்கள் கூறலாம் .ஆகவே எமது ஆர்வங்களை அதிகரிப்போம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, நாங்கள் நடந்து கொள்ளும் முறை, பேசும் முறை, உணர்வை வெளிப்படுத்தும் முறை எல்லாமே எங்கள் தெரிவுகள் தானே. அவை ஒவ்வொன்றும் எமது உணர்வு நுண்மதி யில் தாக்கம் செலுத்தும்தானே. நாங்கள் பொய் சொல்லிக் கொண்டு மற்றவர்கள் எமக்கு எப்போதும் உண்மை சொல்லவேண்டும் என எதிர்பார்க்கமுடியாது .நாங்கள் யாரையும் நம்பாமல் எம்மை எல்லோரும் நம்பவேண்டும் என எதிர்பார்க்கமுடியாது. மற்றவர் சொத்தில் நாங்கள் கள வெடுத்துக்கொண்டு எம்மிடம் உள்ளவற்றைப் பாதுகாக்க முடியாது . ஆகவே உணர்வு நுண்மதி நிறைந்த வாழ்வென்பது ஒரு குறிப்பிட் ட வகைச் சித்திரம் போன்றது .கொஞ்சம் கொஞ்சமாகக் கீறித் தான் பார்ப்போமே!

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காடுலாவு காதை பாகம் 2
## நாவல் தொடர்




*34*

பெண்விடுதலை என்பது மண்விடுதலையுடன் பின்னிப்பிணைந்துள்ளது. மண் விடுதலை அடையும் போது பெண்களும் விடுதலை அடைவார்கள். என்பதாக பேசப்பட்டது. ஆனால் லெச்சிமிக்கென்னவோ அது சரியாகப்படவில்லை. பெண்கள் ஆயுதமேந்திப் போரிட்டாலும், படைகளை வழிநடத்தினாலும், பெண்கள் போரில் கணிசமான பங்கை வகித்திருந்தாலும் அவர்கள் ஆண்போராளிகளின் ஆணைக்குள்தான் இருந்தார்கள். அது வெளிப்படையாக இல்லாமல் உள் நடவடிக்கையாக தெரிந்தது.

பொதுவாக நிதி. வழங்கல், கூட்ட ஒழுங்குகள், பண்ணைகள், என எல்லாவற்றிலும் அந்த மேலாதிக்கம் தெரிந்தது. பொதுவாக ஒரு பொறுப்பாளரின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டே வந்தது. அவர்களை அவர்களின் கீழுள்ள போராளிகளே காட்டிக் கொடுப்பதுண்டு. இது பொதுவாக இயக்கத்தில் "தகடு வைப்பது" என சொல்லப்பட்டது ஒருவரது பதவி குறைக்கப்பட்டால் அல்லது வேறு மாற்றத்துக்குள்ளானால் அதை "காத்திறக்கியாச்சு" என்று குறிப்பிடுவார்கள். இன்னும் பல சொலவடைகள் பிழக்கத்தில் இருந்தன. இப்போது சுருதி பதவியேற்றம் பெற முன்னிருந்த பொறுப்பாளரின் காதல் காரணமாயிற்று. அவள் தன் காதலனுடன் சேர்ந்து தமது காதலை கல்யாணக்குழுவுக்கு அறிவித்திருந்தாள். எனவே அவளை வேறு பிரிவுக்கு நியமனம் செய்ததுடன், அவர்களுக்கு திருமணமும் நடந்தது காரணம் அந்த பெண் முப்பது வயதை எட்டியிருந்தாள். எனவே விரைவாக திருமணம் நடாத்தப்பட்டது.

சுருதி உடனடியாகவே முகாமின் வரவேற்பறையை மாற்றம் செய்து முற்றத்திலிருந்த பூச்சாடிகளையும் வேறு வேறிடங்களுக்கு மாற்றி, பிரதேச வலயமட்ட பொறுப்பிலிருந்த போராளிகளையும் மாற்றி புதிய தனக்கு அணைவான போராளிகளை நியமித்து வைத்தாள். வவுனியா மன்னார் முல்லைத்தீவு போன்ற பிரதேசங்கள் வரை இந்த மாற்றம் நிகழ்ந்தது. பல அனுபவமுள்ள போராளிகள் வேறு பிரிவுகளுக்கு மாற்றம் பெற்றனர். இப்போது பயிற்சி முடித்து வந்த போராளிகளில் முன்னர் நிதிப்பொறுப்பிலிருந்த, மாணவர்கள் பொறுப்பில் இருந்த, கலைப்பிரிவில் இருந்த திறமையான போராளிகளை திரும்ப அரசியற்றுறைக்கு தரவில்லை. அவர்கள் படையணியில் இணைக்கப்பட்டனர். லெச்சிமியுடன் வந்தது ஆக முப்பது போராளிகளே. அவர்களை பிரித்து வெளி மாவட்டங்களுக்கு அனுப்பினார்கள். லெச்சிமிக்கு தனிக் கொட்டில் தரப்பட்டது. வேலை தரப்படவில்லை. எனவே அவள் நூலகத்துக்கு சென்று புத்தகங்களை எடுத்துவந்து வாசிக்க ஆரம்பித்தாள். இப்போது அவளால் ஆங்கில நாவல்களையும் வாசிக்க முடிந்தது.

திடீரென ஒருநாள் அது பத்தாம்மாதம் முதலாம்திகதி. சுருதி லெச்சிமியிடம் வந்திருந்து பேசிக் கொண்டிருந்தாள். லெச்சிமி தான் படித்த புத்தகங்களைப்பற்றி சுருதிக்கு சொல்லிக் கொண்டிருந்தாள். யாழ் மாவட்ட மகளிர் அரசியற்றுறை பதில் பொறுப்பிலிருந்த போராளி கிளிமொழி வந்தாள். "அக்கா பிரச்சாரம் தொடங்கப் போறாங்களாம். எனக்கு இன்னும் கட்டவுட் வேலை முடியேல்ல. பத்தாந்திகதி திறக்க வேணும். ஆனா டொமினிக்கண்ணைக்கு எங்கட சார்பில் பேசிறதுக்கு என்னைப் போட்டிருக்கு. ஒரு ரெண்டு நாளைக்கு ஆரையும் மாறி விடுங்கக்கா அங்கால நான் வந்திருவன்" என்று மூச்சு விடாமல் பேசி முடித்தாள்.

அது ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று மூன்று. பத்தாம் மாதம் மாலதி வீரச்சாவடைந்த அந்த கோப்பாய் பாலத்து வீதியில் அவள் சாவடைந்த இடத்தில் அவளுக்கொரு நினைவாலயம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த வேலையைத்தான் கட்டவுட் என்றாள். இயக்கம் புதிதாக ஒரு தாக்குதலுக்கு முடிவெடுத்தால் அந்த சமரில் எத்தனை போராளிகளை இழக்க வேண்டி ஏற்படும் என்பதை கணித்து, அத்தனை புதிய போராளிகளை இணைத்த பின்பே போரைத் தொடங்குவது வழக்கம். இப்போது பிரச்சார வேலைகள் ஆரம்பமாகப் போகிறது என்றால், எங்கோ ஒரு இராணுவ முகாம் இலக்கு வைக்கப்பட்டுள்ளது. அது எது என்பது தலைமை மட்டுமே அறிந்த ரகசியம். சுருதி யோசித்தாள். "ஆரையடி நான் அனுப்ப?" என்று யோசித்தவள். சட்டென்று "லெச்சிமியக்கா போறீங்களே ரெண்டு நாளைக்கு சமாளியுங்கோ அங்கால் கிளி வந்திருவா?" என்று கெஞ்சுவது போல கேட்டாள்.

கிளி சட்டென்று "பேசுவீங்களே அன்ரி" என்றாள் சந்தேகமாக.

"எடி அவாவைத்தெரியாது உனக்கு அவா பேசுவா" என்றாள்.

அக்கா அப்ப இப்ப அனுப்புங்க யாழ்மாவட்ட செயலகத்தில் கூட்டமாம். குழுவில உள்ளவைக்கு... அனுப்புங்க" என்றாள்.

"ஆர், பிள்ள நிலா இஞ்ச வாரும். அக்காவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் புதிசு. கொண்டே செந்தமிழன்ர முகாமில விட்டிட்டு கூட்டம் முடிய கூட்டிவாரும்" என்றாள் சுருதி.

யாழ் மாவட்ட செயலக முன்னரங்க விறாந்தையில் மேலும் பலர் இருந்தனர். அப்போதுதான் மட்டக்களப்பிலிருந்து துடைத்து அள்ளி வரப்பட்ட போராளிகளின் அணியிலிருந்து அம்பாறை மாவட்ட மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் விதுசன் இந்தக்குழுவில் இடம்பெற்றிருந்தான். நிர்வாக சேவைக்கென படித்துக் கொண்டிருந்த பிள்ளைகள் இந்தக்குழுவில் இருந்தனர். விதுசன் லெச்சிமியைப் போலவே ஊருக்குப் புதிசு. லெச்சிமியும் நிலாவும் அந்த விறாந்தைக்குள் நுழைந்த போது நிலா சொன்னாள். "அன்ரி ரெண்டு நாளைக்கு நிப்பா அங்கால அக்கா வாறாவாம்" என்று. சட்டென திரும்பிப் பார்த்த டொமினிக் "கிளிய வரச் சொன்னா இந்தக்கிழவிய அனுப்பியிருக்கு இதைவச்சுக் கொண்டு நானென்ன செய்யிறது" என்றான். நிலா தடுமாறினாள் அக்கா ரெண்டுநாளில வந்திருவா" என்றாள் பயந்தவாறே. டொமினிக் எதுவும் பேசவில்லை. குழுவினருக்கு எப்படி மக்களுடன் பேசவேண்டும் என்னென்ன கருத்துகளை சொல்லலாம், என்பதையும் எப்படியாவது இந்த ஒருமாத பிரச்சாரத்திற்குள் இந்த யாழ்மாவட்டத்தை அசைத்து பிள்ளைகளை சேர்க்க வேண்டும். யாழ் வட்டம் மிக உயர்குடிமக்களைக் கொண்டது. இங்கிருந்து போராட்டத்தில் இணைபவர்கள் குறைவு. அதனால் பிரித்த போது ஏனைய குழுவினர் யாழ்ப்பாணம் வேண்டாம் என்று கூறிவிட்டனர். கோண்டாவில் மாணவர் அமைப்பு இப்படி ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு வட்டம் கொடுக்கப்பட்டது சங்கானை நீதித்துறை, நல்லூர் புலிகளின் குரல், சுன்னாகம் பொருண்மியம் தமிழர் புனர்வாழ்வு ஒரு பகுதி என பிரித்து விட்ட போது இந்த பிரிவினரின் வேலைகள் மட்டுப்படுத்தப்பட்டு ஊழியர்கள் உட்பட அனைவரும் பிரச்சாரத்திற்கு இறக்கி விடப்பட்டனர். ஒரு மாதம். நிகழ்ந்த இந்த பிரச்சாரத்தில் முதலாம் நாள் அவளது பேச்சை மறைந்து நின்று கேட்ட டொமினிக்,.. இனி எனக்கு கிளி வேண்டாம் என்று கூறிவிட்டார் அதனால் லெச்சிமி பிரச்சார மேடைகளில் பேசியதுடன் நினைவுக்கும் எட்டாத இயக்கத்தின் முக்கிய பொறுப்பாளர்களை சந்திக்கவும், அவர்களுடன் பழகவும் ஒரு சந்தர்ப்பத்தை பெற்றுக் கொண்டாள்.

இப்போதுதான் அவளுக்கு யார் யாரிடம் எதையெதைக் கேட்கலாம், என்பது தெரிய வந்தது. இவ்வளவு நாளும் இலக்கில்லாமல் யார் யாரையோ தேடி தனது மகனைப்பற்றி அறிய முற்பட்டதை நினைத்து வருந்தினாள். அவள் விசாரிக்க வேண்டிய அந்த துறை பிரச்சாரத்தில் இல்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் தனிக்காட்டு ராஜாக்களாகவும் வலம் வந்தனர். அவர்களையிட்டு ஏனைய துறையை சேர்ந்தவர்கள் அச்சத்துடனேயே நடமாடினர். பிரச்சார நடவடிக்கைகள் முடிவடைந்து ஊர் சகஜ நிலைக்கு திரும்பியிருந்தது. அவள் இப்போது பழையபடிக்கு வேலையெதுவும் வழங்கப்படாமலே இருந்தாள். அதனால் புத்தகங்களும் வாசிக்கும் போராளிகள் சிலரும் அவளுடைய நட்பு வட்டமாகியது. இப்போது ஆர்த்தி என்ற ஆரம்பகாலப் போராளி அவளுக்"கு தரமான ஆங்கில புத்தகங்களை அறிமுகம் செய்தாள். சில உலகப் புகழ்பெற்ற நாவல்களை தமிழாக்கமாகவும் நேரடியாக ஆங்கிலத்திலும் படித்தாள் அவள் வழமைபோல எழுதிக் கொண்டுமிருந்தாள். எனினும் அவளுடைய எழுத்துக்கள் வழமைபோல உரப்பையொன்றை வதிவிடமாக கொண்டிருந்தன.

மாவீரர் சாம்பவிக்கு புத்தக வாசிப்பு மிகவும் பிடித்த விடயம் என்பதைவிட படித்தவற்றை கலந்துரையாடலுக்குள் கொண்டு வந்து பேசுவதும் மிகவும் பிடிக்கும். சொல்லப்போனால் அந்த முகாமில் ஓரிருவரைத்தவிர மற்றவர்கள் வாசிப்பவர்களே. எனவே படித்த புத்தகங்கள் பற்றிய விவாதங்களை அடிக்கடி செய்வார்கள். இதைவிட யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இலக்கிய விழாக்களுக்கும் லெச்சிமியை சாம்பவி அழைத்துச் செல்வாள். வரும்போதும், வந்த பின்னும் அங்கு நடந்த உரைகள் மீதான விவாதம் நடக்கும். ஆனால் குளங்கள் பற்றிய ஒரு பேச்சு வந்த போது. வன்னியின் குளங்களையும் அதன்அழகு பயன்பாடுகள் என்பவை பற்றியும் பெருமையாக பேசிய லெச்சிமியுடன் புதிதாக வலிகாமம் பொறுப்பில் விடப்பட்ட சந்திரிகாவும்.( இவள் பின்னாளில் தமிழினி என பெயரை மாற்றிக் கொண்டாள்) இணைந்து கொண்டாள். சாம்பவி மயூரி இருவருக்கும் அசாத்திய கோபம். "நீங்கள் சங்கரத்தை குளத்தை பாக்கேல்ல அது பெரீய்ய குளம். வாங்க ஒருநாளைக்கு காட்டுறன்" என்றாள் மயூரி. "அப்பிடியா இங்கை குளங்கள் கிடையாது எல்லாம் குட்டைதான்" என்றாள் சந்திரிகா. அவள் தனது பிரதேசம் முழுதும் பயணித்திருந்தாள். மறுநாளிலிருந்து லெச்சிமியும் மயூரியுடன் ஏரியாக்களை வலம்வர புறப்பட்டாள். ஊரைப்படிக்க வேணும் அதற்குத்தான்.

அவள் நினைத்தது போலல்லாமல் இங்கும் காடுகள் இருந்தன. பல வருடங்களாக பயன்படுத்தாத பனம் விதைகளும் இப்பிலிப்பில் மரங்களும் இலந்தை மரங்களும் அடர்ந்து கிடந்த எல்லைகளின் அப்பால் இராணுவம் நிலைகொண்டிருந்தது. உள்ளே பெரும் செலவில் கட்டப்பட்ட கல்வீடுகள் புதையுண்டிருப்பதாக சொன்னார்கள் பண்ணாகம் தெல்லிப்பழையின் ஒருபகுதி, மயிலிட்டி காங்கேசன்துறைக்கரை, இன்னும் பெயர்தெரியாத பல கிராமங்களை தவற விட்டிருந்தார்கள் அந்தப்பிரதேசத்தை சேர்ந்த வசதியற்றோர் மானிப்பாயின் புறநகர்பகுதிகளில் அகதிகளாக வாழ்ந்தார்கள். பணவசதி உள்ளவர்கள் நாட்டைவிட்டே போயிருந்தார்கள். புகழ்பூத்த நாட்டுப்பற்றாளர்கள் என நாம் அறிந்திருந்தவர்கள் யாரையும் இப்போது காணவில்லை. இந்தக்காடுகளிலும் வனவிலங்குகள் வாழ்ந்தன. என்பதை நாய்களை அழைத்துக் கொண்டு முயல் பிடிக்கச்செல்லும் மக்கள் தெரிவித்தனர்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பிஐயா கலாமணி அரங்கு திறப்பு விழாவும், பா.இரகுவரனின் "காத்தவராயர் வழிபாடு - காத்தவராயன் நாடகம் நூல் வெளியீடும் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் "காத்தவராயன் சிந்து நடைக்கூத்து" நாடகமும் அல்வாய் வரசித்தி விநாயகர் உடனுறை காத்தவராயர் தேவஸ்தான "தம்பிஐயா கலாமணி அரங்கில்" 2025.7.01 அன்று க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. அரங்கினை திருமதி குயின்ஜெசிலி கலாமணி அவர்கள் நாடா வெட்டி திறந்து வைத்தார். அரங்கத் திறப்புரையை கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அ. பௌநந்தி நிகழ்த்தினார். பா. இரகுவரனின் நூலுக்கான வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் க.திலகநாதன் நிகழ்த்தினார். கருத்துரைகளை யாழ்பல்கலைக்கழக விரிவுரையாளர்களான கலாநிதி தி.செல்வமனோகரன், இ.இராஜேஸ்கண்ணன் ஆகியோர் வழங்கினார்கள். ஏற்புரையை திரு பா.இரகுவரன் நிகழ்த்தினார். தொடர்ந்து யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தின் "காத்தவராயன் சிந்துநடைக்கூத்து" இரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது. அரங்கு நிறைந்த பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக மூன்று நிகழ்வுகளும் நடைபெற்றன.



பருவ வெளியீட்டுப்பகுதி
பொது நூலகம்
யாழ்ப்பாணம்








## நான் வேறு வேறு நிலா!

ஆழ்நிலை தியானத்தில்
அதன் விம்பத்தை
உருவேற்றிக் கொள்கிறேன்
எனக்குள்
அது எதுவோ அதை!

நானறிய
இல்லாமலாவதன்
சாத்தியத்திலிருந்துதான்
தன்னை எழுகிறது அது

ஆயினும்
அது வேறாக என்னுள் படர்கையில்
நான் பூமிக்குள்ளிருந்து கிளர்ந்து
வானமாகிறேன்

பின் பெருந்துயரும்
மகிழ்வுமெனக்கு

தேய்தல் வளர்தலல்ல
என் இயல்பு

வேறாதல்

அஃதழிதல்
இன்னொன்றாதல்
இன்னொன்று
இன்னொன்று என

ஒற்றை நிலா போதும்
ஒரு கற்றைக் காலமெழுத

முப்பது நாளும் வேறு வேறு நிலா
ஒரே நிலா

நீயும் நானும் நிலா!

- கந்தையா கணேஷமூர்த்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி வெளியீடுகள்




அருண்மொழிவர்மன்
கட்டுரைகள்
400.00




ரஞ்ஜனி சுப்ரமணியம்
சிறுகதைகள்
700.00




அருண்மொழிவர்மன்
கட்டுரைகள்
400.00




அ.யேசுராசா
பத்தி
500.00




கணபதி சர்வானந்தா
கதைகள்
600.00




வேதா. இலங்காதிலகம்
கவிதை
800.00

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாமணி பரணீதரன் அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org